10678

# பெரிய எழுத்து

# தேசிங்குராஜன் கதை

## ஜீகப்படங்களுடன்

விலை அணா 12

S. N. PRESS., G. T. MADRAS

கிடைக்குமிடம்:— K. A. மதுரை முதலியார்,
ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன் மதராஸ்-1.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

புகழேந்திப்புலவரவர்கள் இயற்றிய

பெரிய எழுத்து

# தேசிங்குராஜன் கதை



ஆ—கன்னையநாயுடு அவர்களது

சாரதா நிலயம் அச்சுக்கூடம்

சென்னை

இதன்விலை] 1951 0 1c 0

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்



# தேசிங்குராஜன் கதை

## காப்பு

### விநாயகர் தோத்திரம்

மேதினி யரச ரெல்லாம் வியப்புடன் புகழ்வ தாக
நீதியு நெறியுஞ் செங்கோல் நிலைமையுந் தரும முற்ற
தீதிலா தென்றுங் காக்கும் தேங்கு ராஜ னற்சீர்க்
கதையை யெடுத் துரைக்கக் கணபதி காப்புத் தானே.

### முருகர் தோத்திரம்

ஜெயங்கொள் தேசிங்குராஜன் சீர்கதை யதனைச்சொல்ல
வயங்கொண்டுமா மயிலேறி வருந்திரு முருகர் தூய
நயங்கொள் பாதத்தையுந்தா னாகியமரர்கள் சீரார்
வியங்கொள்பா தத்தையுந்தான் விரும்பிவ ணங்குவாம்.

### சிவஸ்தோத்திரம்

தஞ்சமென் றோரைக்காக்கும் தயாளதே சிங்குராஜன்
எஞ்சலில் கதையைச்சொல்ல வெந்தையாஞ்சு ந்தரேசர்
செஞ்சர ணத்தையுந்தன் தேவிபார்வதி யாள்பாதம்
கொஞ்சுமா வடிவையுங்கை கூப்பியேவணங்கு வோமே.

### விஷ்ணு தோத்திரம்

சங்குசக்கரங்கோதண்டந் தண்டுவாள் கரத்திற்கொண்ட
செங்கண்மால் பதமுஞ்சீரார் திருவின்பொற் பாத நாளும்

பொங்கமா யிறைஞ்சியுன்னிப் புகழுந்தே சிங்ராஜன்
துங்கமாங்கதையைச் சீராய்ச் சொல்வோம்பு வியிஞேர்க்[கே

சரஸ்வதி தோத்திரம்

பலகலைகளுணர்ந்தேற்றிப் போற்றுகின்ற
பாவாணர்க்குதவிசெய்து பாதுகாக்கும்
நிலைமையுடன்தவள நிற முடையார்வாசல்
திகழும்சரஸ்வதியைத் தாளிறைஞ்சி
அலையெரியுங்கடல்சூழும் புவியோர்மெச்சும்
அங்கதனைக்கண்டச்சங்கொள் ளழகுறைந்த
நிலையிலாமணிமுடித் தேசிங்குராஜன்
வியன்றருசீர்ச்சரித்திரத்தை விளம்புவோமே.

அவையடக்கம்

முத்தமிழின்பயனுணர்ந்த புலவோர்முன்னே
மூடனடியேனுயேன் பிதற்றுகின்ற
பத்திமிகுந்தெழிற்செங்கோல் செலுத்துகின்ற
பராக்கிரமமதிவீர ராமனென்றே
எத்திசையும்புகழும் தேசிங்குராஜன்
எழிற்கதையிற்சொற்குற்றம் பொருட்குற்றத்தான்
மெத்தவிருப்பினும் குதலைச்சொல்லைப்போலே
வியங்கொள்வார்பாராட்டி நயங்கொள்வாரே.

நாட்டுச் சிறப்பு

சீருஞ்சிறப்புமுள்ள தேசிங்குமகாராஜன்
பெரும்பிரபலமும் பெருகிவரும்படியாய்
செந்நெற்கதிர்பெருத்துச் செழித்துவளர்கிறதும்
கன்னற்கொழுத்துக் காட்டைமறைப்பதுவும்
வன்புலியும்பசுவும் மருகியேவாழ்கிறதும்
காண்டகவுதாரி காட்டுபுறாக்கூவுறதும்
பேடைமயில்கூடி பிரியமடைகிறதும்
புன்னைபலாச்சோலை பொருந்தி நிறைந்திடவும்
சந்தனச்சோலைகளும் சாதிமல்லிபூத்திடவும்
மந்தாரைகோங்கு மல்லிகைப்பூச்சாலைகளும்
தாமரைப்பொய்கைகளும் தடாகமுள்ளஏரிகளும்
வாமமுறும்காணுறும் வம்புகழுமென்னசொல்வேன்
செஞ்சிநகர்சீறைச் சிலவற்றையெடுத்துரைப்போம்
எஞ்சலில்லாவீதிகளுமெழிற்றோரண நிறையும்

வாழைக்கமுகங்களெங்கும் வளமாகக்கட்டியதும்
ஏழயரைக்கூவியன்னம் இட்டுவருகிறதும்
இந்திரலோகம்போ லிருக்குமரண்மனையும்
கந்தமின்னார்களிரு கற்பின் திறமைகளும்
வேதியர்கள்கூடி வேதம்படிப்பதுவும்
நீதிதவறுவல் நிகர்புலவோர்பாடுவதும்
பொன்னகரின்தன்னைப்போற் பொருந்திநின்றுடுவதும்
மன்னன்சீர்கீர்த்திதன்னை வாழ்த்திவருகிறதும்

## கதையின் வரலாறு

வடக்கேவெகுதூரமிருக்குதுபாரு மகமேருசாரலொன்று
மகமேருசாரலில்தவம்செய்கிறார் வர்னலட்சம்ரிஷிகள்
கர்த்தனேநோக்கிதவம்செய்கிறார் கனத்தமகாரிஷிகள்
சிவசிவாவென்றசத்தமங்கே தெய்வலோகங்கேட்கும்
அரகராவென்றசத்தமங்கே ஆகாயமட்டுமெட்டும் [ம்
கோவிந்தாவென்றசத்தமுமங்கே கொடிமுடிதான்கேட்கு
மாயவாவென்றசத்தமுமங்கே வைகுந்தந்தான்கேட்கும்
துலுக்கனொருவன்கர்த்தனேநோக்கிதேடிதவஞ்செய்தான்
பகவானேநோக்கிதுலுக்கனொருவன்பாரதவஞ்செய்தான்
மந்திரவித்தைதந்திரவித்தை மகாவித்தைதானறிவான்
இந்தப்படியாய்ரிஷிகளெல்லாம் யிருந்துதவஞ்செய்தார்

## குதிரையின் பெருமை

தெய்வலோகத்தில்பிறந்தகுதிரை திகைதப்பிவருகுதுபார்
இரங்கர்கிருபையால்திகைத்தகுதிரை நடனமாடுதுபார்
உச்சிமலைகளில்புல்லுகள்மேய்ந்து ஒதுங்கிவருகுதுபார்
சாரலோரமாய்புல்லுகள்மேய்ந்து சாய்ந்துவருகுதுபார்
கோடிசூரியனுதித்தாப்போலே குலுங்கிவருகுதுபார்
தங்கமயமானகுதிரைகண்டான் தவஞ்செய்யுந்துலுக்கன்
குதிரையைக்கண்டுஓடிவருகிறான் கொங்குதேசதுலுக்கன்
துலுக்கனேகண்டுகர்ச்சனைசெய்தது தெய்வலோககுதிரை
அஞ்சனம்போட்டு குதிரைவலிமை அறிந்துகொண்டா
மந்திரவலையைவீசிப்போட்டு மடக்கிபிடித்தானும் [ளுன்
தந்திரவலையைவீசிப்போட்டு தடவிப்பிடித்தானும்
மந்திரத்தால்குதிரைப்பாகரை வரிசையாய்வைத்தானும்
நாலாயிரங்குதிரைப்பாகரை நடுவாகவைத்தானும்
குதிரைமேலேகூடாரம்போட்டு கொண்டுமேவாரானும்

ஐந்துநாழிகைதூரமிருந்து அதட்டியேவாராளும்
தூரத்திலிருந்துகுதிரைப்பாகரும் சூழ்ந்துமேவாராராம்
தகத்தகாயமாய்நடுவிலிருந்து தாண்டுதுமுன்னாலே
மந்திரவலையிலகப்பட்டகுதிரை வருகுதுமுன்னாலே
தந்திரத்தாலேமாயாபகிரிமடக்கிகொண்டுவாரான்[தான்
டில்லிக்குவெகுமதிகொடுப்போமென்றுசேரகொண்டுவந்
வெகுமதிசெய்யபாராசாரியை வெளியில்கொண்டுவந்தா
வெளியில்நிறுத்திபகிரியவனும்வேலையென்னசெய்தான்
குதிரைசுற்றிகூடாரம்போட்டு கொடியகாவல்வைத்தான்
யானைசங்கிலிபோட்டுமடக்கினனந்தக்குதிரையைத்தான்
மந்திரவலையையவிழ்த்துவிட்டான் மாயாபக்கிரியும்
மயக்கந்தெளிந்துகண்ணாலேகண்டதுவர்னமேககுதிரை
அண்டமிடிந்துவிழுந்தாற்போல யலறிகனைத்ததுபார்
கோட்டையிடிந்து விழுந்தாற் போலகுலுங்க கனைக்குது
டில்லிபட்டணங்காதவழியும் சேரநடுங்குதுபார் [பார்
கூடகோபுரம்மாடமண்டபம் குலுங்கிநடுங்குதுபார்
பட்டணமுள்ளஜனங்களெல்லாம் பதறிவிழுந்தார்கள்
பாட்சாதகத்துநடுங்கியவனும் பதறிவிழுந்தானும்
மூணரைநாழிமூர்ச்சையாயினர் முழுதும்ராஜாக்கள்[னர்
பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாம் பதறிமூர்ச்சையா
டில்லிபதுரைமூர்ச்சைதெளிந்துசிதைந்துவிழுந்தானும்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
இதுஎன்னவதிசயமென்னவதியம் ராஜலிங்கபாபு
அண்டமிடிந்துவிழுந்ததோசொல்லும் ராஜலிங்கபாபு
ஏழுலோகமுங்கூடிவந்தோ ராஜலிங்கபாபு
சலுதியிலோடிசுற்றிப்பாரும் ராஜலிங்கபாபு
ஆனால்நல்லதாகட்டுமென்றான் ராஜலிங்கபாபு
ஒற்றைக்குதிரைக்காரனையா ராஜலிங்கபாபு
ஓடியேசுற்றிப்பார்த்தானையா ராஜலிங்கபாபு
வடக்குதிசையில்மின்னுதுபாரு வர்னமேகப்புரவி
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் கோங்குபக்கிரியு
எதிரில்வந்துசலாஞ்செய்தா ரிருந்தபாலகரும் [ம்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராஜலிங்கபாபு
சலாம்செய்துகுதிரையைக்கண்டான் ராஜலிங்கபாபு
குதிரையைக்கண்டுபெருமூச்செறிந்தான் ராஜலிங்கபாபு
ஐயாகேளுமையாளும் கோங்குபக்கிரியே

எந்ததேசத்திலிருந்தகுதிரை யிங்கேகொண்டுவந்தீர்
தெரியவெனக்குநீர்சொல்லும் தேசத்துபக்கிரியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் கோங்குபக்கிரியும்
ஐயாகேளுமையாகேளும் ராசலிங்கபாபு
இந்தவுலகத்தில்பிறந்ததல்ல யிந்தப்புரவியுந்தான்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டது குதிரையாலும்
கோபம்வந்துமூண்டுக்கொண்டது குதிரைக்காலும்
கடகடகடகடகடகடவென்று கனைத்துநின்றதுவே
தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை சொர்னமேகக்குதிரை
பன்னிரண்டுவயது ஆச்சுதுபாரு பாராசாரிகுதிரை
வெள்ளிக்கிழமையிற்பிறந்தகுதிரை வேகமானகுதிரை
ஒருவருமண்டக்கூடாதுபாரு வுயர்தமேகக்குதிரை
இந்தவுலகத்திலொருவருமில்லை யிந்தக்குதிரையேற
மனதுதுணிந்துஏறினாலும் மாண்டுபோய்விடுவார்
தைரியங்கொண்டுஏறினாலும் சிதைந்துபோய்விடுவார்
தெய்வவரத்தினாற்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
வரத்தினாலேபிறந்தபிள்ளை வந்துயேறவேணும்
பூமிபாரந்தீர்க்கவந்தவன் இப்புரவியேறவேணும்
தேவரடியிற்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
அந்தச்சொல்லைக்கேட்டவுடனே அலறிவிழுந்தார்கள்
டில்லிபதுரைக்குயினுங்கொடுக்க தேடிவந்தேனென்றான்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜலிங்கபாபு
கேட்டவுடனேமனதுகலங்கி கீழேவிழுந்தானும் [ம்
விழுந்தவுடனேதைரியங்கொண்டுமெள்ளவெழுந்தானு
எழுந்தவுடனேராஜதுரைக்கு எழுதியேவிட்டானும்
ஓலையைக்கொண்டுகையிலேகொடுத்தார் ஓடிவந்ததூதர்
ஓலையைபிரித்து வாசித்துப்பார்த்தான் டில்லிபதுரைதா
கலகலவென்றுசிரித்தானேயா டில்லிபதுரைதானும் [னு
அண்ணாவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
தெய்வலோகத்துப்புரவியொன்று தேடியேவந்ததாம்
குதிரையேறி சவாரிசெய்துநான் கொண்டுபோகவேணு
சல்திசல்திகுதிரைகொண்டுவா அர்க்காருபாப்பையா [ம்
பட்டத்துயானைகொண்டுவாடா அர்க்காருபாப்பையா
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
சலாம்வாங்கிதிரும்பினானேயா அர்க்காருபாப்பையன்
தண்டுக்குசைகையூதினானேயா அர்க்காருபாப்பையன்

பட்டத்துயானைவந்துநின்றது ராஜன்முன்னாலே
யனைமேலேறினானையா டில்லிபதுரைதானும்
முதல்மந்திரிராஜலிங்கனு முன்னேபோயிருந்தான்
பேட்டிக்குவந்தராஜதுரைகள் பின்னே நடந்தார்கள்
நாலாயிரந்துருப்புகுதிரை நடந்ததுமுன்னாலே
காலால்சேனையாயிரம்பேர் கடுகநடந்திடவே
திமிதிமிதிமிதிமிதிமிதிமியென்று சேனை நடந்திடவே
சேனைவருவதைக்கண்ணாலேகண்டது தெய்வலோகக்கு
கிடுகிடுகிடுகிடுவென்று கெர்ச்சனைசெய்ததுவே [திரை
கெர்ச்சனைசெய்தசப்தத்தினாலேகீழேவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல அலறிவிழுந்தார்கள்
ஆனைசேனைகுதிரைகளெல்லாம் அங்கேவிழுந்திடவே
டில்லிபதுரையானைமீதில் திடுக்கிட்டுவிழுந்தானும்
சுற்றிலுமிருந்தராஜதுரைகள் துள்ளிவிழுந்தாராம்[பார்
மூலைக்குமூலைதுருப்புகுதிரை முறித்துக்கொண்டோடுது
அவ்வதிசயத்தைகண்ணாலேகண்டான்டில்லிபதுரைதா
அண்ணாவாடாதம்பிவாடா ராசலிங்கபாபு [னும்
வந்ததொருமந்திரிமாரும் நடுங்கியோடிவந்தார்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
இதுயென்னவதிசயமென்னவதிசயம் ராஜலிங்கபாபு
இத்தனைநாளும்இந்தக்குதிரையைஎங்கும்பார்த்ததில்லை
டில்லிபதுரையைகண்ணாலேகண்டான் தேசபக்கிரியும்
முழங்கால்சிலைபோட்டவனும்முன்னேசலாஞ்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா டில்லிபதுரைதானும் [ர்
சுற்றிலுமிருந்த ராஜதுரைகள் சூழ்ந்தேசலாஞ் செய்தா
பேட்டிக்குவந்தராஜதுரைகள் பெரியசலாஞ்செய்தான்
ஐயாகேளும்ஐயாகேளும் கோங்குபக்கிரியே [ன்
தெய்வலோகத்தில்பிறந்தகுதிரை தேடிகொண்டுவந்தே
இனங்கொடுக்ககொண்டுவந்தேனிந்தப்புரவியைத்தான்
இந்தப்புரவியேறுகிறராஜர் யிந்தவுலகிலில்லை [தான்
இதற்கென்றுபிள்ளைபிறக்கப்போகிறு னிந்தவுலகினிலே
அந்தமட்டுக்கும்பாராசாரியை யடக்கிவையுமையா

கோங்குபக்கிரி டில்லிபாட்சாவுக்கு குதிரையைக்
கொடுத்து வெகுமதிபெற்றுக்கொண்டது

அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
சந்தோஷமாகிபக்கிரியவனைத் தழுவிக்கொண்டானும்



என் னுடன்கூடடில்லியில் நீயு மிருந்துபோகவேணும்
விருந்துபுசித்துயினுங்கொடுப்பதை வேண்டிப்போகுமை
ஆனால் நல்லதாகட்டுமென்று ன ந்தபக்கிரியும் [யா
அண்ணாவாடாதம்பிவாட ராசலிங்கபாபு
குதிரைகொட்டடிகொண்டுபோய்வையும் ராஜலிங்கபாபு
கொள்ளுபுல்லுதண்ணீர் கூசாமல்வையும்ராசலிங்கபாபு
அந்தப்படிக்குத்தாரங்கொடுத்தான் டில்லிபதுரைதானு
ஆனால் நல்லதாகட்டுமென்றான் ராஜலிங்கபாபு [ம்
அண்ணாவாடாதம்பிவாடா அர்க்காருசின்னையா
ஜல்திஜல்திதயார்செய்யடா அர்காருசின்னையா
ஆனால் நல்லதாகட்டுமென்றான் அர்க்காருசின்னையன்
கோடிபாகரைகூப்பிட்டழைத்தா னர்க்காருசின்னையன்
குதிரைகொட்டடிகொண்டுபோனா னர்க்காருசின்னையன்
கோடிபாகரைகொலுவாகவைத்தா னர்க்காருசின்னையன்
சுற்றிலுந்துருப்புசிப்பாய்வைத்தா னர்க்காருசின்னையன்
பந்தோபஸ்தாயிருக்குதுபாரு பாராசாரிகுதிரை
டில்லிபதுரையும்பக்கிரியவனை தேடிக்கொண்டுவந்து
விருந்துசெய்துசந்தோஷமாகமெச்சியென்னசெய்தான்
ஊர்பதிகள் நாடுகளெல்லாம் உறுதியாய்க்கொடுத்தான்
வேண்டியமட்டுந்திரவியங்கொடுத்துவேண்டிகொண்டா
தங்கமயமானசால்வைஒன்றுதலைக்குகொடுத்தானும் [னும்
அந்தவெகுமதிபெற்றுக்கொண்டான் அந்தபக்கிரியும்
அந்த நாளும்சென்றுமறு நாள் ஆச்சுதுஐயாவே
தகத்திலிருந்தேயரசு தனிமைசெய்கிறானும் [ம்
பொன்னின்தகத்திலிருந்தரசுபொறுமையாய்செய்கிறானு
தகத்திலிருந்துயோசனைசெய்தான்டில்லிபதுரைதானும்
அண்ணாவாடாதம்பிவாட மந்திரிதுரைமாரே
இந்தப்புரவியேறுகிறராஜன் இந்தவுலகிலுண்டோ
இந்தப்பாராசாரியேறுகிறராஜன் பத்துதிக்கிலுண்டோ
இந்தப்புரவியேறுகிறராசனைப் புகழ்ந்துகாணவேணும்
யோசனைசெய்துதெரியச்சொல்லும் என்னுடனேபாபு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்
எல்லாருங்கூடியோசனைசெய்தா ரந்தசபையிலேதான்
முதல்மந்திரி ராசலிங்கனு முன்னேவோடிவந்தான்
முழங்கால்மண்டிபோட்டவனும் முன்னேசலாம்செய்தா
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையே நீர் [ன்

ஐம்பத்தாறுதேசராசரை யறிந்துசொல்லுகிறேன்கேள்
எட்டுத்திசையிலுள்ளராஜர் இதற்குதவமாட்டார்
கோடிராஜரிருக்கிருரையா குதிரையேறமாட்டார்
தெரிந்தமட்டும்சொல்கிறேன்கேள் டில்லிபதுரையே நீ
தெற்கேவெகுதூரமிருக்குது செஞ்சிகோட்டைதுருகம்
செஞ்சிதுருகத்திலரசுபண்ணுகிருன் சூரசிங்குராஜன்
சூரசிங்குகுமாரனையா தரணிசிங்குராஜன்
தேரணிராஜன்தம்பியையா தரணிசிங்குராஜன் [த்தான்
அண்ணனுந் தம்பியுமாளுகிருரையா செஞ்சிகோட்டை
சேதமில்லாமலாளுகிருர் செஞ்சிகோட்டையைத்தான்
அவருக்குமிஞ்சியொருவருமில்லை அந்தக்குதிரையேற
பத்துதிக்கிலுமொருவருமில்லை பாராசாரியேற
செஞ்சிராஜரைஅழைத்தீராஞல் தேசியேறிடுவார்
புருஷசிங்கத்தையழைத்தீராஞல் புரவியேறிடுவார்

**டில்லிபாட்சா ஓலையெழுதி தேரணிமகாராஜனை யழைத்தது**

அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானு
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும் [ம்
நீயேவாடா நீயேவாடா கணக்கப்பிள்ளைவாரும்
ஆயிரங்கணக்கப்பிள்ளைக்குபெரியகணக்கப்பிள்ளைவாரும்
செஞ்சிகோட்டைக்குஓலையெழுது கணக்கப்பிள்ளைவாரு
ஆனல் நல்லதாகட்டுமென்றுன் ரங்கப்பிள்ளைதானும்[ம்
சலாமையாசலாமையா தேரணிமகாராஜா
டில்லிபதுரையும்ஓலையெழுதுகிருன் தேரணிராஜருக்கு
உன்னிடபேட்டிகாணவேணும் உயர்ந்தசெஞ்சிராஜா
தேசத்துராஜர்பேட்டிக்குவந்தார் தரிசனஞ்செய்தோமே
உன்னிடபேட்டிஒருநாளுங்காணேன் உத்தமராஜவே
என்மீதில்தயவுயிருக்குமேயாஞல் யிங்குவரவேணும்
அந்தப்படியேஎழுதிமுடித்தார் அந்தஓலையிலே
அண்ணுவாடாதம்பிவாடா அர்க்காருபாப்பையா
ஓலையைக்கொண்டு செஞ்சிக்குபோடா அர்க்காருபாப்பை
செஞ்சிசேதிதெரிந்துவாடா அர்க்காருபாப்பையா [யா
இருபதுநாளில்சேதிசொல்லடா எந்தனுக்காஞலும்
ஆனல் நல்லதாகட்டுமென்றுன் அர்க்காருபாப்பையன்
அங்கிருந்துவெளிப்பட்டானையா அர்க்காருபாப்பையன்
தபால்மார்க்கமாய்தனியேபோருன் அர்க்காருபாப்பைய

பத்துநாளில்செஞ்சிசேர்ந்தான் அர்க்காருபாப்பையன்
புதுசெஞ்சியில்தபசுபண்ணுகிறன் தேரணியகாராஜன்
அரசுமுகத்தில்வந்துநின்றன் அர்க்காருபாப்பையன்
முழங்கால்மண்டிபோட்டவனும்முன்னேசலாம்செய்தா
பதில்சலாமுங்கொடுத்தானையா தேரணிமகாராஜன் [ன்
ஓலையைக்கையில்கொடுத்தான் அர்க்காருபாப்பையன்
ஓலைமுகத்தைகண்ணாலேபார்த்தான் தேரணிராஜன்
வந்ததுதரைவரிசையாய்ப்பார்த்தான் தேரணிராஜன்
எங்கிருந்துஇங்குவந்திர் எனக்குச்சொல்லுமையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் அர்க்காருபாப்பைய
தம்பிவடாதம்பிவாடா தரணிசிங்குராஜா [ன்
டில்லியிலிருந்துசேதிவந்தது தரணிசிங்குராஜா
ஓலையைப்பிரித்துசேதிசொல்லும் தரணிசிங்குராஜா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தரணிசிங்குராஜன்
ஓலையைபிரித்துவாசித்துபார்த்தான் தரணிசிங்குராஜன்
டில்லிசேதியைதெரியச்சொன்னன் தரணிசிங்குராஜன்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தேரணிமகாராஜன்
கலகலவென்றுசிரித்தானையா தேரணிமகாராஜன்
அண்ணவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
ஆயிரங்குதிரைத்தபால்வையடா மந்திரிதுரைமாரே
அண்ணடஞ்சேதியடிக்கடியெழுதும்மந்திரிதுரைமாரே
என்னிடசேதியெழுதியனுப்புகிறேன் எந்தன்மந்திரிமா
அந்தபேச்சைகாதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்
ஆனால்நல்லதாகட்டுமென்றர் அந்தமந்திரிமாரும்

**தேரணிமகாராஜன் மனைவியிடத்திற்குப்போய்**
**விடைபெற்றுக்கோள்ளுதல்**

அரசுகடந்துஅரண்மனேபோனர் அண்ணனுந்தம்பியு
இராணிவசத்தில்நடந்தாரையா நல்லதுரைமார்கள் [ம்
தேரணிராஜன்பெண்சாதியையா தெய்வராம்பாயி
பத்துமாதம்கர்ப்பமையா பத்மராம்பாயி
பூரணகர்ப்பமானவளையா புண்ணியராம்பாயி
புருஷனைக்கண்டுபூசைபண்ணினள் புண்ணியராம்பாயி
பெண்சாதிமுகத்தைகண்ணாலேகண்டான் தேரணிமகா
மனதுகலங்கிஎதிரிலேநின்றன் வந்தமகாராஜன் [ராஜ
பெண்ணேகேளும்பெண்ணேகேளும்புண்ணியராம்பாயி
நான்போய்வாறே நான்போய்வாறேன் புண்யராம்பாயி

டில்லியிலிருந்துசேதிவந்தது தெய்வராம்பாயி
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் அந்தராம்பாயி
இன்ருே நாளேயோகர்ப்பமென்றுயிருக்குதுஎன்துரையே
என்னைவிட்டு நீரெப்படிபோறீர் என்பிராண நாதா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தேரணிமகாராஜன்
பெண்சாதிமுகத்தைப்பார்த்தான் தேரணிமகாராஜன்
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்யராம்பாயி
சனுதியிலென்னைவரவேயெழுதினுன் தகத்துமகாராஜன்
சீக்கிரம்யென்னைவரவேயெழுதினுன் டில்லிமகாராஜன்
போகாதேபோனல்பிழைகள்வருமே புண்ணியராம்பாயி
மூன்றுமாதத்திலேவந்துசேருகிறேன் முத்துராம்பாயி
ஒன்றுக்குமஞ்சவேண்டாம்பெண்ணே வுத்தமராம்பாயி
தோழியும்நீயும்சுகமாயிருங்கள் கொகுசுராம்பாயி
பாங்கியும்நீயும்பதனமாயிருங்கள் பத்மராம்பாயி [பாயி
நான்போனவுடனேஓலையெழுதுகிறேன் பொன்னுராம்
இவ்விடஞ்சேதியெனக்குத்தெரியநீயெழுதும்பெண்மயி
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் அந்தராம்பாயி[லே
போய்விட்டுவாரும்போய்விட்டுவாரும் புருஷசிங்கமே

**தேரணிமகாராஜன் டில்லிபட்டணம் வந்து**
**டில்லிபதுரையைக் கண்டது**

ஆனால்நல்லதாகட்டுமென்று அப்புறம்தானடந்தார்
செஞ்சியைவிட்டுபுறப்பட்டானையா தேரணிமகாராஜா
அண்ணனுந்தம்பியுங்கூடநடந்தார் அந்ததேசம்விட்டு
தபால்மார்க்கமாய்வாராரையா தம்பியுமண்ணனுமாய்[கு
அதற்குமுன்னமேயெழுதிவிட்டார் அந்தந்ததேசத்திற்
தேசத்தரசர்கள்வரவேயெழுதினுன் டில்லிபதுரைதானு
ஐம்பத்தாறுதேசராசாக்கள் அடங்கலும்வந்தார்கள் [ம்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் சூழவேவந்தார்கள்
டில்லிபட்டணமுழுதிலும்ராசர் சூழவிருந்தார்கள்
கொலுநிறைந்துஇருந்தாரையாசெஞ்சிதுரைமார்கள்
டில்லியைத்தேடிவாரான்ரையா கோடிதுரைமார்கள்
வரிசையாகவேடில்லிபட்டணம் வந்துபுகுந்தார்கள்
டில்லிதகத்தின்முன்னேவந்தார் தேரணிமகாராசன்
முழங்கால்மண்டிபோட்டே முன்னேசலாம்வாங்கினுன்
பதில்சலாமுங்கொடுத்தானையா டில்லிபதுரைதானும்
வந்தராசனைகண்ணுலேகண்டு வாரும்வாருமென்ருர்

சிம்மாசனத்திலிருமென்ருனே டில்லிமகாராசன்
சிம்மாசனத்திலுட்கார்ந்தாரையா டில்லிமகாராசன்
அந்நாழிகைக்குயோசித்தானும் டில்லிமகாராசன்
அண்ணமாரேதம்பிமாரே ராசதுரைமாரே
நாளுருபேச்சுசொல்கிறேன்கேளும் ராசதுரைமாரே
உலகத்திலில்லாதகுதிரை யென்னண்டைதிகைதப்பிவந்
ஐம்பத்தாறுதேசராசர்க ளடங்கலும்வந்தார்கள் [தது
குதிரைசவாரிசெய்யவேண்டும் கோடிதுரைமாரே
புரவியுமக்குஇனுங்கொடுக்கிறேன் புண்ணியதுரைமாரே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் அந்தத்துரைமார்கள்
ஆனல்நல்லதாகட்டுமென்று அனைவரும்தாமெழுந்தார்
தோரணிராசாயேறுகிறேனென்று திடுக்கென்றெழுந்தார்
ஏறுகிறேமென்றுதைரியமாக எல்லோருமெழுந்தார்
சந்தோஷமாகயெழுந்தராசரை தைரியமாகப்பார்த்தார்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
இன்னொருபேச்சுசொல்கிறேன்கேளும் என்துரைமாரே
புரவியைகண்டுபயபட்டீரானல்பிடித்துக்கொள்வேனன்
தேசியைகண்டுபயப்பட்டீரானல் சிறையில்போடுவேன்
இந்தப்படிசம்மதியிருந்தால் எல்லோரும்வாருமென்ருர்
ஆனல்நல்லதாகட்டுமென்று அனைவருந்தாமெழுந்தார்
சந்தோஷமாகவெளியேவந்தார் சகலதேசத்தாரும்
சிம்மாதனம்விட்டுகீழேகுதித்தான் டில்லிமகாராசன்
முதல்மந்திரிராசலிங்கனு முன்னேநடந்தானும்
மற்றமந்திரிதந்திரிகளும் கூடநடந்தாராம்
குதிரைகொட்டடிவந்துநின்ருர் கோடிதுரைமார்கள்
குதிரையைச்சுற்றிபார்த்தாரையா கோடிதுரைமார்கள்
வந்தராசரைக்கண்லேகண்டது வர்ணமேகக்குதிரை
பார்த்தராசரைக்கண்ணலேகண்டது பாராசாரிகுதிரை
கடகடகடகடகடகடவென்று கனைத்துகுதித்ததுபார்[ள்
குதிரைகனைத்தசத்தத்தினல் கொப்பென்று விழுந்தார்க
அண்டமிடிந்துவிழுந்தாற்போல் அலறிவிழுந்தார்கள்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போல் குப்புறவிழுந்தாரா
முன்னேயிருந்தராஜதுரைகள் மிரண்டுவிழுந்தார்கள்[ம்
பின்னேயிருந்தராஜதுரைகள் புரண்டுவிழுந்தார்கள்
தேரணிராஜன்கண்ணலேகண்டு திகைத்திருந்தானும்
தரணிசிங்குகுதிரையைக்கண்டு தலையைக்குனிந்தானும்

குதிரையைக்கண்டு பெருமூச்செரிந்தார் கோடி துரைகளு
தலையைக்குனிந்துயெதிரிலே நின்றார்சகலதேசத்தாரும்
எதிரிலே நின்றராஜதுரைகளை யேறிட்டுப்பார்த்தானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
குதிரையைக்கண்டுவிழுந்தசேதி கூவிச்சொல்லுமையா
அந்தவார்த்தைகாதிலேகேட்டா ரந்ததுரைமார்கள்
ஐயாகேளுமையாகேளும் தேசத்துராஜாவே
ஊரிலிருக்குங்குதிரையென்று வோடிவந்தோமையா
தேசத்திலிருக்குங்குதிரையென்று தேடிவந்தோமையா
தெய்வலோகத்துபாராசாரிமேல்தேவர்களேறவேணும்
இந்தலோகத்துராஜரேறினால் இறந்துபோய்விடுவார்
தப்பித்தவறியேறினானால் சிதைந்துபோய்விடுவார்
குதிரையைப்பார்த்தால்குடல்நடுங்குது டில்லிமகாராசா
தேசியைப்பார்த்தால் திக்குமுக்காடுதுடில்லிமகாராஜா
பாராசாரியைப்பார்த்தவுடனே பலமுமொடுங்குதுபார்
என்னஆக்கினைசெய்தாலு நாங்க ளேறமாட்டோமையா
உயிருடன் நாங்கள்தப்பிப்பிழைக்க உத்தாரந்தாருமையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் டில்லிமகாராஜன்

இராஜாக்கள் குதிரை ஏறுததினால் சிறையிலடைத்தல்

நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் கோடி துரைமாரே
ஐந்துவருஷமென்னண்டைநீரு மடிமைசெய்யவேணு
ஏழரைவருடமென்னண்டைநீரு மிருந்துபோகவேணு
அந்தப்பேச்சையழித்தீரானால் அரசுக்கினமையா [ம்
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவருஞ்சம்மதித்தார்
டில்லியில்நடந்தசேதியெல்லாம் தெரியவெழுதினார்கள்
அந்தந்ததேசவலைவந்ததை அறிந்துமேகொண்டார்கள்

தேசிங்குராஜன் பிறந்தது

செஞ்சியில்நடந்தசேதியெல்லாம்தெரியச்சொல்கிறேன்
தேரணிராஜன்போனஏழாநாள் செல்வன்பிறந்தான்
பட்டணத்தில்பிள்ளைபிறந்தசேதியைபலருமறிந்தார்கள்
பிள்ளைபிறந்துசெஞ்சி நகரம் புகழ்ச்சியடைந்தார்கள்
மைந்தன்பிறந்துமந்திரிமாரும் மகிழ்ச்சியடைந்தார்கள்
குழந்தைபிறந்தநாளிலக்கணம் குறிப்பையறிந்தார்கள்
குறிப்பறிந்துசந்தோஷமானார் கொலுவுமந்திரிமாரும்
சந்தோஷமாகதானங்கொடுத்தார் சகலதேசத்தார்க்கும்
வண்டியில்சர்க்கரைவழங்கினார் வந்ததேசத்தார்க்கு

ஊர்பதிகள்பிராமணருக்கு உறுதியாய்த்தான்கொடுத்தார்
நல்லநாள்கொண்டுதொட்டிலிட்டார்ராஜாவுக்காளுலும்
தேசிங்குபாலனென்றுசொல்லி திருஷ்டிகழித்தாராம்
தேசிங்குபிறந்தயிருபது நாளில் சேதிவந்ததுபார்
சங்கதியைக்கண்டுதிகைத்தழுகிருள் தெய்வராம்பாயி
மந்திரிமாருஞ்செஞ்சிஜனமும் மனதுகலங்குகிருர்கள்
அலண்டுபுரண்டுஅலறிவிழுந்தார்கள் அந்தராம்பாயி
குழந்தைமுகத்தைக்காணுமல் நீர்கொடியதேசம்போனீர்
மைந்தன்முகத்தைக்கண்டு நீரும் மகிழ்ச்சியடையாமல்
டில்லியில்சேர்ந்துசிறையிலகப்பட்டீர் தேசிகனேசுவாமி
ரங்கர்கிருபையிப்படியிருந்தால் நானென்செய்வேனையா
ஆனுல்நல்லதாகட்டுமென்று அம்மனுமேதுசெய்தாள்
மைந்தன்பிறந்தசேதியெல்லாந் தெரியவேதானெழுதி
ஓலையெழுதியனுப்பினளையா உத்தமியம்மாளும்
தோணிராஜனைதேடியுமங்கே சேதிவந்ததுபார்
சேதியைக்கேட்டுதிகைத்து நின்ருரே தோணிமகாராஜா
ஓலையைக்கண்டுஒதுங்கி நின்ருரே தோணிமகாராஜா
இரங்கரைநோக்கிவிசனமடைந்தான் நல்லமகாராஜன்
ஆனுல்நல்லதாகட்டுமென்று அங்கேதானிருந்தார்
செஞ்சியிற்பிறந்ததேசிங்கு சேதிசொல்கிறேன்கேள்
பாலன்பிறந்தமூன்ருமாதம் பதைத்துவிழுந்தானும்
குழந்தைபிறந்தயேழாமாதம் குலுங்கிவிழுந்தானும்
தொட்டிலைவிட்டுக்கீழேயிறங்கி துள்ளிவிழுந்தானும் [ம்
தங்கத்தொட்டிலையெட்டியுதைத்துதரையில்விழுந்தானு
பத்தாமாதத்தவழ்ந்து நடந்தான் பலருமறியவேதான்
தாயின்மடியில்வந்துவிளையாடி தகப்பனெங்கேயென்பா
பள்ளிக்குப்போய்படிக்கஎடுக்க பாலனுமறிந்தானும் [ன்
கூடயிருக்குந்துரைகளோடு குதிரையேறிப்போவான்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கவடிப்பானும்
குதிரையேறிசவாரிசெய்து கோட்டைக்குவருவானும்
ரங்கரைக்கண்டுபூசைகள்செய்து நலமாய்வருவானும்
தாயண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுவானும்
தாயாரெடுத்துமடிமீதுவைத்து சாந்திகழிப்பாளாம்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேயூட்டுவாளாம்
கொஞ்சிகொஞ்சிசாப்பிடுவானையா குழந்தைதேசிங்கு [ம்
சாப்பிட்டிளைப்பாறிவெளியேவந்து சண்டைசெய்வானு

கூடப்படித்தமோவுத்துக்காரனை கூப்பிட்டழைப்பானும்
இருவருங்கூடிகுதிரையேறியே எங்குந்திரிவாராம்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கவடிப்பாராம்
புலிகரடிசிங்கத்தைக்கண்டால் புகுந்துவெட்டுவாராம்
வேட்டையாடிவெளிவந்து வெற்றி கொண்டோமென்
சங்கராபரணிகரையிலேவந்து தாண்டிகுதிப்பாராம்[பார்
ஒருவர்கொருவருயர்ந்தமேடையில்உதும்பியேகுதிப்பார்
மலைகளைதூக்கிஎறிகிறோமென்று வந்துமோதுவார்கள்
சையதுசாகிபைசலாம்செய்து தாண்டிவிழுவார்கள்
மண்டிகள்போட்டுமலைகளை தூக்கி வாரியடிப்பாராம்
மலைகளைஒங்கிகுத்தினால் மருந்துபுகைகிளம்பும்
செடிகளைஒங்கிகுத்தினால் சிதைந்துமுறிந்துபோம்
பத்துபனைமரமுயரங்கிளம்பி பல்டியடிப்பாராம்
மூச்சுபிடித்துகிளம்பிவிழுந்தார் மூன்றரை நாழிகை
ஆகாயமார்க்கமந்தர்பல்டி யடிக்துவிழுவாராம்
குன்றுகளேறிகுதித்தாரானால் குதிரைபள்ளமாகும்
பனைமரங்களை தூக்கியெடுத்து பந்துசெண்டாடுவார்கள்
தேறிதெளிந்தான் வித்தைகளாடி தேசிங்குமகிபாலன்
அந்தப்படியேஐந்துவருடம் ஆடித்திரிந்தானும்
ஆடியலண்டுகோட்டையில்வந்தான் அந்தப்பாலகனும்
தாயண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுவானும்
தாயெடுத்துமடியிலேவைத்து சாந்திகழிப்பாளாம் [ம்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னே ஊட்டுவாளா
சாப்பிட்டிளைப்பாறிதாயார் முகத்தைதனியே பார்ப்பானு
அம்மாகேளும்மம்மாகேளு மென்னைபெற்றதாயே [ம்
உன்னிடமனதில் என்னவிசனம் ஒளியாது சொல்லென்
ஊரிலிருக்கும்பிள்ளைகளுக்கு உதவிமெற்தவுண்டு [முன்
தாயுந்தகப்பனுமிருக்கிறாரம்மா தாயேபெற்றவளே
என் தாயாரிருக்களென் தகப்பன் எங்கேயென்றுகேட்டான்
ஜல்தினெனக்குத்தெரியச்சொல்லு தாயேபெற்றவளே[யும்
அந்தப்பேச்சை காதிலேகேட்டாள் அவனைப்பெற்றதா
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டாள்
உச்சிமுகந்துதிருஷ்டிகழித்தாள் உத்தமிபெற்றவளும்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
ஐம்பத்தாறுதேசராசர்க்கும் அதிபதிதுரைதானும்
டில்லியிலிருக்கும்பெரியபாஷா சேதியனுப்பினாராம்

சேதியறிந்துவுன்னிடதகப்பன் தேரணிமகாராஜன்
தம்பிதரணிசிங்குராஜனே தனியேயழைத்தாராம்
இருவருங்கூடிபோனூரையா எந்தன்கண்மணியே
போனயிடத்தில்புரவியொன்று புதிதாய்வந்துதாம்
தெய்வலோகத்துபுரவியேறவே சேதிகள்சொன்னூராம்
ஏறுவோமென்னுதைரியமாக எல்லோரும்வந்தாராம்
கண்ணுற்கண்டடில்லிபதுரையும் கடினமாய்ச்சொன்னூர்
ஏருமற்போனூலேழுவருஷம்யிடுவேன்சிறையிலென்ருர்
புரவியைப்பார்த்துபயப்பட்டீராகூல் போடுவேன்சிறை
ஆனூல்நல்லதாகட்டுமென்று அனைவரும்சொன்னூராம்
அந்தப்படியேசம்மதம்பண்ணி யனைவரும்போனூராம்
குதிரைசுற்றிபார்த்தவுடனே பதைத்துவிழுந்தாராம்
முன்னேயிருந்தராஜதுரைகள்மூர்ச்சையாய்விழுந்தாரா
பின்னேயிருந்தராஜதுரைகள் புரண்டுவிழுந்தாராம் [ம்
மூர்ச்சைதெளிந்தராஜதுரைகள் முன்னேஓடிவந்தார்
இந்தக்குதிரையேறினோமானூல் இறந்துபோய்விடுவோ
ஏழுவருஞ்சிறையிலிருந்து எங்களூருபோரேம் [ம்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானு
ஆனூல்நல்லதாகட்டுமென்று அருஞ்சிறைவைத்தானும்
ஐந்துவருஷம்சென்றதுபாரு அருமையானமகனே
இன்னமிரண்டுவருடஞ்சென்ருல் நிமிஷமிருக்கார்கள்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் அலறும்சிங்கம்போ
பல்லைபடபடவென்றுகடித்து பதறியெழுந்தானும் [ல்
கண்கள்நெருப்புபொறிகள்பறக்க கனைத்துஎழுந்தானும்
கோபத்தாலேநெருப்புபெறிகள் குப்பென்றெழுந்தது
தாயைச்சுற்றிவலமாகவந்து சரணங்கள்செய்தானும்
கும்பிட்டெழுந்துஎதிரில்நின்று கூசாமல்சொல்வான்
எனக்குநல்லவரந்தரவேணு மென்னைப்பெற்றதாயே
எட்டுநாளையில்இங்கேவாரே னென்னைப்பெற்றதாயே
சல்தியென்னையனுப்பிவிடவேணுந் தாயேபெற்றவளே
அனுப்புமென்றசேதிகேட்டு அலறிவிழுந்தாளாம் [ம்
இனியென்செய்வேன்கண்மணி என்றேங்கிவிழுந்தாளா
போகிறேனென்றசேதிகேட்டு பூமியில்விழுந்தாளாம்
மகனிடகோபமறிந்துமண்மேல்விழுந்தாளாம்[தாளாம்
கைகளைநெறித்து வயிற்றைபிசைந்துகண்ணீர் சொரிந்
பூமியில்விழுந்துமூர்ச்சையானூள் புண்ணியரம்பாயி

இங்கேயிருந்தாலனுப்பமாட்டாள் என்னைபெற்றதாயும்
பூமில்விழுந்ததாயைப்பார்த்து பின்னிட்டுநடந்தான்
சங்காபரணியில்ஸ்நானம்பண்ணி சல்தியோடிவந்து
இரங்கர்கோயில்புகுந்தானையா ராஜாதேசிங்கு
இரங்கரைசுற்றிவலமாகவந்தான் ராஜாதேசிங்கு
கும்பிட்டெழுந்துஎதிரில்நின்றான் குழந்தைதேசிங்கு
சவாரிசெய்யடில்லிபோறேன் சுவாமிரங்கநாதா
கூடவிருந்துசவாரிசெய்து கொண்டுதிருப்புமையா
உன்குழந்தைதானூருக்குப்போறேன் உடனேவாருமை
சல்திசல்திவாருமையா சுவாமிரங்கநாதா [யா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் ரங்கநாதசுவாமி
ஆனால்நல்லதாகட்டும்வாரேன் அருமைக்கண்மணியே
போய்விட்டுவாடாபோய்விட்டுவாடாபுத்தியுள்ளமகனே

தேசிங்குராசனும் மோவுத்துக்காரனும்
டில்லிபட்டணம் வந்தது

அந்தப்பேச்சைக்காதிலேகேட்டு அடிபணிந்தானும்
கும்பிட்டெழுந்துவெளியில்வந்தான் குழந்தைதேசிங்கு
அண்ணவாடாதம்பிவாடா மோவுத்துக்காரா நீ[ல்வான்
மோவுத்துக்காரனைகூப்பிட்டழைத்து முன்னமேதுசொ
தெய்வலோகத்துப்புரவியொன்று டில்லியிலிருக்குதாம்
பாராசாரிகுதிரையொன்று பக்கத்திலிருக்குதாம்
எணதுதகப்பன்தேரணிராஜன் அங்கேயிருக்கிராராம்
குதிரையேறிசவாரிசெய்து கொண்டுவரவேணும்
சல்திசல்திபுறப்படுமென்றான் மோவுத்துக்காரனே
ஆனால்நல்லதாகட்டுமென்று அதட்டியெழுந்தானும்
கொட்டடிசென்றுகுதிரையிரண்டு கொண்டுவந்தானும்
வழிச்சிலவுக்குவர்ணலட்சம்பொன்மடியில்வைத்தானும்
சல்தியாகவேகொண்டுநிறுத்தினான் தபால்குதிரைகளை
குதிரையைக்கண்டுசந்தோஷமானான் குழந்தைதேசிங்கு
அரிகரியென்றுதட்டியேறினா ரிருவருமப்போது
ஏறினவுடனேவெள்ளிக்குறடா எடுத்து அடித்தார்கள்
அடித்தவுடனேஐந்துநாள்பயணம் அதிரநடந்தது
பத்துநாளையில்வந்துசேர்ந்தார் பாலரிருவருந்தான்
டில்லிசேர்ந்துதெருவில்நடந்தார் தேசிங்குபாலகனும்
கோட்டைகொத்தளம்தாண்டிவாரான் குழந்தைதேசிங்
சிங்காரமாலிலேவந்துசேர்ந்தான்சிங்ககுட்டிபோலே[கு



அந்தவேளையிலென்னசெய்கிறான்டில்லிபதுரைதானும்
தங்கதகத்திலிருந்தேயரசு தனிமையாய்செய்கிறானும்
பொன்னின்தகத்திலிருந்தேயரசு பொறுமையாய்செய்கி
சுற்றிலுமிருந்தராசதுரைகள் சூழவிருந்தார்கள் [றானும்
நற்புத்தியுள்ளமந்திரிமாரும் நடுவேயிருந்தார்கள்
ஐம்பத்தாறுதேசராசரும் அருகிலிருந்தார்கள்
சிறையிலிருக்கும்ராசதுரைகள் சேரவிருந்தார்கள்
தேரணிராசன்தரணிசிங்குமே சேர்ந்திருந்தார்கள்
கொலுநிறைந்தராசதுரைகள்கொல்லென்றிருந்தார்கள்
அந்தசமயம்வந்துநின்றான் அலறுஞ்சிங்கம்போலே
பாலசூரியனுதித்தாப்போல பளிச்சென்றுசார்ந்தானும்
கோடிசூரியனுதித்தாப்போல குப்பென்றுசார்ந்தானும்
வானத்திலிருக்குஞ்சூரியனைப்போல்வந்துநுழைந்தானு
கோடிமான்கையில்வந்து கொலுவில்வந்தாப்போல் [ம்
நிறைந்தகொலுவிலிருக்கும் ராஜதுரைகள்எழுந்தாராம்
தகத்திலிருக்கும்டில்லிபதுரை தானுமெழுந்தானும்
எழுந்தராஜனைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு

**தேசிங்குராசனும் மோதுவுத்துக்காரனும் டில்லிபதுரையைக் கண்டது**

சலாமையாசலாமையா டில்லிபதுரையேகேள்
உன்தேசத்திலுயர்ந்தபுரவி யுன்னண்டையிருக்குதாம்
பாராசாரியைசவாரிசெய்ய பாலன்வந்தேனென்றான்
ஏறிசவாரிசெய்வதற்காக இங்கேவந்தேனென்றான் [ன்
புரவியேறிசவாரிசெய்து நான் போகவேணும் மென்றா
வானமிடிந்துவிழுந்தாப்போலமைந்தனும்சொன்னான்
அண்டமிடிந்துவிழுந்தாப்போல அவனும்சொல்லினா
சொன்னசொல்லைகாதில்கேட்டான்டில்லிபதுரையும்[ன்
சுற்றிலுமிருந்தராசதுரைகளை சுற்றியேபார்த்தானும்
சித்திரபதுமைபோலேயிருக்கிறார் தேசராசரெல்லாம்
ஒருவர்முகத்தைஒருவர்பார்த்தே ஒதுங்கியிருந்தார்கள் [ர்
டில்லிபதுரையைக்கண்ணாலேகண்டுசேதிசொல்லலுற்றா
எதிரிலிருக்கும்தேசிங்குபாலனை எறிட்டுப்பார்த்தானும்

**டில்லிபதுரை தேசிங்குராசனுடைய வளப்பத்தைக் கேட்டல்**

மன்மதன்போலழகுகுழந்தையை மண்மேற்பார்த்தானும்
ஐயாகேளுமையாகேளும் அறியாதபாலகனே

எந்ததேசத்திலிருந்து நீயும் தேடியேவந்தாயப்பா
உந்தன்ஊருபேருநாடு முன்தகப்பன்பேரும்
நலமாய்பெற்றதாயின்பேருஞ் சல்திசொல்லுமென்றான்
அவ்வார்த்தைகாதில்கேட்டான் யலறுஞ்சிங்கம்போல
சொல்கிறேன்கேள்சொல்கிறேன்கேள் டில்லிபதுரையே
தெற்கேவெகுதூரமிருக்குதுபாரு செஞ்சிகோட்டை
செஞ்சிக்கோட்டையாளும்ராஜன் தேரணிமகாராஜன்
தேரணிராஜன்குமாரன் நான்தான் தேசிங்குமகிபாலன்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே சிறையிலிருக்கிறாராம்
குதிரையேறவல்லுவில்லாமல் கொலுவிலிருக்கிறாராம்
குதிரையேறிசவாரிசெய்து நான் கொண்டுபோகவந்தே
சல்திசல்திகுதிரைகொண்டுவா டில்லிபதுரையேநீ [ன்
கொல்லுஞ்சிங்கக்குட்டியைப்போல் சீறியே நின்றானும்
அந்தசொல்லைக்காதிலேகேட்டான் டில்லிமகாராஜன்
தேரணிராஜன்காதிலேகேட்டு தேடியேவந்தானும்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே தேடியோடிவந்தார்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டார்
சந்தோஷமாகதழுவியெடுத்து சாந்திகழித்தாராம்
சேர்த்துதழுவிமகனையெடுத்து திருஷ்டிகழித்தாராம்
ஐம்பத்தாறுதேசராஜர்கள் அதிசயப்பட்டாராம்
டில்லிபதுரையுஞ்சந்தோஷமாக சேரஓடிவந்தார்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
என்மகனைக்கண்டுநானும் மகிழ்ச்சியடையாமல்
உந்தன்சொல்லைக்கேட்டுயானும் உள்ளமகிழ்ந்தேனே
பெற்றதாயுமுன்னைப்பிரிந்து பின்னுயிர்வைப்பாளோ
அரசனைக்கேட்டுசெஞ்சிக்குப் போவோம்கண்மணியே
மனுவுகேட்டுவருகிறேனப்பா வாருங்குழந்தை யென்று
அந்தப்பேச்சைகாதிலேகேட்டு அழகுபாலகனும் [ன்
கலகலவென் றுசிரித்தெழுந்தான்கதும்புஞ் சிங்கம்போல
ஐயாகேளுமையாகேளும் என்னைபெற்றராஜாவே
குதிரையைப்பார்த்துபயப்பட்டு நீங்கள்சிறையிருந்தீர்
பாராசாரியைப்பார்த்துபயந்து பாரசிறையிருந்தீர்
ஏறிசவாரிசெய்துநானுமே இட்டுபோகிறேன்பார்
குதிரையேறிசவாரிசெய்து கொண்டுபோவேனென்றான்
சற்றுநேரத்தில்சவாரிசெய்து சிறைமீட்டுப்போறேன்
போகாமற்போனாலுன்வயிற்றில் பிறந்ததென்னத்திற்கு

### தேசிங்குராஜன் குதிரையேறுதல்

அவ்வார்த்தைகாதிலேகேட்டு அலறிவிழுந்தாராம்
கனைத்துகதும்பிவெளியேவந்தான் காளைசிங்கம்போல
குதிரையிருக்குங்கொட்டடிதேடி குதித்தோடிவந்தான்
ஓடிவருகிறராஜரைக்கண்டு உதும்பியெழுந்ததுபா [பார்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போலேகுலுங்ககனைத்தது
நாற்றிசையிலுங்கலங்கியங்கே நடுக்கங்கொண்டதுபார்
ஐம்பத்தாறுதேசராஜாக்கள் அதிர்ந்துவிழுந்தார்கள்
குழந்தைகுழந்தையென்றுசொல்லி கூவியழுதார்கள்
டில்லிபதுரைதோணிராஜனும் திகைத்துவிழுந்தார்கள்
விழுந்தவுடனேகுழந்தையென்று தேடியேவாரார்கள்
கனைத்தகுதிரையைக்கண்டு கடுகஓடிவந்தான்
குதிரையைத்தட்டிசலாம்வாங்கினான் கொல்லுஞ்சிங்கம்
அண்ணாவாடாதம்பிவாடா மோவுத்துக்காரா நீ [போல
கால்கயிற்றைகழுத்துகயிற்றை கடுகயவிழுமென்றான்
அந்தசொல்லைக்காதிலேகேட்டான் மோவுத்துகாரனும்
சொன்னவுடனேசல்திபாய்ந்து சுருக்காயெழுந்தானும்
தங்கத்தாலேசீனிபோட்டு தடவிக்கொடுத்தானும்
அந்தகுதிரையைகண்ணால்கண்டு அகமுமகிழ்ந்தானும்
அரிபரந்தாமாவென்று அலறியெழுந்தானும்
கோவிந்தாஸ்ரீகிருஷ்ணாவென்று கும்பிட்டெழுந்தானும்
பாராசாரியைசலாம்வாங்கிப் பாய்ந்தேறினானும்
புலிக்குட்டிபோலபாய்தவனும் புரவியேறினானும்
ஏறினவுடனேபாராசாரி யென்னசெய்ததுபார்
தடதடவென்றுதவிக்குதுபார் அந்தக்குதிரைதானும்
கிடகிடவென்றுகிளம்பிகுதித்தது அந்தகுதிரைதானும்
லகானிழுத்துகையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
ஐயாகேளுமையாகேளு மென்னைப்பெற்றவரே
புரவியேறிசவாரிபோறேன் பெற்றவரேஐயா
தப்பித்தவறிவந்தேனானால் தழுவிக்கொள்ளுமையா
இன்றைக்குசாவு நாளைக்குசாவு இருக்குதுதலைமேலே
ஒன்றுக்குநீ அஞ்சவேண்டாம் உறுதிகொள்ளுவீரே
சொன்னசொல்லைகாதிலேகேட்டார் தேசராஜாக்கள்
ஐம்பத்தாறுதேசராசருமடங்கலுங்கேட்டார்கள்
மகனேயென்னசெய்வோமென்றுவயிற்றைப்பிசைந்தார்
போகாதேபோகாதேமகனே புரவிகொண்டுபோமே

இவ்வுலகத்தாபுரவியல்லவே எந்தன் கண்மணியே
உயிருடனுன்னைவிட்டுபிரிந்துவுலகத்திலிருப்போமோ
பிறந்தபோதேயிறந்துபோனால் பெரியதுக்கமில்லை
ஐந்துவருஷம்வளர்த்தமாதா அலைந்துமேபோவாள்
குதிரைவிட்டுகுதித்தவாடா குழந்தையென்மகனே
என்னுயிர்பூமியில்தரித்திருக்க யிறங்கிவாசுதனே
அம்மொழியைக்காதிலேகேட்டா னதிருபதேசிங்கு
கலகலவென்றாசிரித்தானையா கதும்புலிபோல
இங்கேயிருந்தாலென்னகவலை என்னவாகுமோதான்
கோவிந்தாகோவிந்தாவென குதிரையைதட்டிவிட்டார்
அரிஅரிஸ்ரீமுகுந்தாவென்று அசுவத்தைதட்டிவிட்டா
தட்டினதட்டில்குதிரைகிளம்பி தரையில்நில்லாமல் [ர்
ஆகாயமார்க்கமாய்வந்துபாயுது அந்தமேகக்குதிரை
சூரியன்போலே துலங்குதுபாரு சொர்ணமேகக்குதிரை
கண்டகண்டதூரம்பார்த்து ராஜாக்கள்கலங்கிநின்றார்
பாய்கிறகுதிரையை கண்ணாலேகண்டு பரதவித்திட்டார்க
மேகமண்டலமளாவிவருவதைப் பார்த்தான்தேசிங்கு[ள்
லகானையிழுத்துசிமிட்டாகொடுத்தான் ராஜாதேசிங்கு
சிமிட்டாகொடுத்தவேகத்திலே சீறிபாய்கிறது
கோபம்வந்துமூண்டுக்கொண்டது ராசாவுக்கானாலும்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கிநடுங்கிடவே
மலைகளிடிந்துதவிடுபொடியாய்மண்மேல்விழுந்திடவே
குன்றுமலைகள்தாண்டிகுதிரை குதித்துபோகுதாம்
குன்றுகளெல்லாம்பொடியாக குலுங்கிவிழுகுதுபார்
குதிரைபோகும்வேகத்தாலே குன்றுமலைகளெல்லாம்
குப்பெனஐங்காதவழியும் கொண்டுபோகிறதாம்
ஆறுகுளங்கள்மடுக்களெல்லா மதிரநடுங்குதுபார்
ஐங்காதவழிக்கப்புறமிருக்குது அந்தமேகக்குதிரை
குதிரைதட்டினவேகத்தாலே குழந்தைதேசிங்கு
குலுங்கநகைத்துசிமிட்டாகொடுத்தான்குதிரைக்கானலு
நிமிஷநாழிகைக்குநூறுகாதம் நிலையாய்பறக்குது [ட
ஊரைச்சேர்ந்தகாடுமலைகள் ஒடுங்கிநடுங்குதுபார்
குன்றிலிருக்கும்சிங்கம்யானை குலுங்கநடுங்குதுபார்
தேசத்திலிருக்குஞ் சனங்களெல்லாம் திரண்டு நடுங்குது
ஐந்நூறுகாதம்பஞ்சபுரவி ஆகாயம்போகுதுபார் [பார்
அசுவம்போகும்வேகத்தாலே யலையுதுலகமெல்லாம்

மேகங்கிளம்பிவாயைத்திறந்து மின்னல்கக்குதுபார்
மின்னல்வெளிச்சந்தன்னிற்பாயுது வேகமானகுதிரை
தேவர்களெல்லாம்மனதுபயந்து திகைத்திருந்தார்கள்
இந்தவிடத்தைவிட்டேயவர்க ளிறங்கியோடிவிட்டார்
உயர்ந்த மண்டலம்போட்டேயவர்கள் ஒதுங்கிஓடினார்க
வடக்கேவெகுதூரம்மகமேருசாரல்வந்துபாய்ந்தது[ள்
குதிரைபோகும்வேகத்தாற் பூமிகுலுங்குதுபார்
பர்வதங்கள்படபடவென்று பதறிநடுங்குதுபார்
அங்கிருந்தேகுதிரையைத்திருப்பினு னந்தப்பாலகனும்
தெற்குமைநாகபர்வதத்தை தேடியோடுதுபார்
லங்கையைநான்குசுற்றாகத்தா நடத்திகொண்டுவாறான்
பூமியிலுள்ளஜந்துக்களெல்லாம் பொறிகலங்குதுபார்
வானத்திலிருக்குமேகபந்திகள் மதிமயங்குதுபார் [ன்
மேற்கே வெகுதூரங்கிளம்பி மேலண்டைகொண்டுவாரா
ஐந்துநாளுமிராப்பகலாய் அதிரவேகொண்டுவாரான்
குதிரை தேசிங்குராஜனை மோசஞ்செய்ய நினைத்தது
பாராசாரிமனதுகலங்கி பார்த்துநிமிர்ந்ததுபார்
என்னுயிர்வாங்கயிந்தபாலகன் எங்கேஜென்மித்தானோ
இங்கேயிருந்தாலிரண்டுநாளையி லிறக்கவடிப்பானே
பூமியிலிருந்தால்ஜீவனிப்போ போய்விடும்பிரிந்து
உற்பாதபிண்டம்தேசிங்குபாலன் ஓட்டிக்கொல்வானே
சிவ்வென் றெழும்பிபாராசாரியும் தெய்வலோகம்போகு
ஆகாயமட்டும்கிளம்பி போகுதந்தகுதிரை [துபார்
புரவிபோகும்வேகமறிந்தான் புலிக்குட்டிதேசிங்கு
தெய்வலோகத்தன்னிலடக்க தேடிபோகுதென்று
லகானிழுத்துசிமிட்டாகொடுத்தான் ராஜாதேசிங்கு
இடதுகாலுக்கிரண்டுசிமிட்டா யிடுக்கிக்கொடுத்தானும்
சிமிட்டாகொடுத்தவேகத்திலே திகைத்துநின்றது
இடித்தயிடியில்மனதுகலங்கி யிருந்துமேலாடுதுபார்
ஆகாயமார்க்கந்தத்தளிக்குது அந்தமேகக்குதிரை
அந்தநாட்டையிந்தநாட்டை அசையாமலேபிடித்து
நாலுதிக்குந்திரும்பிப்பார்த்தான் ராஜாதேசிங்கு
ஊர்பதிகள் நாடுகளெல்லாம் ஒன்றுந்தெரியவில்லை
அன்னம்புசித்தைந்துநாளாயிற்று அறியாதபாலகனும்
ஆகாயம்பூமிஒன்றாயிருப்பதை அறிந்தான்பாலகனும்

களைகள்வந்துசூழ்ந்தவுடனே கண்டுமேதுசொல்வான்
கடிவாளத்தைகெட்டியாய்பிடித்து கவிழ்ந்துபடுப்பானு
குதிரைகயிற்றைகெட்டியாய்பிடித்து குப்புறபடுத்தானும்

### தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதரை நினைத்தல்

அரிகரிபரந்தாமாவென்று அலறியழுதானும்
கோவிந்தா ஸ்ரீகிருஷ்ணாவென்று கூப்பிட்டழுதானும்
ஆபத்பாந்தவா அனாதரட்சகா ஆதிமூலப்பொருளே
அடியேனைவந்துரக்ஷியுமையா ரங்கநாதாவென்று
அலறியழுதுகவிழ்ந்துபடுத்தான் அந்தக்குதிரைமீதில்
கண்ணைமூடிக்கவிழ்ந்துபடுத்தான் ராஜாதேசிங்கு

### ஸ்ரீரங்கநாதர் தேசிங்குராஜனிடத்தில் வந்தது

அழுதவுடனே ஸ்ரீரங்கநாதர் அருகில்வந்துநின்று
கடிவாளத்தின்கயிற்றைபிடித்துகன்னத்திலறைந்தாராம்
குழந்தையைகொண்டு ஆகாயமார்க்கங்கொல்ல நினைத்தா
இன்றையவரையிலாகாயவழி எழும்பிப்போகாதே [யே
கூடவிருந்ததேசிங்கை கொலுவில்கொண்டுவாரும்
கொஞ்சநாளையில்சண்டைநேரும் குழந்தைக்கானலும்
சண்டைமுனையில்மோட்சமுனக்குசல்திதாரேுமென்றார்
குழந்தையுடனேமோட்சமுனக்குகூடத்தாரேுமென்றார்
அந்தமொழியைக்காதிலேகேட்டு அடிபணிந்தது
சந்தோஷமாகராஜனைக்கண்டுசாஷ்டாங்கமாகுதுபார் [ர்
சேதிகள்சொல்லி ஆகாயமார்க்கஞ் சேரக்கொண்டுவந்தா
டில்லிக்குநேரேகொண்டுநிறுத்தினார் தேசிங்குபாலகனை
குழந்தையையெடுத்துகுதிரைமீதில் கூசாமல்வைத்தார்
அவ்விதப்படவேகளைகள்தெளிந்து அதட்டியெழுந்தான்
களைகள்தெளிந்துகண்ணைவிழித்து கர்த்தனைபார்த்தான்
பார்த்தவுடனே ஆனந்தமாகப் பதறியழுதானும்
ஆபத்பாந்தவா அனாதரட்சகா ஆதிமூலமேநீ
அடியேனைவந்துரட்சித்தீரோ ஐயாரங்கநாதா
அந்தவார்த்தையைகாதிலேகேட்டார் ரங்கநாதசுவாமி
கண்ணேமணியேரத்தினமேஎன் கருவிளமேகேளாய்
டில்லிக்குநேரேயிருக்குதுபாரு தெய்வலோகப்புரவி
குதிரையிறக்கிசந்தோஷமாக கோட்டைக்குவாருமென
போய்வாரேன்போய்வாரேனிப்போ புத்தியுள்ளமகனே
ஆனால்நல்லதாகட்டுமென்று அடிபணிந்தானும்
பணிந்தவுடனேமாயமாய்ரங்கர் பரவியிருந்தாராம்

## தேசிங்குராஜன் குதிரையைடில்லியிற் கொண்டுவந் திறக்கியது

போனவுடனேதேசிங்குபாலன் புரவியென்னசெய்தான்
மெள்ளசிமிட்டாகொடுத்துகொண்டு மெதுவாவாரானே
பக்கஞ்சிமிட்டாகொடுத்துக் கொண்டுபாலன்வாரானே
கலகலகலகலகலகலவென்று கனைத்துவருகுதுபார்
கனைத்தசத்தத்தைகாதிலேகேட்டார் கன்னடதேசத்தார்
ஐம்பத்தாறுதேசராஜரும் ஆகாயமேபார்த்தார்கள்
சூரியனைப்போற்றுலங்கிவருகுது சொர்ணமேகக்குதிரை
சந்திரனைப்போல்தகதகவென்ன சாரிவருகுதுபார்
வருகிறபாலனைக்கண்ணால்கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
தேரணிராஜனும்டில்லிபதுரையும்தேடிஓடிவந்தார்
ஆனந்தக்கண்ணீர்புட்பமாரியாய் அலறியழுதார்கள் [ம்
சந்தோஷம்வந்துமூண்டுகொண்டதுசகலதேசத்தார்க்கு
அந்தசமயத்தில்வந்து நிறுத்தினான் அந்தபாலகனும்
பாராசாரிகொண்டுநிறுத்தினான் பாலசூரியன்போல் [ம்
நிறுத்தினவுடனேபுட்பமாரிகள் நிலையாய்பொழிந்தாரா
தேவரெல்லாஞ்சந்தோஷமாக தேன்மாரிபொழிந்தார்க
தேரணிராஜன்தரணிசிங்குமே தேடியோடிவந்தார் [ள்
வந்தமகனைக்கண்ணாலேகண்டு வாரியெடுத்தாராம்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டார்
தேசிங்குபாலனைமடியில்வைத்து திருஷ்டிகழித்தாராம்
சந்தோஷமாகமகனையெடுத்து சாந்திகழித்தாராம்
ஐம்பத்தாறுதேசராஜரும் ஆலாத்தியெடுத்தாராம்
மங்களம்பாடிவாழ்த்தியெடுத்து மைந்தனைமுத்தமிட்டு
டில்லிபதுரையுந்தேசராஜரும் சேரவோடிவந்தார்
மூழங்கால்மண்டியிட்டேயவர்கள் முன்னேசலாஞ்செய்
ராமுராமுரேசிதாராமூரே ராஜாதேசிங்கு [தார்
பதில்சலாமுங்கொடுத்தானையா பாலனெழுந்திருந்து
ஊருங்குடித்தனமுமாகவந்து உவந்துசலாஞ்செய்தார்
கையமர்த்திமரியாதைசெய்தான் காளைகுழந்தையவன் [ர்
குதிரைக்குவேண்டியபுல்லுந்தண்ணீர் கூசாமல்வைத்தா
சபையில்வந்துநிறைந்துகொண்டார் சகலதேசத்தாரும்

## டில்லிராஜன் தேசிங்குராஜனுக்கு வெகுமதிகொடுத்தது

டில்லிபதுரையும்தேசிங்குராஜனை சேர்த்தணைத்தெடுத்து
உயர்ந்தசிம்மாசனத்தில்வைத்து ஒதுங்கிபக்கம்நின்றார்



அண்ணாவாடா தம்பிவாடா ராசலிங்கபாபு
பத்துகளஞ்சியபணத்தையெடுத்துபகுதிகட்டுமென்றான்
குதிரையாயிரமானையாயிரம் கொண்டுநிறுத்துமென்றான்
கணக்கில்லாதசேனைதளத்தை கடுகநிறுத்துமென்றான்
தேசிங்குக்கேற்றமாணிக்கவுடுப்பு தேடிக்கொண்டுவாரும்
மாணிக்கமாலைமுத்தாரங்கள் வரிசைகொண்டுவாரும்
தெய்வலோகத்துபாராசாரியை தேடிக்கொண்டுவாரும்
தேசத்தார்வெகுமதிசெய்ய தேடிக்கொண்டுவாரும்
நானேறும்புரவி நீலவேணியை துரத்திவாருமென்றான்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டான் ராசலிங்கபாபு
சொன்னநாழிக்குதயாராச்சுது சூழ்ந்தகொலுவினிலே
தயாரானதைக்கண்ணாலேகண்டு டில்லிபதுரைதானும்
முத்தாரமும்ரத்னாரமும் முன்னேகழட்டிபோட்டான்[ன்
தேசிங்குக்கேற்றவெகுமதியெல்லாம் சேர்த்துகொடுத்தா
அவரவர்க்கேற்றவெகுமதிகளை சேர்த்துக்கொடுத்தான்
தேசிங்கருகிலிருக்குமவனை திருஷ்டித்துதான்பார்த்தான்
மோவுத்துகாரனைகண்ணால்கண்டு முன்னேஓடிவந்தான்
முத்தாரங்கள்ரத்னாங்கள் கழுத்தில்போட்டானும்
அவனுக்கேற்றவெகுமதிகளை அங்கேகொண்டுவந்தான்
ஐயாகேளுமையாகேளும் மோவுத்துக்காரனே
நானேறும்புரவி நீலவேணி நீயேறவேணுமென்றான்
ஐம்பத்தாறுதேசத்திலுள்ள அரசருமேறமாட்டார்
ஏறினால் நீயேறவேணும் என்னென்று நீகேளாய்
உன்சூரத்தறிந்துஇனமாக உனக்குத்தந்தேனென்றான்
ஆனால் நல்லதாகட்டுமென்று அவனுமொத்துகொண்ட
தேசிங்குபாலனைகண்ணால்கண்டுசேதியென்னசொல்கிறா
ஐம்பத்தாறுதேசராஜர்க்கும் அதிபதிதான்றானே [ர்
எனக்குமிஞ்சின அதிபதியாக யிருந்துஅரசுசெய்யும்
என்மகளைராணியம்மாளை இங்கேதந்தேனென்றார் [ன்
கலியாணஞ்செய்தரசுமுகத்தை கார்த்துகொள்ளுமென்று
எப்போதிஷ்டமோஅப்போ கலியாணஞ்செய்துபோ
நீஇட்டவேலையைதலையால்செய்ய திட்சயமாகவையா[ம்
அவ்வார்த்தையைக்காதிலேகேட்டா னறியாதபாலகனு
கோவிந்தாகோவிந்தாவென்று குப்பென்றெழுந்தானும்
டில்லிபதுரையைச்சேர்த்தணைத்து சேதிசொல்லுகிறான்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீர்

சமஸ்தானத்தையறியாதவனும் தாங்குவேனேஐயா
செஞ்சியைவிட்டாறுமாதமாச்சு செலவுதாருமையா
அம்மொழியைக்காதிலேகேட்டான் டில்லிபதுரையும்
வாரியெடுத்துமார்மீதணைத்து வர்ணமுத்தமிட்டான்
அந்தமொழியைக்காதிலேகேட்டான் தோரணிராஜனும்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையே நீ
ஐந்துவருஷப்பாலனுச்சுதே அறியாதயென்குழந்தை
இப்போதுவிவாகஞ்செய்ய எனக்குசம்மதியில்லை [றேன்
இருபதுவயதில்கலியாணஞ்செய்து இட்டுகொண்டு போ
ஆனால் நல்லதாகட்டுமென்று அவனுஞ்சம்மதித்தான்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
திவ்வியசேனை ஆனைகுதிரை செஞ்சியில்கொண்டுசேரும்
என்றைக்குஞ்செஞ்சிதோப்புபணமு மில்லையென்றுசொ
ஐம்பத்தாறுதேசராஜர்களனைவரையும்பார்த்து [ல்லும்
செஞ்சிராஜனுல்சிறைமீண்டுபோங்கள் தேசராஜர்களே
போய்வாரோம்போய்வாரோம் புண்ணியதுரைமாரே
தேசிங்குராஜன் செஞ்சிகோட்டைவந்துசேர்ந்தது
தோரணிராசன்சிற்பதுரையும் தெருவில்வந்தார்கள்
மோவுத்துகாரன் நீலவேணிமேல் முன்னேவந்துநின்
அவரவர்தேசங்களிலே அவரவர்போய்ச்சேர்ந்தார்[றான்
செஞ்சிகோட்டையில்வந்துசேர்ந்தார் தேசிக்குபாலன்
வருகுமுன்னமேசேதியறிந்து வருந்திபெற்றவளும்
ஆயிரந்தோழிமார்களுடனே அங்கேவந்துநின்றான்
வந்தவுடனேதாயைக்கண்டுவணங்கிநமஸ்கரித்தான் [ள்
வந்துபணிந்தமகனையெடுத்து வாரியே முத்தம்மிட்டா
ஆயிரந்தாதிகள்வந்தேமுத்து ஆலாத்தியெடுத்தார்கள்
திருஷ்டிகழித்துமங்களதிருஷ்டி தெருவிலெறிந்தார்கள்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேவைத்தார்
மகனையெடுத்துமடியில்வைத்து மகிழ்ச்சியடையாமல்
என்னைவிட்டுநீஎப்படிபோனாய் எந்தன்கண்மணியே
போனநாளன்றையமுதல் புசிப்பெடுப்பதில்லை
தாயுந்தகப்பனுமைந்தனைப்பார்த்து சந்தோஷமானார்க
ஏழுவருஷம்சந்தோஷமாக யிருந்தரசுசெய்தார்கள் [ள்
பட்டங்கட்டிமூன்றுமாதத்தில் பாலனைப்பெற்றவளும்
பரமபதத்தைபோயடைந்தாள் பாக்கியராம்பாயி
தேசிங்குதித்தஎட்டாம்வருஷம் தோரணிமகாராஜன்

பரமத்தியானஞ்செய்தேயவரும் பரகதியைச்சேர்ந்தார்
சிற்றப்பதுரைதரணசிங்கு செஞ்சியையாண்டிருந்தார்
டில்லிக்குச்சென்றுராணியம்மாளை செஞ்சிக்குகொண்டுவ
பதினெட்டுவயதுபாலனுனன் ராஜாதேசிங்கு [ந்தார்
கலியாணஞ்செய்யவெத்தனித்தார் கண்மணிபாலனுக்கு
சிற்றப்பதுரைதரணிசிங்கு தேடியென்னசெய்தார்
ஆறுமாதமாய்கலியாணம்பண்ணியறையிலேவைத்தான்
ராணிதேவியைகலியாணம்பண்ணி ராஜமுடிதரித்தார்

தேசிங்குராஜன் திருக்கலியாணஞ் செய்துகொள்ளல்

திரைகட்டிகலியாணஞ்செய்தார் செஞ்சிகோட்டைதனில்
பெண்சாதிமுகத்தைப்பார்த்தறியான் புலிகுட்டிதேசிங்கு
புருஷன்முகம்பார்த்தறியாள் புண்ணியராணியம்பாள்
இரங்கரைநோக்கிபூசைசெய்தாளாம் ராணியம்மாளும்
மூன்றரைகாதநாழிபூசைசெய்துமுழுதுமாண்டிருந்தான்
இப்படிபனிரண்டுவயதுவரைக்கும் ஏகசக்கரமாண்டான்
செஞ்சிதேசத்தையாண்டிருந்தான் சிங்ககுட்டிபோலே
அந்தமட்டோடேஆச்சுதுபாரும் அந்தசெஞ்சிசேதி

டில்லிராஜன் நவாப்பினிடத்தில் பகுதிக்கனுப்புதல்

டில்லியிலிருக்கும்டில்லிபதுரைசேதியென்னசொல்வான்
அண்ணுவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
ஐம்பத்தாறுதேசராஜர்களும் பகுதிகட்டுகிறார்
நூற்றெழுபத்திரண்டுபாளையபட்டுக்கு எஜமானனுலும்
ஆற்காட்டையாளும்நவாப்புசைதுல்லா அவனுங்கட்டி
சல்திசல்திசேதிசொல்லும் ராஜலிங்கபாபு [னனு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜலிங்கபாபு
முழங்கால்சீலைபோட்டே யவனும் முன்னேசலாஞ்செய்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீ [தான்
ஐம்பத்தாறுதேசராஜரும் பணமுங்கட்டினார்கள்
ஆற்காடுநவாப்புசைதுல்லா அவனுங்கட்டவில்லை
சலாஞ்செய்துபாட்சாபணத்தை சல்திகொண்டுவாறேன்
தோப்புபணமும்நிலுவையிருக்குது பழஞ்செஞ்சியிலே
பனிரண்டுவருஷந்தோப்புபகுதி பணமுங்கட்டவில்லை
அந்தசொல்லைக்காதில்கேட்டான் டில்லிபதுரைதானும்
அண்ணுவாடாதம்பிவாடா கணக்கப்பிள்ளைவாடா
ஆற்காட்டையாளும்நவாப்புசைதுல்லா பணமுங்கட்ட
ஐயாகேளுமையாகேளு நவாப்புசைதுல்லா [வில்லை

பனிரண்டுவருஷந்தோப்ருபகுதி பணமுங்கட்டவில்லை
நாற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டு உனக்கேயாலும்
தேசத்துபணமும்உன்னிடபணமும் டில்லிக்குவரவில்லை
எட்டு நாளையிலனுப்பிறுவாச்சு யிந்தபணத்தையெல்லம்
இல்லாமற்போனால் நவாப்பை யிடுவேன்சிறையிலென்று
சிறையிற்போட்டுமானபங்கஞ்செய் தனுப்புவேனென்று
அந்தபடிக்கே எழுதிமுடித்தான் அந்தவோலையைத்தா
நீயேவாடா நீயேவாடா அர்க்காருபாப்பையா [ன்
ஐம்பதுபோதலாய்த்துமாரை அதிரகொண்டுபோயி[யா
அரிக்கத்து பண்ணிபணத்தைவாங்கடா அர்காருபாபை
ஆனால் நல்லதாகட்டுமென்று அவனுமோடிவாரான்
பத்து நாளையில்ஆர்க்காடுதேசம் பகுதிகேட்கவந்தான்
சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
டில்லியிலிருந்துஓலைவந்தது நவாப்புசைதுல்லா
டில்லிபேச்சைகாதிற்கேட்டு திடுக்கிட்டெழுந்தானும்
அண்ணவாடாதம்பிவாடா ரங்கநாதபிள்ளை [றான்
வாசித்துப்பார்த்துசேதியெனக்குவகுத்துசொல்லுமென்
அந்தவார்த்தைகாதிற்கேட்டு திடுக்கிட்டெழுந்தானும்
ஓலையைப்பார்த்து வாசித்துச்சொல்லும் ரங்கநாதப்பிள்
ஆனால் நல்லதாகட்டுமென்றான் ரங்கநாதப்பிள்ளை [ளை.
ஓலையைப்பிரித்துசேதியுரைத்தான் ரங்கநாதப்பிள்ளை
கேட்டவுடனேமனதுகலங்கி கீழேஓடிவந்தான்
கஜானாதிறந்து திரவியமெல்லாம் கண்ணாலே தான்கண்
அண்ணவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ [டான்
களஞ்சியபணமும்டில்லிபணமும் கட்டிபோடுமேதான்
அதிகமாகுமோகுறையுமோ நீ அறிந்துசொல்லுமென்று
ஐயாகேளுமையாகேளும் நவாப்புசைதுல்லா [ன்
டில்லிபட்டணத்திற்களஞ்சியபணமுசேனகுறையுதையா
கணக்கைபார்த்துதோப்ருபணத்தைசல்தியிலழையுமென்
இருபது நாளில்பணத்தை யெடுத்தனுப்புமென்றான் [று
ஆனால் நல்லதாகட்டுமென்று அவனுமோடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும் அர்க்காருபாப்பையா [ன்
கணக்கைசோதித்துடில்லிகணக்கை கடுககொண்டுவாரே
இருபது நாளில்பாட்சாபணத்தை யெடுத்துமேவாரேன்
அப்படியேபோய்வாரும்சல்தியில் அர்க்காருபாப்பையா
ஆனால் நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்

அந்தமட்டோடே நவாப்புசைதுல்லா அரசுசெய்யலுற்
கோபம்பிறந்துசைதுல்லாவும் குரூரமாயழைத்தானும்
அண்ணாவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கா நீ[ன்றான்
பெரியகணக்குரங்கநாதப்பிள்ளையைப் பிடித்துவாருமெ
நல்லதென்றுபங்காருநாய்க்கன் நாடியோடிவந்தான்
சல்திசல்தியோடிவாடா ரங்கநாதப்பிள்ளை
ஸ்நானஞ்செய்துபூசைமுடித்துசாப்பிட்டிளைப்பாறி[டா
அதிகசந்தோஷங்கொண்டேயிருக்கும் கணகப்பிள்ளைவா
அந்தச்சொல்லைகாதிலேகேட்டான் ரங்கநாதப்பிள்ளை
கணக்கையெடுத்துசலாஞ்செய்து கடுகவோடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும் ரங்கநாதப்பிள்ளை
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டு நமக்கேயானாலும்
பாளையப்பட்டுராஜதுரைகள் பகுதிகட்டுகிறார்கள்
கட்டாதிருக்கும்ராஜதுரைகளை கடுகசொல்லுமென்றான்

### இராஜாக்கள் பகுதிகட்டும் விபரம்

தேசத்துராஜதுரைகளையும் தெரியச்சொல்லுமென்றான்
ஆனால் நல்லதாகட்டுமென்று அவனுஞ்சொல்லிவாரான்
ஐயாகேளுமையாகேளும் நவாப்புசைதுல்லா [ள்
நிலுவையொன்றுமில்லாதவர்கள் நிலையாய்கட்டுகிறார்க
சேத்துபட்டுதாவுத்துகாரனும்திறைபணங்கட்டிவாரான்
திருவண்ணாமலைசுபங்கிதுரையும்திறைபணங்கட்டுகிறான்
கள்ளக்குறிச்சிகான்சாயபு கட்டிவாறான்பணத்தை
மதுரைசீமைமலையாளத்தான் வாய்தாபணங்கட்டுகிறான்
திண்டுகல்லுகொலுமுகத்தானும் திறைபணங் கட்டுகிறா
அரியலூரில்பெரியதுரையும் பணமுங்கட்டிவாரான் [ன்
எட்டியாபுரத்துபாளையக்காரன் பணமுங்கட்டிவாரான்
திமிரிக்கோட்டைஷேக்முகமது பணமுங்கட்டி வாரான்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரர்பணமுங்கட்டிவாரார்
இன்றையவரைக்குந்தோப்புபணம் நிலுவைஒன்றுமில்லை
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டையாளுகின்ற தேரணிமகாராஜன்
சூரசிங்குகுமாரனையா தேரணிமகாராஜன்
தேரணிராஜன்குமாரனையா தேசிங்குமகிபாலன்
சிம்மாசனத்தில் அரசுசெய்கிறான் சிங்கக்குட்டிபோலே

அந்தசெஞ்சியையாளும்தேசிங்கு பணமுங்கட்டவில்லே
பனிரண்டுவருஷந்தோப்ருபணம் செஞ்சில்வரவேணு
வாயிதாபணமும்வேறேயிருக்குது பழஞ்செஞ்சியிலே [ம்
தோப்புருபணத்துக்குபோய்வாடா தோன்றமல்லண்ணு
அந்தபேச்சைகாதிலேகேட்டான்தோன்றமல்லண்ணன்
நாளொருமொழிசொல்கிறேன்கேளும்நவாப்புசை துல்ல
ஒண்டியாய்நான்போகமாட்டேன் நவாப்புசைதுல்லா
துருப்புகுதிரைமுந்நூறும்றனைக்கு துரிதமாய்வரவேணு
சாரிமூங்கில்சவாரிசண்டா தரவேணுங்கூடவேதான் [ம்
கோபுரவண்டிகுலாருவண்டி கூடதரவேணும்
இந்தப்படிக்குகொடுப்பாயானல் நவாப்புசைதுல்லா[லா
செஞ்சிகோட்டையான்போய்வாறேன் நவாப்புசைதுல்
போனநாழிசெஞ்சிராஜனேப்பிடித்துக்கொண்டுவாரேன்
வராமற்போனல்செஞ்சிராஜனைமடக்கிகொண்டுவாரேன்
கஜானுபணம்கட்டாதபோனல்கடுஞ்சிறையிட்டுவாரேன்
பகுதிபணம்கட்டாதபோனல் பாரசிறையிட்டுவாரேன்
சிறையில்வைத்து அரிகத்பண்ணி சேரகொண்டுவாரேன்
இந்தப்படிக்குத்தாரங்கொடுத்தாலங்கேபேறேனென்றான்
அந்தவார்த்தையைகாதில் கேட்டான்நவாப்புசை துல்
சலாம்வாங்கித்திரும்பினனையா தோன்றமல்லோஜி [லா
அரண்மனைக்குள்ளேசென்றனந்த தோன்றமல்லோஜி
ஸ்நானஞ்செய்துசாப்பிட்டானையா தோன்றமல்லோஜி
தலைக்குத்தலைப்பாபோட்டானையா தோன்றமல்லோஜி
அங்கிவுருமால்போட்டானையா தோன்றமல்லோஜி

## தோன்றமல்லன் செஞ்சிக்குப் போகுதல்

அரண்மனைவிட்டுவெளியேவந்தான்தோன்றமல்லனும்
அதற்குமுன்னமேதயாராச்சுது பட்டத்துயானையும்
ஆனைகொம்புக்குகத்திகட்டினன் தோன்றமல்லோஜி
நாராயணகோவிந்தாவென்று யானையேறினனும்
செஞ்சிகோட்டைக்குபயணமானன் தோன்றமல்லனும்
கணகணகணகணகணகணவென்று கத்திகள்மின்னுது
பளபளபளபளபளபளவென்று பட்டாக்கள்மின்னுது
தடதடதடதடதடதடவென்றுகுதிரைகள்நடுங்குதுபார்
இங்கேயடித்தநகாருசத்தம் திமிரியிற்கேட்குது
அந்தவேளையிலென்னவெகிறன் ஷேக்முகம்மதையா

தோன்றமல்லனை ஷேக்முகம்மது காணல்
எதிரியெவனோவந்தானென்று ஷேக்முகம்மதுவும்
முந்நூறுகுதிரைதயார்பண்ணினான் ஷேக்முகம்மதுவும்
எண்ணூறுதுருப்புகுதிரையுடன் முன்னே ஓடிவந்தான்
தோன்றமல்லனைக்கண்ணால்கண்டான்ஷேக்முகம்மதுவு
பதில்சலாமுங்கொடுத்தானையா தோன்றமல்லனும் [ம்
எங்கேயிருந்தெங்கேபோகிறீர் தோன்றமல்லண்ணை
இங்கேயிருந்தெங்கேபோகிறீர் தோன்றமல்லண்ணை [ன்
நேற்றையதினவைபைசாபணமுங் கட்டியனுப்பினேனு
இன்றையதினவைபைசாபணமுங்கட்டப்போகிறேன் நா
என்சீமையில் நகாருபோட்ட வயணமென்னவையா [ன்
அந்தவார்த்தைகென்னசொல்கிறான் தோன்றமல்லனும்
சண்டைக்குவரவில்லைசாடிக்குவரயில்லை ஷேகுமுகம்மது
செஞ்சிகோட்டைபணத்துக்குபோறேன் ஷேக்முகமது
அந்தபேச்சைக்காதிலேகேட்டான் ஷேக்முகம்மதையா
தானொருவார்த்தைசொல்கிறேன்கேளு தோன்றமல்லண்
அவனுமகாசூரனையா ராஜாதேசிங்கு [ணை
செஞ்சிகோட்டைசிப்பாயையா ராஜாதேசிங்கு
கத்திபிடித்தசிப்பாய்மகனும் ராஜாதேசிங்கு
அவன்கண்ணையுருட்டிப்பார்த்தானால்சிப்பாய்தேசிங்கு
கால்பலங்களும்கைபலங்களும் கதறியோடுமேதான்
டாருடாருய்தீர்த்துபோடுவான் ராஜாதேசிங்கு
சண்டைபண்ணிஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணை
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் தோன்றமல்லோஜி
என்னபேச்சுபேசினாயடா ஷேக்முகம்மதையா
அவனிடசூரத்தெனக்குதெரியும்ஷேக்முகம்மதையா [ன்
செஞ்சிசென்றுஎந்தன்வலுமையை தெரியகாண்பிக்கிறே
போய்வாரேன்போய்வாரேனென் ஷேக்முகம்மதையா
கட்டியிருந்தகுதிரைகளெல்லாம் நடக்குதுபாளையமும்
போடுபோடென்றுபோரானையா தோன்றமல்லனும்
ஆரணிகோட்டைக்கிரண்டுநாழிவழியில் நகாருபோட்ட
வேங்கடராயர்சீனிவாசராவு சந்திரமகாராஜாவும் [னும்
சதுர்தீர்த்தேயுட்கார்ந்திருந்தார் மூன்றுதுரைமாரும்
கார்பார்பண்ணுகிறவேங்கடராயர்காதில்கேட்டிடவே
எதிரிஎவனோவந்தானென்று வேங்கடராயரும்
ஆயிரம்குதிரைதயார்பண்ணினார் வேங்கடராயரும்



கோட்டையிலிருந்துவெளியேவந்தார்வேங்கடராயரும்
துருப்பிலுள்ளஆயிரங்குதிரை தூரத்திஓடிவந்தார்
தோன்றமல்லனைக்கண்ணாலேகண்டார்வேங்கடராயரும்
சலாமையாசலாமையா தோன்றமல்லோஜி
நீ-இங்கேவந்தவயணமென்ன தோன்றமல்லோஜி [ன்
நேற்று நிலுவைவைபைசாபணமும் கட்டியனுப்பிவைத்தே
என்சீமையில் நகாருபோட்ட வயணமென்னவையா
நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் வேங்கடராயரே
சண்டைக்குவரவில்லைசாடிக்குவரவில்லைவேங்கடராயரே
செஞ்சிகோட்டைபணத்துக்குபோறேன்வேங்கடராயரே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் வேங்கடராயனும்
நானொருசேதிசொல்கிறேன்கேளும் தோன்றமல்லண்ணா
அவனிடசேதியெனக்குத்தெரியும் தோன்றமல்லண்ணா
அவன்பிறந்தஏழாம்வருஷம் தாயார்சென்றுபோனாள்
தேசிங்குபிறந்தஎட்டாம்வருஷம் தகப்பன் சென்றுபோ
சிற்றப்பதுரைதரணிசிங்கு எடுத்துவளர்த்தாராம் [னான்
பதினெட்டுவயதில்கலியாணம்பண்ணினார்சிற்றப்பராஜா
இப்போ-இருபத்திரண்டுவயதுள்ளபாலன் ராஜாதேசிங்
ஐம்பதுதுலாம்பரிசைகத்தி அவனிடகத்தியும் [கு
ஏழுதுலாம்பரிசைபாலா அவன்கைபாலாவும்
அவனுக்கேற்றதெய்வலோக பாராசாரிகுதிரை
பாராசாரிமேலேறினானால் ராஜாதேசிங்கு
பட்டாவுருவிகையிலேபிடித்தால் ராஜாதேசிங்கு
பன்னிருகாதம்பாய்ந்துவெட்டுவான் ராஜாதேசிங்கு
இணையொருவரெங்குமில்லை தேசிங்குமுன்னுக்கு
பாற்சமுத்திரம்போலதுரைகள் படைகளெதிர்த்தாலும்
பத்துநாளையில்பார்த்துக்கொண்டு பழஞ்செஞ்சிபோவா
சிங்கம்போலவந்துவெட்டுவான் ராஜாதேசிங்கு [ன்
புலியைப்போலபுகுந்துவெட்டுவான் ராஜாதேசிங்கு
மாறுமாறென்றுதீர்த்துபோடுவான் ராஜாதேசிங்கு
அவனைஜெயிப்பாரொருவருமில்லை தோன்றமல்லண்ணா
சண்டைபண்ணிஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணா
சமாதானமாய்ப்போகவேணும் தோன்றமல்லண்ணா
சமாதானத்துக்குட்படமாட்டான் ராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
இனியில்லாதபயம்பிடித்தது தோன்றமல்லனுக்கு

கையுங்காலுமுதறலெடுத்து கலங்கியிருந்தானும்
அந்தவேளையிலென்னசொல்கிறார் வேங்கடராயரும்
மெத்தசூரத்துக்காரனவனும் ராஜாதேசிங்கு
பணமென்றசேதிகாதிலேகேட்டால் பாய்ந்துகுத்திடுவா
சல்-மெத்தக்கெட்டிக்காரனையா ராஜாதேசிங்கு [ன்
அவன்விஷ்ணுபக்திக்காரனையா ராசாதேசிங்கு
இரவும்பகலும்ரங்கநாதரை யெண்ணியிருப்பவன்தான்
நாமத்தைக்கண்டால்பயப்படுவானையா ராஜாதேசிங்கு
அந்தசேதியைகாதில்கேட்டான் தோன்றமல்லனும்
சந்தோஷமாகவேங்கடராயனை தழுவிக்கொண்டானும்
இனிமேலெனக்குபயமில்லையென் றிறுமாந்துசொன்னனு
நாமம்போட்டுசெஞ்சிராஜனை நடத்திக்கொண்டுவாரேன்
எந்தவிதமுஞ்செஞ்சிராஜனையிடுவேன்சிறையிலென்றான்
ஆற்காடுதேசங்கொண்டேயவனை அடக்கிபோடுவேன்
செய்யாமற்போனல்எனதுபேரும் தோன்றமல்லனல்ல
போய்வாரேன்போய்வாரேனும் வேங்கடராயரே
கட்டியிருந்தகுதிரையெல்லாம் நடந்ததுபாளையமும்
போடுபோடென்றுபோறனையா தோன்றமல்லனும் [ம்
செஞ்சிகோட்டைமண்ணைமிதித்தான் தோன்றமல்லனு
செஞ்சிகோட்டைஐந்துநாழிவழி மதவனூர்பேட்டை
தேவனூர்பேட்டைஓரத்திலே சங்கராபரணியாறு
ஆற்றங்கரையில்வந்தேயவனும்பாளையம் போட்டானும்
மூன்றுநாள்வரைக்கும்சத்தம்பண்ணமல் முழித்திருந்தா
நாலாநாள்காலையங்கே நகாருபோட்டானும் [னும்
இங்கேபோட்டநகாருசத்தம் செஞ்சியிற்கேட்டதுபார்
புதுசெஞ்சியில்பூசைபண்ணுகிறன் ராஜாதேசிங்கு
பழஞ்செஞ்சியில்கார்பார்பண்ணுகிறர் சிற்றப்பராஜாவும்
என்றுமில்லாதநகாருசத்தம் யின்றுவந்ததென்ன
அலங்கத்துமேலேறிப்பார்த்தான் சிற்றப்பராஜாவும்
ஆற்றங்கரையில்நிறைந்திருக்குது நவாப்புபாளையமும்
கண்ணலேகண்டுமனதுகலங்கி கடுகயென்னசெய்தான்
ஒற்றைக்குதிரைபோட்டுமேறி வுட்டனேயோடிவந்தான்
அந்தவேளையில்பூசைபண்ணுகிறன் ராஜாதேசிங்கு
அரிநமோநாராயணவென்று பூசைபண்ணுகுறனும்
கிருஷ்ணஅரிகோவிந்தாவென்று பூசைபண்ணுகிறன்
மாயவாவைகுந்தாவென்று பூசைபண்ணுகிறனும்

செஞ்சிகோட்டைரங்கநாதரை தியானஞ்செய்கிறானும்
பூசைமுகத்திலேவந்துநின்றான் சிற்றப்பராசாவும்
என்னபூசைபண்ணிறையடா மகனேதேசிங்கு
தேவனூரிலேகணகணவென்று நகாருமுழங்குதிப்போ
பாளையம்வந்துநெருங்கியிருக்குது மகனேதேசிங்கு
நாலுமூலையும்நவாப்புபாளையம் நாடியிருக்குதுபார்
ஆற்றங்கரையில்நவாப்புபாளையம் அண்டியிருக்குதுபார்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
கண்ணைவிழித்துப்பார்த்தானையா ராஜாதேசிங்கு
ராமுராமுரேதேவாவுமக்கு சிற்றப்பராஜாவே
என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராஜாவே
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
கோபங்கொண்டுநகைத்தவனும் கொல்லுஞ்சிங்கம் பே
ஐயாகேளுமையாகேளும் சிற்றப்பராஜாவே [ருக்குத்
பன்னிரண்டுவருஷம்தோப்புருபணமும் நம்மண்டையி
நமதுகோட்டைக்குபயமேயில்லை நமக்கேயானாலும்
ராமாராமாவென்று நாமும் ராஜ்ஜியமாளுகிறோம்
ராஜகுலத்தில்நானும்பிறந்தேன் ரோஷக்காரனாக
எதிராளியானநவாப்புதண்டு எதிரில்விழுந்ததோடா
பகையாளியான நவாப்புதண்டு பக்கத்தில் விழுந்ததோ
தேசமெல்லாஞ்சேர்ந்துவந்ததோ சிற்றப்பராஜாவே[டா
இன்னமரைநாழிபொறுத்துக்கொள்ளும் சிற்றப்பராஜா
டாருடாருய்கிழித்துபோடுறேன் சிற்றப்பராஜாவே[வே
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு சிற்றப்பராஜாவே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது சிற்றப்பராஜாவே
வந்தவனாரென்றுகேட்டுப்பாரு சிற்றப்பராஜாவே
இதற்கோநீயும்பயந்தாயையா சிற்றப்பராஜாவே
பூசைமுகத்தைகெடுக்கவேண்டாம் சிற்றப்பராஜாவே
ஆனால்நல்லதாகட்டுமென்றான் சிற்றப்பராஜாவும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் சிற்றப்பராஜாவும்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே கொலுவுக்குவாறாராம்
இரண்டுபேர்ஆர்க்காருமாரை தோன்றமல்லனுக்கு
அஞ்சாமலேஅஞ்சல்போகுது தோன்றமல்லனுக்கு
தோன்றமல்லனைக்கிட்டிவந்தார் ஆர்க்காருமார்களும்
வந்தவனைத்தன்கண்ணாலே கண்டான்தோன்றமல்லனு
ராமுராமுரோராமுராமுரே ஆர்க்காருமாரேநீர் [ம்

என்னைத்தேடிவந்தகாரியம் எனக்குச்சொல்லுமையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் அர்க்காருமார்களும்
என்னையாளும்தேசிங்குராஜா உன்னையழைக்கச்சொன்ன
ஜல்திஜல்திபுறப்படுமென்றான் அர்க்காருமார்களும் [ர்
இந்தசேதியைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்

## தோன்றமல்லன் தேசிங்குராஜனிடம்வருதல்

கால்நடுங்கிகைநடுங்கி யானையேறினானும் [னும்
சுண்ணும்பெடுத்துஎச்சிலுமிழ்ந்து நாமத்தைபோட்டா
ஆனையைகுத்திஇரத்தம்மெடுத்து நடுவில்போட்டானும்
பட்டைநாமம்போட்டானையா தோன்றமல்லனும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
பூசைமுழுதும்முடிந்துதையா ராஜாவுக்கானாலும்
பூசையைவிட்டுவெளியேவந்தான் ராஜாதேசிங்கு .
சிங்காரமாலிலேவந்தானையா ராஜாதேசிங்கு
திருமண்பெட்டியைகையிலெடுத்தான் ராஜாதேசிங்கு
ராமாராமாவென்றுதிருமண் நெற்றியிலிட்டானும்
சரிகைமுண்டாசுதலையிலேதரித்தான் ராஜாதேசிங்கு
கலிக்கத்துருயெடுத்துகட்டினான் கதும்புசிங்கம்போல
கமானெடுத்துக்காலிலேபோட்டான் ராஜாதேசிங்கு
கைக்குச்சீராகட்டிக்கொண்டான் ராஜாதேசிங்கு
ஐந்துதுலாம்பரிசைகத்தி கையில்பிடித்தானும்
எமன்போலஉட்கார்ந்தானையா ராஜாதேசிங்கு
மன்மதன்போலஉட்கார்ந்தானையா ராஜாதேசிங்கு
அருகிலிருந்தஅர்காருமாரை யடிட்டிக்கூப்பிட்டான்
கூப்பிட்டழைத்து சேதிசொன்னான் கொல்லுஞ் சிங்கம்

## தேசிங்ராஜன்பாளைய பட்டாரைகோலுவுக்கு வரவழைத்தல் [போல

செயராமுகெங்காராவை கொலுவுக்குவரச்சொல்லும்
நத்தர்சிங்குகோபால்சிங்கு நமதுகொலுவிலழையும்
ராமுசிங்குலட்சுமணசிங்கு நமதுகொலுவிலழையும் [ம்
ராமுதாரிலட்சுமணதாரியை கொலுவுக்குவரச்சொல்லு
ராமுசிங்கைதரணிசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும்
மான்சிங்குகிரிபுசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும்
தரணிடில்லியுசேன்சாயபைகொலுவுக்குவரச்சொல்லும்
பேட்டைமோவுத்துக்காரனை கொலுவுக்குவரச்சொல்லு
சிற்றப்பதுரைதரணிசிங்கைகொலுவுக்குவரச்சொல்லும்

ஜல்திஜல்தியென்றுசொன்னான் ராஜாதேசிங்கு
சொன்னநாழிகைக்குகொலுவில் சூழ்தோடிவந்தார்
இந்தவிதமாயிருக்குதங்கேசெஞ்சி கோட்டைக்குள்ளே
அந்தவேளையிலென்னசெய்கிறான் தோன்றமல்லனும்
ஆனையைவிட்டுகீழேகுதித்தான் தோன்றமல்லனும்
நாராயணகோவிந்தவென்று கோட்டைக்குள்ளேவந்தா
சதுர்முன்னுக்குவந்தானையா தோன்றமல்லனும் [ன்
முழங்கால்சீலைபோட்டேயவனு முன்னேசலாஞ்செய்தா
பதில்சலாமுங்கொடுத்தானையா ராஜாதேசிங்கு [ன்
கண்ணாலேகண்டுதோன்றமல்லனை கடுகசொல்லலுற்றான்
நீ-இங்கேவந்தவயணமென்ன தோன்றமல்லண்ணா
எனக்குஇருபத்திரண்டுவயது இப்போதாச்சுது
இத்தனை நாளாய் நவாப்புசேனைகள் யிங்கேவந்ததில்லை
உயிர்கொடுக்கசெஞ்சிகோட்டைக்கு உகந்துவந்தீரோ
தைரியங்கொண்டுசெஞ்சிகோட்டைச் சார்ந்துவந்தீரோ
என்சீமையில்நகாருபோட என்னவலுமைகொண்டீர்
சல்திசல்திசொல்லுமென்றான் ராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
கால் நடுங்கிகைநடுங்கி காலில்விழுந்தானும்
சலாமையாசலாமையா ராஜாதேசிங்கு [ங்கு
நான்சண்டைக்குவரவில்லைசாடிக்குவரவில்லைராஜாதேசி
கோபமில்லாமல்என்னிடபேச்சைசற்றேகேளுமையா
சந்தோஷமாகஎன்னிடபேச்சை சற்றேகேளுமையா
நூற்றெழுபத்திரண்டுபானையப்பட்டு நவாப்புக்காணலும்
செஞ்சிகோட்டைபணமும்வரவில்லை ராஜாதேசிங்கு
தோப்புளுபணமும்வேறேகிடக்குது பழஞ்செஞ்சியிலே
தோப்புளுநிலுவைக்குவந்தேனையா ராஜாதேசிங்கு

தேசிங்கு தோன்றமல்லன்மீது கோபித்தது

பல்லைப்படபடவென்றுகடித்தானையா ராஜாதேசிங்கு
கையைத்தூக்கிகனைத்துதட்டினான் ராஜாதேசிங்கு
இனியில்லாதகோபமாச்சுது ராஜாவுக்கானலும்
கோபத்தினாலேயவனைக்கொல்ல கத்தியெடுத்தானும்
பார்த்தவுடனேதோன்றமல்லன் பதைத்துவிழுந்தானும்
விழுந்தவுடனேசலாஞ்செய்து வேண்டிக்கொண்டானும்
தலையசைத்துதோனேநெறித்தான் நாவுஞ்சிங்கம்போல

கண்களையுருட்டிக்கதும்பினானையா காளைசிங்கம்போலே
அடாஎன்னபேச்சுபேசினாயடா தோன்றமல்லண்ணா[ன்
நீவந்தாபோல் நவாப்புவந்தால் நிமிஷமிருக்கமாட்டே
பணமென்றசேதிகாதில்கேட்டால் பாய்ந்துவெட்டுவே
நாளைக்குவரும்நவாப்பை இன்றைக்குவரச்சொல்லு [ன்
ரோஷக்காரனானால் நவாப்பைநொடியில்வரச்சொல்லும்
ஆண்பிள்ளையானால் நவாப்பை விரலைநீட்டச்சொல்லும்
மீசையுள்ளவனானால் நவாப்பை வெளியில்வரச்சொல்லு
கத்தியெடுக்கிறசிபாய்களெல்லாம்தோப்புநூகட்டுகிறதோ
தைரியமுள்ளவனானால் நவாப்யை சல்திவரச்சொல்லும்
கருவாடுவிற்கிறலப்பைபயலுக்கு கிஸ்திகட்டுகிறதோ
கத்திமுனையிலேபணமுந்தாரேன் நவாப்புக்கானாலும்
பரிசைமுனையிலேபணமுந்தாரேன் நவாப்புக்கானாலும்
போனவருஷத்துக்கிந்தவருஷம் வரகுவிளைந்தது
வரகுவைக்கல்மெத்தகிடக்குது வாரிபோகச்சொல்லும்
கோட்டைவெளியேமணல்கிடக்குது வாரிபோகச்சொல்
ஒட்டையாயிரம்யானையாயிரம்ஓட்டிவரச்சொல்லும்[லும்
பொதிகள்போட்டுநவாப்பை எடுத்துபோகச்சொல்லும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
கால்நடுங்கிகைநடுங்கி களைத்துவிழுந்தானும்
செத்தப்பிணம்போலேயிருந்தான் தோன்றமல்லனும்
மூர்ச்சைதெளிந்துஎழுந்தானையா தோன்றமல்லனும்
பார்க்கப்பார்க்ககோபமீறுதுராஜாவுக்கானாலும் [னும்
கோபம்வருவதைக்கண்ணாலேகண்டான் தோன்றமல்ல
ரங்கநாதரைவேண்டிக்கொள்கிறான் தோன்றமல்லனும்
தெரியாமற்படிக்குசெஞ்சிவந்தேன் ரங்கநாதரே
என்னுயிர்கொண்டுஆற்காடுபோனால் ரங்கநாதரே
ஆயிரம்பேருக்குஅன்னங்கொடுக்கிறேன் ரங்கநாதரே
கோதானம்பூதானம்கொடுக்கிறேன் ரங்கநாதரே [ன்
வஸ்திரதானம்வகைவகையாக வந்தவருக்கு கொடுப்பே
மங்களமாககலியாணங்கள் மகிழ்வாசெய்துவைப்பேன்
சோகிசங்கமரெவர்வந்தாலுசொர்னதானங்கொடுப்பேன்
வேதவேதியர்கேட்கும்வகைகளை விருப்பமுடன்தருவே
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு [ன்
நானொருசேதிசொல்கிறேன் தோன்றமல்லண்ணா
நீவந்தாப்போல்நவாப்புவந்தால் குத்திப்போடுவேன்

உங்கள் நவாபுக்கு நான்பயப்படவில்லை தோன்றமல்லாஜி
உன்னெற்றி நாமத்தைக்கண்டுபயந்தேன்தோன்றமல்லா
ரங்கர்வார்த்தையைகண்டுபயந்தேன்தோன்றமல்லண்ணு
அத்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
ராமுராமுரேசீதாராமுரே ராஜாதேசிங்கு
எந்தன்மேலேகோபம்வேண்டாம் ராஜாதேசிங்கு
நானிப்போதேஓடிப்போறேன் ராஜாதேசிங்கு
சலாஞ்செய்துதிரும்பிஞனையா தோன்றமல்லனும்
கோட்டைக்குவெளியேவந்தானையா தோன்றமல்லனும்
நாஞெருபேச்சுசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
அந்தபேச்சுக்குஎன்னசொல்கிருன் தோன்றமல்லனும்
நான்-யானைமீதிலேறமாட்டேன் சமேதாருமாரே
குதிரையின்மேலேறமாட்டேன் சமேதாருமாரே
தண்டுக்குள்ளேபடுத்துக்கொள்கிறேன் சமேதாருமாரே
நாம்சீக்கிரமாகவுஞுநாள்பயணம்செஞ்சிக்குவந்தோமே
இன்றையராத்திரிஆற்காட்டுக்குகொண்டுபோகவேணும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் சமேதாருமாரும்
கட்டியிருந்தகுதிரைசேனையும் சலுதியில்நடந்திடவே
காற்றுப்போலேபறக்கிருரையா சமேதாருமாரும்
ஆற்காடுவீதியில்நகாருசத்தம் அன்பாயடித்தாஞம்
அங்கேபோட்டநகாருசத்தம் நவாப்புகேட்டாஞம்
அந்தவேளையிலென்னசொல்கிருன் நவாப்புசைதுல்லா
அண்ணுவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ [நீ
சல்-செஞ்சிகோட்டைபணமும் வருகுதுபங்காருநாய்க்கா
சதுருசமக்காளம்போடச்சொன்ஞன் நவாப்புசைதுல்ல
சருப்புபெட்டியையழைக்கச்சொன்ஞநவாப்புசைதுல்ல
தூங்காவிளக்கைவைக்கச்சொன்ஞன் நவாப்புசைதுல்ல
அந்தவேளையிலென்னசெய்கிருன் தோன்றமல்லனும்

நவாப்பிடத்தில் தோன்றமல்லன் வந்துசொல்லல்

நவாப்புமாலில்வந்தானையா தோன்றமல்லனும்
சலாஞ்செய்துஎதிரிலேநின்ருன் தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தானையா தோன்றமல்லனும்
கொள்ளுகுத்தினவுலக்கைபோல முன்னேநின்ருஞம்
தோன்றமல்லனைக்கண்ணுலேகண்டான் நவாப்புசைது
என்னகாரியம்பண்ணிஞயடாதோன்றமல்லண்ணு[ல்லா
பணமுமெங்கேகாசுமெங்கே தோன்றமல்லண்ணு

ஐயா-பணமுங்காணேன்காசுங்காணேன் நவாப்புசைதுல்
னூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுக்கு நான்போயிருக்க
இத்தனை நாளுமிவனைப்போல நானும்பார்த்ததில்லை
இனியில்லாதபாடுபடுத்தினான் ராஜாதேசிங்கு
ராஜாபடுத்தினபாடுபாருமையா நவாப்புசைதுல்லா
செத்துப்போனவன் திரும்பிவந்தேன் நவாப்புசைதுல்ல
வாயினாலேசொல்லமாட்டேன் நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டையான் ஓலையெழுதினான் நவாப்புசைது
ஓலைமுகத்தைகண்ணாலேபாரு நவாப்புசைதுல்லா [ல்லா
ஓலையெடுத்துஎதிரேவைத்தான் தோன்றமல்லனும்
அந்தவேளையிலென்னசொல்கிறான் நவாப்புசைதுல்லா
ஆயிரங்கணக்கப்பிள்ளைக்குபெரிய கணக்கபிள்ளைவாரும்
வாசித்துபார்த்துதலையைக்குனிந்தான் ரங்கநாதபிள்ளை
என்னகாரியம்பண்ணினாய் நீ ரங்கநாதபிள்ளை [யை நான்
இரண்டுநாழியிலிடித்துப்போடுகிறேன்செஞ்சிகோட்டை
எதிர்த்துவந்ததேசிங்குராஜனை குத்திபோடுவேன் நான்
ஆண்சிறைபெண்சிறைபிடிக்கிறேன் செஞ்சிகோட்டைகு
உண்டானசேதிவெளியில்சொல்லு ரங்கநாதப்பிள்ளை [ள்
அந்தவேளையிலென்னசொல்லுகிறான் ரங்கநாதபிள்ளை
நானொருசேதிசொல்கிறேன்கேள் நவாப்புசைதுல்லா
ஆண்பிள்ளையானால்நவாப்பை இன்றைக்குவரச்சொல்லு
சல்-பெண்பிள்ளையானால்நவாபை அங்கேயிருக்கச்சொல்
மீசையுள்ளஆண்பிள்ளையானால் சண்டைக்குவரச்சொல்
கத்திமுனையில்பணமுந்தாரேன் நவாப்புக்காலும்
ஈட்டிமுனையில்பணமுந்தாரேன் நவாப்புக்காலும்
போனவருஷத்துக்கிந்தவருஷம் வரகுமெத்தவிளைவாம்
வரகுவைக்கல்மெத்தக்கிடக்குது வாரிபோகச்சொல்லும்
கோட்டையின்மேல்புல்கிடக்குது கட்டிபோகச்சொல்லு
கோட்டைவெளியில்மணல்கிடக்குது வாரிபோகச்செரல்
இத்தனைசமர்த்துமிருந்ததேயானால்இங்கேவரச்சொல்லு
திராணியிலாதபெண்பிள்ளையானாலங்கேயிருக்கச்சொல்லு
இப்படியாகஎழுதியிருக்குது நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் நவாப்புசைதுல்லா
கேட்டவுடனேவயிறெரியுது நவாப்புக்காலும்
நீலவிழிகள்யெரியுதையா நவாப்புக்காலும்
மீசைபடபடவென துதுடிக்குதையா நவாப்புக்காலும்

சல்பட்டாயுருவிக்கையில்பிடித்தான் நவாப்புசைதுல்லா
அண்ணவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கனே [னே
உனக்கு-ஆனைசெத்தால் ஆனைதாரேன் பங்காருநாய்க்க
குதிரைசெத்தாலும்குதிரைதாரேன் பங்காருநாய்க்கனே
தளங்கள்செத்தாலும் தளங்கள்தாரேன் பங்காருநாய்க்க
சண்டாயிழுத்துவெளியில்போடுபங்காருநாய்க்கா நீ [னே
அந்தவேளையிலென்னசொல்கிறான்பங்காருநாய்க்கனும்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரைவரச்சொல்லும்
ஓலையெழுத்தாணிகையில்பிடித்தான் பங்காருநாய்க்கனும்
ஓலையெழுதிதயார்பண்ணினான் பங்காருநாய்க்கனும்
எழுபத்திரண்டுஅர்க்காருமாரை தயார்பண்ணினான்
அஞ்சல்மேலேஅஞ்சல்வைத்தான் பங்காருநாய்க்கனும்
ஓலையெடுத்துகையில்கொடுத்தான் அர்காருமாருக்கு

**அர்க்காருமார்கள் பாளையப்பட்டுக்கு ஓலை கொண்டுபோகுதல்**

காற்றுப்பேலேபறக்குறாரையா அர்க்காருமார்களும்
மேகம்போலேபறக்குறாரையா அர்க்காருமார்களும் [ளும்
இரண்டுதாழியிற்போய்ச் சேர்ந்தாரையா அர்க்காருமார்க
ஓலையைக்கொண்டுபோய்க்கொடுத்தார் பாளையக்காரரும்
ஓலையைப்பிரித்துபார்த்தாரையா அர்க்காருமார்களும் [ம்
அவரவர்களுக்கேற்றதுருப்பு குதிரைதயார்பண்ணினரா

**நவாப்பினிடத்தில் பாளையப்பட்டார் வருதல்**

சேத்துபட்டுரங்காராவு கொலுவுக்குவாறானும்
திருவண்ணமலைசுபங்கிதுரையும் கொலுவுக்குவாறானும்
திமிரிக்கோட்டைஷேக்முகம்மது கொலுவுக்குவாறானும்
வாலிகோட்டைஅப்துல்காதிரும் கொலுவுக்குவாறானும்
மதுரைசீமைமலையாளத்தானும் கொலுவுக்குவாறானும்
ஆரணிகோட்டைவெங்கடராயர் கொலுவுக்குவாறானும்
அரியலூர்பெரியதுரையும் கொலுவுக்குவாறானும்
ஆச்சிநாய்க்கன்பொம்மிநாய்க்கன் கொலுவுக்குவாறானு
எட்டியாபுரத்துபாளையக்காரன் கொலுவுக்குவாறானும்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரும் கொலுவுக்குவாறு
ஆற்காட்டுக்குஐங்காதவழியில்வந்துநிறைந்தாரும்[ராம்
பாளையக்காரர்வந்தசேதியை காதில்கேட்டானும்
சீமைக்குநாட்டார்வந்தசேதியை காதில்கேட்டானும்
சிங்ககுட்டிபோலபாளையக்காரரை கண்ணில்கண்டானும்

அந்தவேளையிலென்னசெய்கிறான் நவாப்புசைதுல்லா

நவாப்புபங்காருநாய்க்கனுக்கு சேனைகளையும்
கிஸ்தியையும் தயார்செய்யச்சொல்லல்

பெரியகணக்குபங்காருநாய்க்கனை கிட்டவரச்சொன்னார்
அண்ணாவாடா தம்பிவாடா பக்காருநாய்க்கா நீ
மூன்றுமாதத்திற்குகிஸ்திகட்டடா பங்காருநாய்க்கா நீ
நூற்றெழுபத்திரண்டு யானைக்காரருக்கு விருதுகட்டடா
அறுபதினாயிரம்ரேக்லாபீரங்கி தயார்பண்ணடா நீ [நீ
என்பதுகோடிபாரூதுப்பாக்கி தயார்பண்ணடா நீ
அதற்குத்தகுந்தகுண்டுமருந்து தயார்பண்ணடா நீ
ஐந்நூறுபேர்சமேதாருக்கு சேதிசொல்லடா நீ
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுக்குகிஸ்திகட்டடா நீ
வெள்ளைகூடாரம்பச்சைகூடாரம் தயார்பண்ணடா நீ
கணக்கில்லாதசேனைதளத்தை தயார்பண்ணடா நீ
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்பங்காருநாய்க்கனு
ஐம்பதுகோடிபீரங்கிகுண்டு தயார்பண்ணினானும் [ம்
அறுபதினாயிரம்பீரங்கிகுண்டு தயார்பண்ணினானும்
எண்பதினாயிரம்பீரங்கிகுண்டு தயார்பண்ணினானும்
நூறாயிரம்ரேக்லாகுண்டு தயார்பண்ணினானும்
இருபதினாயிரம்யானைகளையும் தயார்பண்ணினானும்
ஐம்பதினாயிரம்ஒட்டகங்களையும் தயார்பண்ணினானும்
எண்பதினாயிரம்பாலாயீட்டிகள் தயார்பண்ணினானும்
லக்ஷத்திருநூறுசிப்பாய்மார் தயார்பண்ணினானும்[னானும்
அவரவர்களுக்கேற்றவஸ்துக்களெல்லாம் தயார்பண்ணி
அறுபத்துநாலுசண்டாமரமும் தயார்பண்ணினானும்
பதிங்காதவழிபரவியிருக்குது நவாப்புபாளையமும்
அந்தவேளையி லென்னபண்ணினான் பங்காருநாய்க்கனு
சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா [ம்
பாளையமெல்லாம்தயாராச்சுது நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் நவாப்புசைதுல்லா
மாலுக்குள்ளேபுகுந்தானையா நவாப்புசைதுல்லா
காலுக்குத்தமான்போட்டானையா நவாப்புசைதுல்லா
இடுப்புக்குகச்சையிறுக்கிக்கட்டினான் நவாப்புசைதுல்லா
அங்கிதமான்போட்டானையா நவாப்புசைதுல்லா
தலைப்பாயெடுத்துதலையில்தரித்தான் நவாப்புசைதுல்லா
கலிக்கத்துருகட்டினானையா நவாப்புசைதுல்லா

பட்டாவுருவிக்கையிலேபிடித்தான் நவாப்புசைதுல்லா
தனக்குவளர்த்தபட்டத்துயானையை சல்திவரச்சொன்ன
ஆனைகொம்புக்குகத்திகட்டினன் நவாப்புசைதுல்லா[ன்
ஆனையைசுற்றிமுகமல்கட்டினன் நவாப்புசைதுல்லா
அம்பாரிக்குள்தொட்டில்கட்டினன் நவாப்புசைதுல்லா
ஆனையைதொட்டுசலாம்வாங்கினன் நவாப்புசைதுல்லா
வலதுகாலைத்தூக்கிகொடுத்தது பட்டத்துயானையும்
உலக்கையைபோட்டுசலாம்வாங்குது பட்டத்துயானையும்
இருப்புலக்கைகையிலிருக்குது யானைக்காறனும்
அல்லாகூ அல்லாகூவென்று யானையேறினனும்

நவாப்பும் மற்ற பாளையப்பட்டாரும் சேனைகளும்
செஞ்சிக்கு சண்டைக்கு வருதல்

செஞ்சிகோட்டைக்குபயணமென்று நகாரடித்தானும்
கணகணகணகணகணவென்று நகாருமுழங்குதுபார்
பளபளபளபளவென்று பட்டாக்கள்மின்னுதுபார்
தடதடதடதடதடதடவென்று தமுறுமுழங்குதுபார்
துந்துமிபேரிகைசில்லரிசல்லரி தொந்தோமெனவே
அவுதாவுருமாலைகள்வீசுகிருர்கள் நவாப்புக்காறனும்
வெள்ளைவெண்சாமரைபோடுகிருர்கள் நவாப்புக்காறனு
சரிகைவுருமாலைவீசுகிருர்கள் நவாப்புக்காறனும் [ம்
நெருங்கிக்கொண்டுவாராணையா நவாப்புசைதுல்லா
பதிங்காதவழிக்குப்பரவியிருக்கிறது நவாப்புபாளையமும்
எள்ளுபோட்டால்எள்ளுவிழாது நவாப்புபாளையத்தில்
கிள்ளினமண்ணுகீழேவிழாது நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலெங்கேவாருர் நவாப்புசைதுல்லா
திமிரிக்கோட்டையைதேடிவாருர் நவாப்புசைதுல்லா
ஒரேதினத்தில்வந்திறங்கினனையா நவாப்புசைதுல்லா
பங்காருநாய்க்கனைபக்கமழைத்தான் நவாப்புசைதுல்லா
சம்பளம்போடுரெவ்ஸ்துக்கள்போடு பங்காருநாய்க்கா நீ
இறங்கிசம்பளம்கொடுத்தானையா பங்காருநாய்க்கனும்
தண்டுக்குரவ்ஸ்துபோட்டானையா பங்காருநாய்க்கனும்
அவ்விடம்விட்டுபுறப்பட்டானையா நவாப்புசைதுல்லா
ஆரணிகோட்டையைதாண்டிவாருர் நவாப்புசைதுல்லா
அவ்விடமிறங்கிகூடாரம்போட்டு நவாப்புசைதுல்லா
அன்றிராத்திரிஅங்கேவந்தான் நவாப்புசைதுல்லா
போடுபோடென்றுவாராணையா நவாப்புசைதுல்லா

எரிஞ்சிக்கொண்டுவொரானையா நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டைக்குஐந்துநாழிவழி தேவனூர்பேட்
தேவனூர்பேட்டைஓரத்திலே சங்கராபரணியாறு [டை
சங்கராபரணிகரையில்வந்தது நவாப்புபாளையமும்
அண்ணைவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
தண்டுசேனையைபிரித்துபோடடா பங்காருநாய்க்கா நீ
தண்டுகடைசியில்கூடாரம்போடடா பங்காருநாய்க்கா நீ
தண்டுமுன்னேமோர்சாபோடடா பங்காருநாய்க்கா நீ
மெத்தையின்பேரிலேபீரங்கியேத்து பங்காருநாய்க்கா நீ
துருப்புகுதிரைசுற்றிலும்வையும் பங்காருநாய்க்கா நீ
ஒருபளுத்தாசல்தியாய்த்தாரும் பங்காருநாய்க்கா நீ
அந்தப்படியுத்தாரங்கொடுத்தான் நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
ஆராருக்குப்பயணஞ்சொல்ல நவாப்புசைதுல்லா
உத்தாரங்கொடுத்தநிமிஷநேரத்தில்பங்காருநாய்க்கனும்
ஜல்திஜல்திபளுத்தாதீர்த்தான் தேவனூர்பேட்டையில்
அந்தப்பளுத்தாகாதிலேகேட்டான் நவாப்புபாளையமும்
மரங்கள்மட்டைகள்தரித்துபோடுறர் நவாப்புபாளையமு
தேவனூர்பேட்டையையிடித்துபோடுகிறர் நவாபுபாளை
இனியில்லாதகொள்ளையிடுகிறர் நவாப்புபாளையமும் [யம்
அந்தவேளையிலென்னசெய்கிறன் ராஜாதேசிங்கு
புதுசெஞ்சியிலேபூசைபண்ணுகிறர் ராஜாதேசிங்கு [ம்
பழஞ்செஞ்சியிலேகார்பார்பண்ணுகிறர் சிற்றப்பராஜாவு
அலங்கத்துமேலேவழிப்பார்த்தான் சிற்றப்பராஜாவும்
கிடுகிடுவென்றுமயந்து நடுங்கி கீழேவிழுந்தாராம்
கீழேவிழுந்தசிற்றப்பராஜா திட்டென்றெழுந்தாராம்

**சிற்றப்பராஜன் தேசிங்குராஜனிடத்தில்**
**வந்து சொல்லுதல்**

மைந்தனருகிலோடிவந்தான் சிற்றப்பராஜாவும்
காஞ்சிநாதரைகாவேட்டிரங்கரை பூசைமண்ணுகிறனும்
ஸ்ரீஹரிகோவித்தாவென்று பூசைபண்ணுகிறனும்
அரிநமோநாராயணவென்று பூசைபண்ணுகிறனும்
கண்ணைமூடிபூசைசெய்கிறன் ராஜாதேசிங்கு
பூசைமுகத்தில்வந்துநின்றன் சிற்றப்பராஜாவும்
என்னபூசைபண்ணிறையடா மகனேதேசிங்கு
உன்பூசைமுகத்தில்யிடிவிழுந்தது மகனேதேசிங்கு

கோட்டையைச்சுற்றிவளைந்திருக்குது நவாப்புபாளையம்
பாதிபூசையைத்தள்ளிப்போட்டா மகனேதேசிங்கு
போப்புரூபணத்தைகட்டியனுப்பும் மகனேதேசிங்கு
இந்தச்சேதிகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
மூடினகண்ணை திறந்துபார்த்தான் ராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் சிற்றப்பராஜாவுக்குச் சொல்லல்

என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராஜாவே
அறுபதுவயதுசென்றவுமக்கு அறிவுகொஞ்சமில்லே
பூஜைமுகத்தைக்கெடுக்கவேண்டாம் சிற்றப்பராஜவே
கால்நாழிபொறுத்துகுதிரையை தயார்பண்ணசொல்லு
வெள்ளரிக்காய்வீசினாற்போலே வீசிப்போடுகிறேன்
பத்தல்பத்தலாகிழித்துபோடுகிறேன் நவாபுபாளையங்களை
சக்கைசக்கையாய்சிதைத்துபோடுகிறேன் சேனைகளையும்
அரைக்கால்நாழிபொறுத்துக்கொள் சிற்றப்பராஜாவே
தலைதலையாயுருட்டிபோடுகிறேன் தளங்களையெல்லாம்
கதறிபதறிசிதறிட்டோட கரிகளைவாட்டுகிறேன்
இந்தப்படிசெய்யாமற்போனால் என்பேர்தேசிங்கல்ல
டாருடாருய்கிழித்துபோடுகிறேன் நவாப்பையானாலும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் சிற்றப்பராஜாவும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
கண்ணைமூடிப்பூசைசெய்கிறான் ராஜாதேசிங்கு [ம்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்சுபங்கிதுரைதானு
திருவண்ணாமலை சுபங்கிதுரையும் நவாப்பு முன்னேவந்

சுபங்கிதுரை நவாப்பைக் கேட்குதல் [தான்

சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
இரண்டுநாழியிற்பிடித்துக்கொடுக்கிறேன் செஞ்சிகோட்
மூவாயிரம்வீடுகளிருக்குது தேவனூர்பேட்டை [டையை
கால்நாழிகொள்ளைகொடுமையா நவாப்புசைதுல்லா
நிமிஷநேரத்தில்பிடித்துவருகிறேன் நவாப்புசைதுல்ல
மூவாயிரங்குதிரையுடனே கொள்ளைக்குப்புறபட்டான்

சுபங்கிதுரை தேவனூரைக் கொள்ளையிடுதல்

தேவனூருக்குள்ளேபுகுந்தானேயா சுபங்கிதுரைதானும்
இனியில்லாதகொள்ளையிடுகிறான் சுபங்கிதுரைதானும்
வீடுவாசலையிடித்துபோடுகிறான் சுபங்கிதுரைதானும்

மாடமண்டபமிடித்துபோடுகிருன் சுபங்கிதுரைதானும்
ஆண்சிறைபெண்சிறைபிடிக்கிருன் சுபங்கிதுரைதானும்
மாடுகன்றுகள்மடக்கிபோடுகிருன் சுபங்கிதுரைதானும்
பெட்டிபேழைஎடுத்துடைக்கிருன் சுபங்கிதுரைதானும்
பொன்வெள்ளிமூட்டைகட்டுகிருர் சுபங்கிதுரைதானும்
அப்படிசிறையழித்துப்போடுகிருன்சுபங்கிதுரைதானும்
கொள்ளையடித்துவெளியில்வந்தான் சுபங்கிதுரைதானு
நவாபுபாளையம்வந்துசேர்ந்தான் சுபங்கிதுரைதானும்
இந்தப்படிக்குஇருக்கிருனையா நவாப்புசைதுல்லா
தேவனூரிலேயிருந்தஜனங்கள் திகைத்தோடிஞர்கள்
காடுமலேகள்செடிகளெல்லாங் கடந்தோடிஞர்கள்
கோவென்றசத்தமாச்சுதையா செஞ்சிகோட்டையிலே
அந்தவேளையிலென்னபண்ணுகிருர்குடியானமார்களும்
தலையிற்கையைவைத்துஅழுகிருர் குடியானமார்களும்
அந்தவேளையிலென்னசெய்கிருன் ராஜாதேசிங்கு
ஸ்ரீநந்தாகோவிந்தாவென்று தோத்திரஞ்செய்கிருன்
மங்கைலட்சுமிமணளாவென்று மனதில்எண்ணுகிருன்
பூசைமுகத்தில்வந்துசேர்ந்தார் குடியானமார்களும்

குடிகள் தேசிங்குராஜனிடத்தில் முறையிடல்

என்னபூசைபண்ணுறீரையா ராஜாதேசிங்கு
தேவனூரிலேகொள்ளையடிக்கிருன் சுபங்கிதுரைதானும்
வீடுவாசலேயிடித்துப்போட்டான் சுபங்கிதுரைதானும்
மாடுகன்றுகள்மடக்கிப்போடுகிருன் சுபங்கிதுரைதானும்
அகப்பட்டசிறையைபிடித்துபோட்டான் சுபங்கிதுரையு
பெட்டிபோச்சுதுபேழைபோச்சுது ராஜாதேசிங்கு [ம்
பெண்சாதிபோச்சுதுபிள்ளைபோச்சுதுராஜாதேசிங்கு
ரொக்கம்போச்சுதுரோசனம்போச்சுது ராஜாதேசிங்கு
நாங்களென்னமாய்பிழைக்கப்போருேம் ராஜாதேசிங்கு
கண்கள் நிறையதண்ணீர்விட்டார் குடியானமார்களும்
ஐயா நாங்களென்னசெய்குவோம் ராஜாதேசிங்கு
இத்தனைநாளும்சீராய்பிழைத்தோம் ராஜாதேசிங்கு
இன்றையகஸ்தியென்னசொல்வோம் ராஜாதேசிங்கு
தாமரையிலேயிற்றண்ணீர்போல தவிக்கிருேமையா
ஊரையுமெங்களைக்காக்கவேணும் ராஜாதேசிங்கு
கதறியழுதுபுலம்புகிருரையா குடியானமார்களும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு

தேசிங்கு குடிகளுக்குத் தேறுதல் சொல்லல்
பதறவேண்டாம்பதறவேண்டாம் குடியானமார்களே
என்சீமையில்தேவனூர்பேட்டைஒருகொள்ளைபோச்சுது
நவாப்புசீமையடங்கலும்கொள்ளையுங்களுக்குவாங்கித்தா
நமதுசீமையில்தமிழ்ச்சிறை யொன்றுபோச்சுது [ரேன்
துலுக்கன் சிறைபிடித்துத்தாரேன் குடியானமார்களே
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நான்வாங்கித்தாரேன்
ஒன்றுக்கு நீங்களஞ்சவேண்டாம் குடியானமார்களே
பூசைமுகத்தைக்கெடுக்கவேண்டாம் குடியானமார்களே
ஆனால் நல்லதாகட்டுமென்று அப்புறம்போனார்கள்
கண்ணைமூடிப்பூசைபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் அவனிடதாயாதி
தேசிங்குராஜன்தாயாதியையா தன்சிங்குராஜாவும்
ஒற்றைக்குதிரைபோட்டுக்கொண்டு ஓடிவந்தானெதிரே
தன்சிங்குராஜன் தேசிங்குராஜன் முன்வந்து சொல்லல்
என்னபூசைபண்ணினீரையா ராஜாதேசிங்கு
தேவனூருகொள்ளையாய்ப்போச்சு ராஜாதேசிங்கு
கோட்டையேறிகுதிக்கிறாரையா நவாப்புபாளையமும்
இந்தப்படிக்குசொல்லி நின்றான் தன்சிங்குராஜாவும்
கண்ணைவிழித்துப்பார்த்தானையா ராஜாதேசிங்கு
பாதிபூசைதள்ளிவிட்டான் ராஜாதேசிங்கு
கனைத்துக்கதும்பிஎழுந்தானையா சிப்பாய்தேசிங்கு
ரங்கர்கோயிலில் துலுக்கன்புகுந்தால்எனக்கென்னபூஜை
துலுக்கனைவெட்டிபூசைசெய்கிறேன் தன்சிங்குராசாவே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தன்சிங்குராசனும்
ஆனால் நல்லதாகட்டுமென்றான் தன்சிங்குமகாராசன்
அந்தவேளையிலென்னபண்ணுகிறார் ராசாதேசிங்கு
சிங்காரமாலிலேவந்தானையா ராசாதேசிங்கு
திருமண்பெட்டியைக்கையிலெடுத்தான் ராசாதேசிங்கு
முத்துப்போலவே திருமண் அங்கேநெற்றியிலிட்டானும்
காலுக்குகுடுத்தினிபோட்டானையா ராசாதேசிங்கு
இடுப்பில்கச்சையிறுக்கிக்கட்டினான் ராசாதேசிங்கு
சரிகையுருமாலைதலையிற்கட்டினான் ராசாதேசிங்கு
மார்புக்குகவசம்போட்டானையா சிப்பாய்தேசிங்கு
அங்கியெடுத்துமேலுக்குபோட்டான் ராசாதேசிங்கு
ஐந்துதுலாம்பரிசைகத்தி கையிலெடுத்தானும்

ஏழுதுலாம்பிரிசைகத்தி கையில்பிடித்தானும்
சிங்கம்போலுட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
செயராமுகங்காராமு கொலுவுக்குவந்தாராம்
சிற்றப்பதுரைதரணிசிங்கு கொலுவுக்குவந்தாராம்
நத்தர்சிங்குகோபால்சிங்கு கொலுவுக்குவந்தாராம்
ராமுசிங்குலட்சுமணசிங்கு கொலுவுக்குவந்தாராம்
ராமுதாரிலட்சுமணதாரி கொலுவுக்குவந்தாராம்
மான்சிங்குகிருபுசிங்கு கொலுவுக்குவந்தாராம்
ஒரேகும்பலாய்கூடினரையாமுந்நூறுசனமுந்தான்
ராமுராமுரேசீதாராமுரே ராசாதேசிங்கு
பதில்சலாமுங்கொடுத்தானையா சிப்பாய்தேசிங்கு
சிப்பாய்மார்களைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
ஐயாகேளுமையாகேளும் ராசாதேசிங்கு
எண்பதினாயிரம்குதிரையிருக்குது நவாப்புக்காரனும்
லக்ஷம்பேர்சிப்பாயிருக்கிறார் நவாப்புக்காரனும்
மூந்நூறுகுதிரைஎனக்கிருக்குது சிற்றப்பராஜாவே
இந்தக்குதிரையெனக்குப்போதாதா சிற்றப்பராஜாவே
தேசிங்கு மோவுத்துக்காரனை அழைக்கச்சொல்லல்
மூந்நூறுகுதிரைக்குதுடியானவன் ஒற்றைக்குதிரைக்காரன்
வழுதாவூரிலிருக்கிறானையா மாப்பிள்ளைராயனும்
இரண்டு நிமிஷத்திலழைப்பிக்கவேணும் சிற்றப்பராஜாவே
சல்திசல்தியென்றுசொன்னான் ராஜாதேசிங்கு
ஆனால்நல்லதாகட்டுமென்றான் சிற்றப்பராஜாவும்
ஓலையெழுதிகையிலேகொடுத்தான் அர்க்காருமாருக்கு
மூன்றுபேர் அர்க்காருமாரை சல்தியிலழைத்தானும்
ஓலையெடுத்துகையில்கொடுத்தான் அர்க்காருமாருக்கு
சல்திசல்தியென்றுசொன்னான் சிற்றப்பராஜாவும்
சலாம்வாங்கிதிரும்பினரையா அர்க்காருமார்களும்
செஞ்சிகோட்டைக்கும்வழுதாவூருக்கும் முக்காதவழி
மூன்றுநாழியில்போய்ச்சேர்ந்தாகள் அர்க்கார்மார்களும்
அந்தவேளையி லென்னபண்ணுகிறான் மோவுத்துக்காரனும்
கலியாணமுங்கூடியிருக்குது மோவுத்துகாரனுக்கு
கையிற்கங்கணங்கட்டியிருக்கிறான் மோவுத்துகாரனும்
கலியாணப்பந்தல் ஜோடித்திருக்குது மோவுத்துகாரனுக்கு
கர்ணபூரிபாங்காமுழங்குதுவழுதாவூருக்குள்ளே

மஞ்சள்கங்கணம்கட்டியிருக்குது மோவுத்துகாரனுக்கு
சரிகைவுடுப்புதரித்திருக்கிறன் மோவுத்துகாரனும்
அல்லாவே அல்லாவேயென்று தாலிகட்டபோருன்
ராமாராமாவென்றுசொல்லி தாலிகட்டபோருன்
அந்தவேளையிலென்னசெய்கிருர் அர்க்காருமார்களும்
ராமுராமுரேசீதாராமுரே மோவுத்துக்காரனே
உங்கள்ராஜாசிங்கிதக்காரன் ஓலைய னுப்பிவைத்தான்
இந்தஓலையைவாசித்துப்பார்த்து என்னையனுப்புமையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துகாரனும்
இடதுகையில்ஓலையைவாங்கினன் மோவுத்துக்காரனும்
ஓலையைப்பிரித்துபார்த்தானையா மோவுத்துக்காரனும்
கலகலவென்றுசிரித்தானையா மோவுத்துக்காரனும் [ம்
மண்டிபோட்டெழுந்துட்கார்ந்தான் மோவுத்துகாரனு
தாலியைக்கொண்டுதட்டில்வைத்தான்மோவுத்துகாரனு
பட்டாவுருவிகையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்

## மோவுத்துகாரன்கலியாணப்பந்தலிலுள்ளவர்களை செலவு கேட்கல்

சலாமையாசலாமையா சபையிலுள்ளபேரே
சந்தோஷமாகசெலவுதாரும் சபையிலுள்ளபேரே
அண்ணமாரேதம்பிமாரே டலாய்த்துதுரைமாரே
பச்சைப்பந்தலில்சுகமாயிருங்கள் பட்டாணிதுரைமாரே
கத்திமுனையிலேசோறுதின்கிற கர்னட்டுதுரைமாரே[ரே
நானொருபேச்சி சொல்கிறேன்கேளும் சபையிலுள்ளபே
நானும்போறேன் நவாபுதண்டுக்கு நல்லசண்டைசெய்ய
எதிராளியான நவாப்புதண்டு இடுப்புகட்டிப்போறேன்
பகையாளியான நவாப்புதண்டு பக்கத்தில்விழுந்துதாம்
எதிராளியான நவாப்புதண்டுக்குஇடுப்புகட்டிபோறேன்
சத்துருவான நவாப்புமேலேசண்டைக்குபோறேன்
ஆற்காட்டிலுள்ளவீதியெல்லாம் அத்துவானம்பண்ணி
நவாப்பைவெட்டிதாலிகட்டுகிறேன் பட்டாணிதுரைமா
நானிப்போதுபோய்வருகிறேன் சபையிலுள்ளபேரே
என்றுசலாம்வாங்கிதிரும்பினனையா மோவுத்துக்காரனும்
அந்தப்பேச்சைகாதில்கேட்டாள் அவனைப்பெற்றதாயும்
சையதுசாயபும்தாயாருமாக சல்திஓடிவந்தார்
எதிரினில்வந்தமகனை நிறுத்தி எந்திமுத்தமிட்டாள்

மகனிட முகத்தை கண்ணாலேகண்டு மாதாஎன்னசொல்
வயிற்றில்பத்துமாதஞ்சுமந்து மகனைப்பெற்றேனே[வா
ஈஎறும்பு அண்டவொட்டாமல் இருந்துகாத்தேனே
தரையில்விட்டால்மண்படுமென்று தாவிவளர்த்தேனே
மெத்தபுத்திசாலியென்று மேன்மையுற்றேனே [ய்
சற்றும்யோசனையில்லாமல் நீசண்டைக்கு போறேனென்
என்னகாரியம்முழுகிப்போச்சி எந்தன்கண்மணியே
சந்தனம்பூசிசண்டைக்குபோனால் சல்திகுண்டுபாயும்
கங்கணம்கட்டிசண்டைக்குபோனால் கடுககுண்டுபாயும்
மஞ்சளுடுத்திசண்டைக்குபோனால் மகனைகாணமாட்டே
தாலிகட்டிவிருந்துபொசித்து சந்தோஷமாயிருந்து[ன்
வந்தபேருக்குமரியாதைசெய்து மகிழ்வாயனுப்பிவிட்டு
இன்றைக்கிருந்து நாளைக்குபோடா எந்தன்கண்மணியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துகாரனும்
அம்மாகேளும்அம்மாகேளும் என்னைப்பெற்றதாயே
என்னிடராஜன்சிநேகிதக்காரன் ஒழுதியனுப்பினான் [ம்
நவாப்புஜெனமும்செஞ்சியில்வந்து அலங்கமேறினா
இரண்டுநாழியில்நவாப்பைவெட்டி ரத்தகளரிபண்ணி
ஆற்காடுநகர்வீதியெல்லாம் அத்துவானம்பண்ணி
செஞ்சிராஜனுக்குமகுடஞ்சூட்டி சிறைகொண்டுவாரேன்
நவாப்புமகளைத்தாலிகட்டுகிறேன் என்னைபெற்றதாயே
கட்டாமற்போனால்நவாபுகையில் கடுகசெத்துபோறேன்
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவுஇருக்குதுதலைமேலே
பிள்ளைபிறந்தால்சண்டைமுகத்தில் பேரெடுக்கவேணும்
மைந்தன்பிறந்தாலன்னங்கொடுத்துமகிழ்ச்சியாகவேணு
உந்தன்வயிற்றில்பிள்ளைபிறந்து ஊதாரியாவேனோ [ம்
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு என்னைப்பெற்றமாதாவே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது என்னைபெற்றதாயே
இரணக்களத்தில்செத்துப்போனால் நல்லபதவியுண்டு
கத்திமுனையில்சாவேனேயானால் கனத்தபதவியுண்டு
ஈட்டிமுனையில்சாவேனேயானா லினியபதவியுண்டு[ண்டு
சண்டைமுகத்தில்செத்தேனேயானால் ஜல்திமோட்சமு
குண்டுமுகத்தில்செத்தேனேயானால் கோடிலாபமுண்டு
மருந்துபுகையில்சாவேனேயானால் மகாபதவியுண்டு
என்றைக்கும்பேரிருக்கவேணும் இந்தவுலகினிலே
புல்லும்பூமியுள்ளவரைக்கும் பேரெடுக்கவேணும்

சண்டைகெலித்துவந்தேனேயானால் தாலிகட்டுகிறேன்
போரைகெலித்துவந்தேனேயானால் புகழ்ந்துகட்டுகிறே
மாண்டுமெடிந்துபோவேனேயானால் மனதுகலங்காதே
சந்திரசூரியருள்ளவரைக்கும் தாயேபெற்றவளே
வருஷமொருதிருநாள்செய்ய மனுவுகேட்கிறேனன்
உற்றுருறவோருள்ளவறைக்கும் வருசுசெய்யவேணும்
போய்வாரேன்போய்வாரேனிப்போ புண்யவதிதாயே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டு அலறிவிழுந்தாளாம்[ம்
மைந்தன்பேச்சைகாதிலேகேட்டுமண்மேல்விழுந்தாளா
கங்கணக்கையைபார்த்துப்பார்த்துக் கதறியழுதாளாம்
மஞ்சளுடுப்பைபார்த்துப்பார்த்து மயங்கியழுதாளாம்
முகத்திஞெளியைக்கண்டுவருந்தி மூர்ச்சையானாளாம்
கலியாணப்பெண்ணைகண்டுமெலிந்துகலங்கியழுதாளாம்
இந்தவிதிக்குஇவ்வகைசெய்தோமென்றுமெலிந்தாளா
சந்தோஷகாரியந்தடங்கலாச்சுஎன்றுமெலிந்தாளாம்[ம்
பந்தலைவிட்டுவெளியேவந்தான் மோவுத்துக்காரனும்
குதிரைலாயத்தில்வந்தானேயா மோவுத்துக்காரனும்
மூந்நூறுகுதிரைக்குதுடியானகுதிரை நீலவேணிகுதிரை
நீலவேணியருகில்வந்தானேயா மோவுத்துக்காரனும்
கழுத்துகயிற்றைகால்கயிற்றை கத்தியால்வெட்டினும்

மோவுத்துக்காரன் குதிரையேறுதல்

நெற்றிமயிரைப்பிடித்தானேயா மோவுத்துக்காரனும்
பிடித்தேறினமோவுத்துக்காரனை கண்ணுல்கண்டது
பரதநாட்டியமாடிவருகிறது நீலவேணிகுதிரை
கண்ணில்கண்டான்கோபமாச்சுது மோவுத்துகாரனுக்கு
கோபத்திஞலேசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
பின்னுலேயிழுத்துப்போகுதுபாரு நீலவேணிகுதிரை
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துக்காரனும்
என்னமோசம்பண்ணிணுயடா நீலவேணியே
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் நீலவேணியேநீ
சண்டைகெலித்துவந்தேனேயானால் நீலவேணியே
உனக்கு-தங்கத்தாலேஜீனிபோடுகிறேன் நீலவேணியே
என்று-நீலவேணிக்குசலாம்வாங்கினான் மோவுத்துக்கா
சலாம்வாங்கிதிரும்பினானேயா நீலவேணிமேலே [ரனும்
மேகம்போலேபறக்குதையா நீலவேணிகுதிரை
குதிரைகணைப்புத்தெரிந்ததாழிக்கு குதிரைதெரியவில்லை

கத்திமின்னல்தெரிந்தநாழிக்கு அவனேதெரியவில்லை
எரிந்துகொண்டுவாரானேயா மோவுத்துக்காரனும் [ம்
கோட்டையைசுற்றிவளைந்திருக்குது நவாப்புபாளையமு
நவாப்புபாளையங் கண்ணாலெல்கண்டான் மோவுத்துகாரனு
கலகலவென்றுசிரித்தானேயா மோவுத்துக்காரனும் [ம்
பாளையஞ்சுற்றிபோவோமென்று விரண்டுநாழிசெல்லும்
பாளையங்குறுக்கேபோருனேயா நீலவேணிமேலே
ஒற்றைகுதிரையைகண்ணாலேகண்டார் நவாப்புபாளையத்
மூந்நூறுகுதிரையுடனே முன்னேஓடிவந்தான் [தில்
மூந்நூறுகுதிரையைகண்ணால்கண்டான் மோவுத்காரனு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு [ம்
கறகறவென்றுசுழலுதுபாரு நீலவேணிகுதிரை
கால்கயிற்றைகழுத்துகயிற்றை அவிழ்க்கநேரமில்லை
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
சிமிட்டாகொடுத்தநிமிஷநேரத்தில் நீலவேணிகுதிரை
தாண்டிதாண்டிதரைமண்டலங்கொண்டது நீலவேணி
ஆறுகுளங்கள்தாண்டிவிழுகுது நீலவேணிகுதிரை [யும்
போடுபோடென்றுபோகுதையா நீலவேணிகுதிரை
லகானுமில்லைஜீனியுமில்லை நீலவேணிக்கு
குறடாயில்லைசேர்பந்தியில்லை நீலவேணிக்கு
கால்கயிற்ரேடேஓடிவருகுது நீலவேணிகுதிரை
கழுத்துக்கயிற்ரேடேவோடிவருகுது நீலவேணிகுதிரை
பெரியபெரியகல்லுகளெல்லாம் புரண்டுபோகுதுபார்
சின்னசின்னகல்லுகளெல்லாம் செந்தூளாகுதுபார்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கிநடுங்குதுபார்
காற்றுபோலேபறந்துவருகுது நீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிகைக்கு மூந்நூறுகுதிரையும்
கரணைகரணையாய்விழுந்துபோச்சுது நவாபுபாளையமும்
அல்லோலகல்லோலமாகுதையா நவாபுபாளையமும் [து
கட்டியிருந்தகுதிரைகளெல்லா மறுத்துக்கொண் டோடு
சோறுதின்கிறசிப்பாய்மார்களும் சுருட்டியோடுகிறூர்கள்
பாராயிருக்கிறசிப்பாய்மார்களும் பதுங்கியோடினூர்கள்
ஓடுகிறபேரைக் கண்ணினூற்கண்டான் மோவுத்துகாரனு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு[ம்
நடுவேவிட்டுபிளந்தானேயா நவாப்புபாளையத்தை
இவனையெதிர்ப்பார்ஒருவருமில்லை நவாப்புபாளையத்தில்

இரண்டு நாழிக்குள் வந்துசேர்ந்தான் செஞ்சி கோட்டை
சிங்காரமாலிலேவந்தானையா மோவுத்துக்காரனும் [க்கு
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துக்காரனும்
ராஜாபேட்டிக்குவாரானையா மோவுத்துக்காரனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கினன் மோவுத்துக்காரனும்
என்னகாரியம்பண்ணினீரையா ராஜாதேசிங்கு
இத்தனைமறதியுனக்கேனைபா ராஜாதேசிங்கு
இரண்டு நாழிக்குமுன்னேசொன்னால் தான்வரமாட்டே
இத்தனை நாழி நவாப்புஜெனமும் இங்கேயிருக்குமா[னே
சல்திசல்தியுத்தாரந்தாரும் ராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
கண்ணாலேகண்டான்கோபமாச்சுது ராஜாவுக்கானாலும்
என்னகாரியம்பண்ணினாயடா மோவுத்துக்காரனே
கல்யாணவுடுப்புகட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரனே
கங்கணங்கையிற்கட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரா நீ
கஸ்தூரிசந்தனம்பூசியிருக்கிறாய் மோவுத்துக்காரா நீ
தாலிகட்டிவந்தாயோயில்லையோ மோவுத்துக்காரா நீ
சல்திசல்திசொல்லுமென்றான் ராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துக்காரனு
என்னபேச்சுபேசினீரையா ராஜாதேசிங்கு [ம்
கத்திபிடித்தசிப்பாய்மாருக்கு பெண்சாதிஎன்னத்திற்கு
நானொருபெண்ணைதாலிகட்டுவேனோ ராஜாதேசிங்கு
நவாப்பைவெட்டி நவாப்புமகளைத் தாலிகட்டவேணும்
ஆற்காட்டிலேகலியாணம்பண்ணுகிறேன்ராஜாதேசிங்கு
என்-கலியாணத்திற்குநீவரவேணும் ராஜாதேசிங்கு
நல்லதந்தபேச்சிருக்கட்டும் ராஜாதேசிங்கு
நீர்வாரீரோதான்போகட்டுமோ ராஜாதேசிங்கு
சல்திசல்தியுத்தாரந்தாரும் ராஜாதேசிங்கு
கனைத்துகதும்பியெழுந்தானையா மோவுத்துக்காரனும்
அந்தப்பேச்சுகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு [லும்
சந்தோஷம் வந்துமூண்டுக்கொண்டது ராஜாவுக்கானா
மோவுத்துகாரனைகிட்டவழைத்து கையைப்பிடித்தானும்
கையைப்பிடித்துதழுவினானையா ராஜாதேசிங்கு
ஐயாகேளுமையா கேளும் மோவுத்துக்காரனே
ஒருவனாய்சண்டைபோடவேண்டாம்மோவுத்துகாரனே
நானுங்கூடவருகிறேனப்பா மோவுத்துக்காரனே

இனொருசேதிசொல்கிறேன்கேளுமோவுத்துக்காரனே
கலியாணம்பண்ணிமூன்றுவருஷம் மோவுத்துக்காரனே
பெண்சாதிமுகத்தைபார்த்துவாரேன்மோவுத்துகாரனே
ஆனால்நல்லதாகட்டுமென்றான் மோவுத்துக்காரனும்
அந்தநாழிக்கேயோடிவந்தான் ராஜாதேசிங்கு
சிற்றப்பராஜாவிட்டேவந்தான் சிப்பாய்தேசிங்கு
ஐயாகேளுமையாகேளும் சிற்றப்பராஜாவே [வே
நவாப்பு மேலேசண்டைக்கு போகிறேன் சிற்றப்பராஜா
பெண்சாதிமுகத்தைபார்த்துப்போகிறேன்சிற்றப்பராஜா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் சிற்றப்பராஜாவும்
என்னகாரியம்பண்ணிணையடா குழந்தைதேசிங்கு
நீபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
இராணிபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
உன்-குதிரைபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
சண்டைபிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
இந்நாலும்பிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
இன்றைக்கிருந்துநாளைக்குபோனால் மகனேதேசிங்கு
சண்டைகெலித்துவருவாயோடா மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா சிப்பாய்தேசிங்கு
என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராஜாவே
நானொருசேதிசொல்கிறேன்கேளும் சிற்றப்பராஜாவே
இத்தனைநாளும்நவாப்புஜனங்க ளிங்கேவந்ததோ
கோட்டையைசுற்றிவளைந்திருக்குது நவாப்புபாளையமும்
கோட்டையைகொள்ளையடித்தாரையாசிற்றப்பராஜாவே
ரங்கர்கோயிலில்துலுக்கன்வந்தால் சும்மாயிருப்பேனோ
டாறுடாருய்கிழித்துப்போடுகிறேன் நவாப்புபாளையத்தை
நவாப்பைவெட்டிசெஞ்சிக்குவாரேன்சிற்றப்பராஜாவே
இராஜகுலத்தில்நானும்பிறந்தேன் ரோஷக்காரனாக
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு சிற்றப்பராஜாவே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது சிற்றப்பராஜாவே[வே
நான்-முன்வைத்தகாலைபின்வைப்பேனோ சிற்றப்பராஜா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் சிற்றப்பராஜாவும்
என்னபேச்சுபேசினையடா மகனேதேசிங்கு
என்வார்த்தைநீகேட்கிறதில்லை மகனேதேசிங்கு
உன்னையெடுத்துநானும்வளர்த்தேன் மகனேதேசிங்கு

உன்னிட்சோறு நான் தின்னவில்லை மகனேதேசிங்கு
எந்தன்சோறு நீயேதின்றாய் மகனேதேசிங்கு
ஆறுமாதம்ஆகாதென்று நம்மிடகுருசொன்னார்
மூன்றுமாதம்ஆச்சுதடா மகனேதேசிங்கு
இன்னம்-மூன்றுமாதம்போகவேணும் மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
கண்கள்சிவந்துகோபமாச்சுது ராஜாவுக்கானுலும் [ம்
கோபம்வருவதைகண்டாலேகண்டான் சிற்றப்பராஜாவு
நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் மகனேதேசிங்கு
நடுவில்திரையைபோடச்சொல்லும் மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
ஆனல் நல்லதாகட்டுமென்றான் சிப்பாய்தேசிங்கு
பெரியஅரண்மனைவாரானேயா ராஜாதேசிங்கு

தேசிங்கு ராணியிடம் வருதல்

ராணியரண்மனைவந்துநின்றான் ராஜாதேசிங்கு
அதற்குமுன்னமேதிரைகட்டினார் சோபுதார்மார்களும்
சோபுதார்மாரைக்கண்டாலேகண்டான் ராஜாதேசிங்கு
சல்திசல்தியிராணியையழையும் சோபுதார்மார்களே
சோபுதார்மாரைக்கண்டாலேகண்டான் ராஜாதேசிங்கு
என்றவுடனேசோபுதார்மார்கள் இசைந்ததோழிமாரும்
அழைத்து மன்னன் ராணியைநீங்கள் கூட்டிவாவென
நல்லதென்றுதாதிமார்கள் நடந்தார்கள் அப்போதுவே
அம்மாகேளும்அம்மாகேளும் எங்கள்மாதாவே
எங்களையாளுமராசாவிப்போ உங்களையழைக்கச்சொன்ன
இந்தச்சேதியைகாதிலேகேட்டாள் ராணியம்மாளும் [ர்
மயிலைக்குயிலைமருளச்செய்யும் மாதுராணியம்மாள்
அன்னநடையைபின்னிடச்செய்யும் அன்னேராணியம்மா
சந்தோஷங்கள்மிகவுண்டாகி சரீரம்பூரித்தாள் [ள்
மெத்தமனதிலாச்சரியமாக வியப்பினைக்கொண்டாள்
ராஜனழைத்தகாரியமறிய நலமாயெழுந்திருந்தாள்
சிங்காதனம்விட்டுகீழேகுதித்தாள் மாதுராணியம்மாள்[ள்
மஞ்சள் நீர்சாலையில்வந்துபுகுந்தாள்சுந்தரராணியம்மா
சுத்தஜலத்தில்ஸ்நானஞ்செய்தாள் சுந்தரராணியம்மாள்
கஸ்தூரிமஞ்சள் நறுத்துலக்கினாள் கனகராணியம்மாள்
இந்திரவர்ணப்பட்டுடுத்தினாள் எங்கள்ராணியம்மாள்
சீவிவகுத்துகொண்டையிட்டாள் திகழும்ராணியம்மாள்

வண்ணவிழிக்குமையிட்டாளே மாதுராணியம்மாள்
சந்திரபிறைபோல்பொட்டுமிட்டாள் தங்கராணியம்மாள்
கச்சைக்கொண்டைமுடித்தாளையா காதலிராணியம்மாள்
ரத்தினத்தாலேகோங்குமல்லிகை நாயகிமார்தரித்தார்
முத்துக்குச்சிகொப்புதொங்கல் மூடியதொங்கவிட்டார்
ரவைகளிழைத்தகம்மல்ஜிமிக்கைநற்கொப்புமயிர்மாட்டி
நாணிலம்புகழுங்கத்திரிபாவல் நலமாய்த்தரித்தார்கள்
கண்டசரங்கள்மோகனமாலை கழுத்திற்றரித்தார்கள்
கடகங்கங்கணம்பொன்னின்வளையல் கையிற்றரித்தார்கள்
இடையில்ஒட்டியாணம்கொலுசு இனிப்பாய்மாட்டினார்க
கலகலெனச்சுருள்கொலுசுகள் காலில்கொஞ்சிடவே [ள்
அரசனிருக்கும்மரண்மனைக்குள்ளே வாறாள்ராணியம்மா
திரைக்கப்பாலேவந்துநின்றான் ராணியம்மாளும் [ள்
கலகலவென்றிடுஞ்சத்தம்ராஜன் காதில்தான்கேட்டான்
திரையைப்பார்த்துகோபங்கொண்டான்ராணியம்மாளும்
என்னையழைத்தகாரியமென்ன நடுவிலேதிரையென்ன
இந்தப்பேச்சைகாதில்கேட்டான் ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்லுகிறேன்கேள் எந்தன்ராணியே
நவாப்புமேலே சண்டைக்குபோகிறேன் எந்தன் ராணி
உனக்குச்சொல்லிப்போகவந்தேன் எந்தன்ராணியே[யே
சல்திசல்தியுத்தாரந்தாரும எந்தன்ராணியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் ராணியம்மாளும்
என்னபேச்சுபேசினீரையா எந்தன்பிராணநாதா
ஐந்துவருஷஞ்சண்டைசெய்யலாம்நமதுகோட்டையில்
கோட்டையைவிட்டுபோகவேண்டாம்என்பிராணநாதா
இந்தச்சேதிகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
என்னபேச்சுபேசினாயடி எந்தன்கண்மணியே
பெண்புத்திசண்டைக்கேற்குமோ என்பிராணநாயகியே
நானிப்போதேபோய்வருகிறேன் என்பிராணநாயகியே
கலியாணம்பண்ணிமூலையில்வைத்தீர் என்பிராணநாதா
நான்சந்தோஷசுகங்களொன்றுமறியேன் பிராணநாதா
நீர்சண்டைக்குபோகவேண்டாமையா என்பிராணநாதா
எந்தன்பேச்சுதடுத்துபோறீர் என்பிராணநாதா
சண்டைபண்ணிஜெயிக்கமாட்டீர்என்பிராணநாதா
இந்தசவுரியமிருக்கவேண்டும் என்பிராணநாதா
சண்டைக்குப்பயந்துவந்திரானால்என்பிராணநாதா

கோட்டைக்கதவைசாத்திபோடுவேன்என்பிராண நாதா
அலங்கத்துமேல்பீரங்கியேத்துவேன் என்பிராண நாதா
அடியோடே நான்கொளுத்திபோடுவேன் பிராண நாதா
ஆனுல்சுகமாய்ப்போய்வாரும் என்பிராண நாதா
கலகலவென்றுசிரித்தானேயா ராஜாதேசிங்கு
நானொருபேச்சு சொல்கிறேன் கேளும்எந்தன்ராணியே
எந்தன்மேலேகோபம்வேண்டாம்என்பிராண நாயகியே
நானிப்போதேபோய்வருகிறேன் பிராண நாயகியே [யே
கோட்டை பத்திரம்பார்த்துக் கொள்ளும் எந்தன்ராணி
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் ராணியம்மாளும்
பாக்குவெற்றிலைகையிலேபிடித்தாள் ராணியம்மாளும்
திரைக்குள்ளேகையை நீட்டினுரையா ராஜாதேசிங்கு
பாக்குவெற்றிலைகையிலேபிடித்தாள் ராணியம்மாளும்
இராஜன்கையைஉள்ளுக்கிழுத்தாள் ராணியம்மாளும்
கையைப்பார்த்து அழுகிறுளேயா ராணியம்மாளும்
என்னகாரியம்பண்ணினீரையா என்பிராண நாதா
கையித்தனையழகாயிருக்குதே என்பிராண நாதா
முகமெத்தனையழகாயிருக்குமோ என்பிராண நாதா
பாவி நான்செய்தபாவமிதுதானே என்பிராண நாதா[தா
என்தலையெழுத்து மிப்படியிருக்கிறதோ என்பிராண நா
கையையெடுத்துக்கண்ணிலொத்தினுள் ராணியம்மாளும்
கதறியழுதுபுலம்பினுளேயா ராணியம்மாளும்
கண்ணீர்ஜலமுங்கையிலேகண்டான் ராஜாதேசிங்கு
என்னகாரியம்பண்ணினுயடி எந்தன்ராணியே
நானிப்போதேபோய்வருகிறேன் எந்தன்ராணியே
இராணிவசத்தைவிட்டுவாருன் ராஜாதேசிங்கு

தேசிங்கு ராணியிடம்விட்டுக் கொலுவுக்குவருதல்

சிங்காரமாளிகையில்வந்தானேயா ராஜாதேசிங்கு
கண்ணேயுருட்டிகதும்பினுனேயா ராஜாதேசிங்கு
சல்திசல்திகுதிரைகொண்டுவாரும் அர்க்காருமார்களே
சலாம்வாங்கித்திரும்பினுனேயா அர்க்காருமார்களும்
குதிரைலாயத்தில்வந்தாரையா அர்க்காருமார்களும்
குதிரைப்பாகரைகண்டுசொல்கிறுர் அர்க்காருமார்களும்
சல்திசல்திகுதிரைகொண்டுவா குதிரைப்பாகரே
ஆனுல்நல்லதாகட்டுமென்றுன் குதிரைப்பாகனும்
தாலுகாலுக்குவண்டயம்போட்டார் பாராசாரிக்கு

நடுவிலேசுங்குவிட்டாரையா பாராசாரிக்கு
கழுத்திலேசரம்போட்டாரையா பாராசாரிக்கு
கன்னத்துக்குக்கண்ணாடிகட்டினாரையா பாராசாரிக்கு
தங்கத்தாலேஜீனிபோட்டார் பாராசாரிக்கு
வாய்க்குத்தங்கக்கடிவாளம்போட்டார் பாராசாரிக்கு
குதிரையைக்கொண்டு நிறுத்தினாரையாகுதிரைப்பாகரும்

தேசிங்குராஜன் குதிரைவந்ததைக் காணல்

குதிரைவந்ததைக்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு
தனக்கென்று வளர்த்தபாராசாரியை முன்னேவரச்சொ[ன்னான்
முன்னேவந்துநிற்குதையா பாராசாரியும்
குதிரைக்குச்சேதிசொல்லிவருகிறானையா ராஜாதேசிங்கு
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் பாராசாரியே
சண்டைகெலித்துவந்தேனானால் பாராசாரியே
தங்கத்தாலேமுத்திரைப்போடுகிறேன் பாராசாரியே

குதிரை விசனப்பாடல்

சாகிறோமென்றுதெரிந்துதையா பாராசாரிக்கு
கோடுகோடென்று அழுகுதையா பாராசாரியும்
தரையைத்தரையைபார்க்குதந்த பாராசாரியும்
பூமியிற்காலைபுரட்டுதந்த பாராசாரியும்
வாயைச்சும்மாமெல்லுதந்த பாராசாரியும்
மிரளமிரளக்கண்ணைச்சுழற்றுது பாராசாரியும்
திரேகம்படபடவென்று நடுங்குது பாராசாரிக்கு
வாலைச்சுழற்றிவிசிறிதட்டுது பாராசாரியும்
குதிரைமுகத்தைகண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு

தேசிங்கு பாராசாரிக்குதிடஞ்சொல்லல்

என்னகாரியம்பண்ணினாயடா பாராசாரியே
பன்னீராயிரம்வராகன்கொடுத்து உன்னைவாங்கினேனே
முப்பதினாயிரம்வராகன்தின்றாய் பாராசாரியே
தண்ணீர்வைத்தாலாகாதென்று சாராயம்வைத்தேனே
கொள்வைத்தாலாகாதென்று கடலைவைத்தேனே
மெத்தைபோட்டுவளர்த்தேனுன்னை பாராசாரியே
ஆயிரங்கட்டுபுல்லிலே நல்ல ஒருகட்டுபுல்லையும்
பொறுக்கிபோட்டுவளர்த்தேனடா பாராசாரியே
சாகத்தாஞ்பயப்பட்டாய் நீ பாராசாரியே
ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவு பாராசாரியே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது பாராசாரியே

சண்டைமுனையிலேசெத்தோமானால் பாராசாரியே
சல்திமோட்சங்கிடைக்குமோடா பாராசாரியே
நீசெத்தயிடத்தில்தானும்சாகிறேன் பாராசாரியே
ஒன்றுக்கும்அஞ்சவேண்டாம்நீ பாராசாரியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டது பாராசாரியும்

பாராசாரி தைரியங்கொள்ளல்

சந்தோஷமாககனைத்ததுபாரு பாராசாரியும்
ராஜன்முன்னேவந்துநின்றது பாராசாரியும்
நெற்றிமயிரைப்பிடித்தானையா பாராசாரியை
வெள்ளிசமுக்காளம்போட்டானையா பாராசாரிக்கு
லகானிமுத்துகையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
நாராயணாகோவிந்தாவென்று குதிரையேறினாம்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் சிற்றப்பராஜாவும்
சிற்றப்பதுரைதரணிசிங்கும் குதிரையேறினாம்
இராமுசிங்குஇலட்சுமணசிங்கு குதிரையேறினாம்
இராமுதாரிஇலட்சுமணதாரி குதிரையேறினாம்
மான்சிங்குகிரிபுசிங்கு குதிரையேறினாராம்
பேட்டைசிப்பாய்மோவுத்துகாரனும் குதிரையேறினாரா
மூந்நூறுகுதிரைபுறப்பட்டதையா ராஜன்முன்னாலே [ம்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
சுற்றிவந்துசவாரிவாங்குது பாராசாரியும்
பரதநாட்டியமாடிவருகுது பாராசாரியும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் சிப்பாய்தேசிங்கு
கோயில்மடப்பளிபுகுந்தானையா ராஜாதேசிங்கு
என்னென்னவகையெடுத்தானையா ராஜாதேசிங்கு
புனுகுசவ்வாது அத்தர்சவ்வாது கையிலேபிடித்தானும்
வெட்டிவேருமருக்கொழுந்து கையிலேபிடித்தானும்
கண்டமாலைதண்டமாலை கையிலேபிடித்தானும்
பொன்னின்செம்பிலேபந்நீரங்கே நெற்றியிலிட்டானும்
பொன்னினாலேதிருமண் அங்கேநெற்றியிலிட்டானும்
தூங்காவிளக்கையேற்றிவைத்தான் ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ரங்கநாதரே
நவாப்புமேலேசண்டைக்குப்போகிறேன் ரங்கநாதரே
சண்டைகெலிக்கவுத்தாரந்தாரும் ரங்கநாதரே
சண்டைகெலித்துவந்தேனானால் ரங்கநாதரே

தங்கத்தாலேகலசம்வைக்கிறேன் ரங்கநாதரே
சண்டைமுனையில்தப்பித்துக்கொள்ள ரங்கநாதரே
எனக்குநல்லவரந்தாவேணும் ரங்கநாதரே
நன்மைதுன்மையிரண்டுமெந்தன்கண்ணிற்காட்டாயோ
நாராயணாகோவிந்தாவென்று நாடிவிழுந்தானும்
அரிநமோநாராயணாவென்று அடியில்விழுந்தானும்
நந்தகோபாலாவென்று சேவடிதொழுதானும்
பக்தவச்சலாவென்று காலில்விழுந்தானும்
சங்குசக்கரகோதண்டாவென்று மலரடிபணிந்தானும்
மதுசூதனாதாமோதராவென்று மலரடிபணிந்தானும்
கரிமுறையபயந்தீர்த்தவாவென்று காலில்பணிந்தானும்
இப்படியாகத்தோத்திரஞ்செய்து யிருகரந்தனைக்கூப்பி
சரணஞ்செய்துஎதிரில்நின்றானும் ராஜாதேசிங்கு
என்னசகுனமாகுதையா ரங்கர்கோவிலிலே

தேசிங்குராஜன் சகுனங்காணல்

கண்டமாலைதண்டமாலை கருகிப்போயிற்று
கழுத்திலிருந்தமுத்தாரங்கள் கழன்றுவிழுந்ததுபார்
கண்ணில்நிறையதண்ணீர்சொரியுது ரங்கநாதருக்கு
மார்பின்மீதுதண்ணீரோடுது ரங்கநாதருக்கு
அத்தர்சவ்வாதுபன்னீர் கரைந்துவிழுந்தது
நெற்றியிலிருந்ததிருமணியப்போ நிலத்தில்விழுந்தது
கழுத்திலிருந்ததுளசிமாலை கழன்றுவிழுந்ததுபார்
ஏற்றிவைத்ததிருவிளக்கங்கே திட்டென்றுவிழுந்ததாம்
எதிரிலிருந்தகோபுரமங்கே யிடிந்துவிழுந்தது
பக்கத்திலிருந்தலட்சுமியங்கே பதறிவிழுந்தாளாம்
எதிரிலிருந்தகருடஸ்தம்பம் இரண்டாய்விழுந்ததுபார்
கிழக்குமுகத்திலிருந்தசாமி மேற்குத்திரும்பினாராம்
இத்தனைசகுனங்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு
கோபம்வந்துமூண்டுக்கொண்டது ராஜாவுக்கானாலும்
உனக்கென்னகேடுவந்ததுசாமி ரங்கநாதரே
நானல்லவோபயப்படவேண்டும் ரங்கநாதரே
நீர்சொன்னால்பயப்படவேண்டுமோ ரங்கநாதரே
நான்-முன்வைத்தகாலைபின்வைப்பேனோ ரங்கநாதரே
நீ-சாகவுமாட்டாய்பிறக்கவுமாட்டாய் ரங்கநாதரே
ஒரேஜனனமெடுத்தீரையா ரங்கநாதரே
இன்னொருசேதிசொல்கிறேன்கேளும் ரங்கநாதரே

நானிப்போதேபோய்வருகிறேன் ரங்கநாதரே
என்னை-அனியாயமாய்க் கொல்லவேண்டாம் ரங்கநாத
முடிவுசண்டையில்கொல்லுமையா ரங்கநாதரே [ரே
நாளைசெத்தாலும்பிழைத்தாலும் ரங்கநாதரே
உன்பாதத்திற்சேர்த்துக்கொள்ளும் ரங்கநாதரே
கும்பிட்டுக்கொண்டுவந்தானையா ராஜாதேசிங்கு
கோயில்வெளியில்வந்தானையா ராஜாதேசிங்கு
கண்ணையுருட்டிக்கதும்பினானையா ராஜாதேசிங்கு
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை முன்னுக்குவந்தது
நாராயணாகோவிந்தாவென்று குதிரையேறினானும்
அச்சுதாபரந்தாமாவென்று அசுவமேறினானும்
இரங்கர்கோயிலைவலமாகவந்தான் ராஜாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் ராஜாதேசிங்கு
போடுபோடென்றுபோறானையா ராஜாதேசிங்கு
கோட்டையைவிட்டு வெளியேவந்தான் ராஜாதேசிங்கு
பாராசாரிவருவதைகண்ணாலேபார்த்து நவாப்புபாளைய
அல்லோலகல்லோலமாகுதையா நவாப்புபாளையமும்[ம்
கள்ளக்குறிச்சிக்கோடிப்போகுது நவாப்புபாளையமும்
திருவண்ணாமலைக்கோடிப்போகுது நவாப்புபாளையமும்
கணவாக்குறிச்சிக்கோடிபோகுது நவாப்புபாளையமும்
புலியாயிருந்தபாளையமெல்லாம் பூனையாய்போச்சுது
மூக்காதவழிக்குப்பரவியிருக்குது நவாப்புபாளையமும்
அந்தவேளையிலென்னசெய்கிறான் பங்காருநாய்க்கனும்
நவாப்பருகேஓடிவந்தான் பங்காருநாய்க்கனும்

பங்காருநாய்க்கன் நவாப்புக்கு தேசிங்குசேதி சொல்லல்

சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
எமனைப்போலவாரானையா ராஜாதேசிங்கு
சிங்கம்போலேவாரானையா ராஜாதேசிங்கு
புலியைப்போலவாரானையா ராஜாதேசிங்கு
யானையைப்போலவாரானையா ராஜாதேசிங்கு
வருகுமுன்னமேவீசிப்போடுவான் ராஜாதேசிங்கு
இதற்கொருஉபாயம்சொல்கிறேன்கேளும் நவாப்புசைது
ஆலமரமுழுகியிருக்குது தாழனூரேரியிலே [ல்லா
பனைமரமுமுழுகியிருக்குது மலையனூரேரியிலே
பதின்காதவழிக்குப்பரவியிருக்குது யிரண்டேரிதண்ணீர்

இரண்டையும்வெட்டித் திருப்புகிறேன் சங்கராபரணியி
தண்ணீர்மேலேவரமாட்டான் ராஜாதேசிங்கு [லே
சாவகாசமாய்போகலாமையா நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் நவாப்புசைதுல்லா

நவாப்பு பங்காருநாய்க்கனுக்கு ஏரியைவெட்ட
உத்தரவு கொடுத்தது

மாறுமாறென்றுத் தாரங்கொடுத்தான் நவாப்பு சைதுல்
சலாம்வாங்கித் திரும்பினனேயா பங்காருநாய்க்கனும் [லா
ஐந்நூறுபேர்வேலைக்காரரைக் கூட்டிப்போனானும்
ஏரிகரைமேலேவந்தானேயா பங்காருநாய்க்கனும்
இரண்டேரியும்வெட்டி திருப்பினான்பங்காருநாய்க்கனும்
கீழ்மண் ணுமேல்மண்ணுகுது சங்கராபரணியிலே
தலைக்குமேலேஓராள்பரியந்தம் தண்ணீரோடுகுது
பாம்புபோலேபுரண்டுவருகுது சங்கராபரணியிலே
ஏரியைவெட்டிநவாப்புபாளையம் வந்துசேர்ந்தானும்
பாளையத்தில்வந்தானேயா பங்காருநாய்க்கனும்
வருகுமுன்னமேதயார்பண்ணினான் பங்காருநாய்க்கனும்
திருவண்ணாமலைசுபங்கிதுரையும் முன்னேவந்தானும்
இரண்டாங்கணவாயவுல்தாரையா மோவுத்துக்காரனும்
மூன்றாங்கணவாவாலிகொண்டான் அப்துல்காதரும்
நாலாங்கணவாயெட்டியாபுரம் பாளையக்காரனுமே
ஐந்தாங்கணவா செங்கற்பட்டு பாளையக்காரனும்
ஆறாங்கணவாயரியலூரு பெரியதுரைதானும்
ஏழாங்கணவாபாஞ்சாலக்குறிச்சி பாளையக்காரனும்
எட்டாங்கணவா ஆரணிகோட்டை வேங்கடராயரும்
ஒன்பதாங்கணவாயூகம்வகுத்தான் ஷேக்முகம்மதையா
பந்தோபஸ்தாயிருக்குதையா நவாப்புபாளையமும்
பாளைய நடுவிலிருக்கிறானேயா நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராஜாதேசிங்கு
நவாப்பெங்கேஎங்கேயென்று இவனும்வந்தானும் [ம்
பக்கத்திலிருக்குஞ்சமேதாருமாரும் கண்ணாலேகண்டாரா

தேசிங்குராஜன் சேனைகளுக்குச் சொல்லல்

அண்ணமாரேதம்பிமாரே சமேதாருமாரே
நானொருசேதிசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
எனக்குத்தெய்வமில்லையடா சமேதாருமாரே
என்கைபலங்கொண்டுபோறேனடா சமேதாருமாரே

பாலுஞ் சோறுந்தின் பவரானால் செஞ்சிக்குப்போங்கள்
ரத்தஞ்சோறுதின்பவரானால்என்பின்னேவாங்களடா[ள்
பெண்சாதிமுகத்தில்விழியாதவரானால் பின்னேவாருங்க
சண்டைசெய்துகெலித்தோமானால் சல்திமோட்சமுண்டு
போர்க்களத்தில்செத்தோமானால் புகழுங்கீர்த்தியுண்டு
ரணக்களத்தில்செத்தோமானால் நல்லபதவியுண்டு
சாவுக்கென்றுபயப்படவேண்டாம் சமேதாருமாரே
சல்திசல்திவாருமென்றான் ராஜாதேசிங்கு
சங்கராபரணிகரையிலேவந்தான் ராஜாதேசிங்கு
ஆற்றிலேதண்ணீர்வருவதைக்கண்டான் ராஜாதேசிங்கு
சிற்றப்பன்முகத்தைதிரும்பிப்பார்த்தான் ராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் சிற்றப்பனுக்குச் சொல்லல்

இரண்டுநாழிக்குமுன் தண்ணீரில்லை சிற்றப்பராஜாவே
இப்போ தண்ணீர் வந்தவயணமென்ன சிற்றப்பராஜா
ஐயாகேளுமையாகேளும் ராஜாதேசிங்கு [வே
நாளொருசேதிசொல்கிறேன்கேளும் ராஜாதேசிங்கு
இந்தசீமைகொள்ளைக்காரன் பங்காருநாய்க்கனும்
தாழனூரேரிமலையனூரேரி தள்ளிவெட்டினனும்
இரண்டுதண்ணீர்புரண்டுவருகுதடா மகனேதேசிங்கு
இரண்டுநாழியில்வற்றிப்போகுது அந்தஏரிதண்ணீர்
பிற்பாடுபுறப்பட்டுபோகலாமடா மகனேதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராஜாவே [அல்லா
எனக்குபயந்துதண்ணீர்கொண்டுவந்தான் நவாப்புசை
தண்ணீர்க்கு பயப்பட்டிருப்பேனோநான் சிற்றப்பராஜா
பயந்துபோனால்விடுவேனோநான்சிற்றப்பராஜாவே[வே
என்று-கணைத்துக்கதும்பிதட்டினனையா பாராசாரியை
ஆற்றில்அக்கரைஇரண்டுநாழிவழி சங்கராபரணியாறு
தண்ணீர்வந்ததைப்பார்த்தானையா ராஜாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
அந்தநாழிகைக்குகண்ணாலேகண்டார் சமேதாருமாரும்
நத்தர்சிங்குகோபால்சிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
சிற்றப்பனுரைதரணிசிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
ராமுசிங்குலட்சுமணசிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
ராமுதாரிலட்சுமணதாரி ஆற்றில்குதித்தாராம்

பேட்டைசிப்பாய்மோவுத்காரனும் ஆற்றில்குதித்தானும்
ஆற்றுத்தண்ணீரைப்பார்த்துபயந்தார் சமேதாருமாரும்
பயந்தகுதிரை திரும்பிபோச்சு செஞ்சிகோட்டைகுள்ளே
முப்பதுகுதிரையைக்கண்ணாலகண்டான் ராஜாதேசிங்கு
முப்பதுகுதிரையும்சலாம்வாங்குது ராசாவுக்காணலும்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராஜாதேசிங்கு
முப்பதுகுதிரைக்குச்சர்தாரையா மோவுத்துக்காரனும்
நவாபுபாளையத்தை திரும்பிபார்த்தான் மோவுத்காரனும்
கண்ணாலேகண்டதுங்கோபமாச்சுது மோவுத்காரனுக்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழன்றுவருகுது நீலவேணிகுதிரை
ராஜா முன்னேசுற்றிவந்தான் மோவுத்துக்காரனும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துக்காரனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கினான் மோவுத்துக்காரனும்

மோவுத்துக்காரன் சண்டைக்குப்போக
தேசிங்கைக் கேட்டல்

நானொருசேதிசொல்லுகிறேன்கேளும் ராஜாதேசிங்கு
முதற்சண்டைக்குஉத்தாரந்தாரும் ராஜாதேசிங்கு
சந்தோஷமாகஉத்தாரந்தாரும் ராஜாதேசிங்கு
முதல்யூகத்திலிருந்தானையா சுபங்கிதுரைதானும்
கடைசியூகத்திலிருந்தானையா நவாப்புசைதுல்லா
இரண்டுபேரையும்வெட்டிகெலிக்கிறேன் ராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு

தேசிங்குராஜன் மோவுத்துக்காரனுக்குச் சொல்லல்

என்னபேச்சுபேசினையடா மோவுத்துக்காரா நீ
அண்ணனுமில்லைதம்பியுமில்லை மோவுத்துக்காரா நீ
கையிற்கங்கணங்கட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரா நீ
சண்டைமுகத்தைபார்த்தறியாயேமோவுத்துக்காரா நீ[நீ
ஒண்டியாய்சண்டைபண்ணவேண்டாம் மோவுத்துகாரா
நானும்நீயும்புகுந்துவெட்டுவோம் மோவுத்துக்காரா நீ
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துக்காரனு
என்னபேச்சுபேசினீரையா ராஜாதேசிங்கு [ம்
நானும்நீயும்புகுந்துவெட்டினால் ராஜாதேசிங்கு
உமதுபேருண்டாகுமேயன்றி என்பேருண்டாகாது
சல்திசல்தியுத்தாரந்தாரும் ராஜாதேசிங்கு

கத்திபிடித்தசிப்பாய் நானுமானல் ராஜாதேசிங்கு
கால்நாழி நீர்கண்ணால்பாரும் ராஜாதேசிங்கு
நவாப்பின்பாளையத்தையிப்போ அதஞ்செய்யாவிட்டால்
எந்தன்பேருமோவுத்துகாரனென்றெண்ணுவார்களோ
தூள்தூளாகத்தும்சஞ்செய்கிறேன் துரகம்யாவற்றும்
அணுவளவாயதஞ்செய்கிறேன்பாளையம்யாவற்றும்[றும்
தவிடுபொடியாய் சிதைத்துபோடுறேன் தளங்கள்யாவற்
காற்றிலிலவம்பஞ்சாகசெய்கிறேன்கனத்தபடையெல்லா
அரைநாழிஎனக்குத்தாரந்தாருமையா ராஜாதேசிங்கு[ம்
அந்தப்பேச்சைகாதில்கேட்டான்ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு [காரனே
நானென்னசொன்னாலும்கேளேனென்றாய்மோவுத்துக்
சந்தோஷமாகத்தலையையசைத்தான் ராஜாதேசிங்கு
முதற்சண்டைக்குத்தாரங்கொடுத்தான் ராசாதேசிங்கு
சந்தோஷமாகசெலவுவாங்கினன் மோவுத்துக்காரனும்

மோவுத்துக்காரன் சண்டைக்குப் போகுதல்

சலாம்வாங்கித்தாண்டினானையா நீலவேணிமேலே
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
காற்றுப்போலேபறக்குதையா நீலவேணிகுதிரை
மேகம்போலேபறக்குதையா நீலவேணிகுதிரை [னும்
ஒற்றைக்குதிரையைக்கண்ணால்கண்டான்சுபங்கிதுரைதா

சுபங்கிதுரை தன்சேனைக்குச் சொல்லல்

அண்ணமாரேதம்பிமாரே சமேதாருமாரே
ஒற்றைக்குதிரைக்காரன்வாரான் சமேதாருமாரே
சல்திசல்திபீரங்கிபோடும் சமேதாருமாரே
ஆனால் நல்லதாகட்டுமென்று சமேதாருமாரும்
சொல்லிவாயைமூடுமுன்னே சமேதாருமாரும்
பளபளவென்றுபளுத்தாதீர்த்தார் சமேதாருமாரும்
பளுத்தாசப்தங்காதிகேட்டது நீலவேணிகுதிரை
குண்டுக்குமேலேசாணுயரம் வேகமாய்ப்பறக்குது
நடுத்தண்டிலேவந்துவிழுந்தது நீலவேணியும்
தண்டுக்குசைகையூகினானையா சுபங்கிதுரைதானும் [ம்
மோவுத்துகாரனைகண்ணால்கண்டான்சுபங்கிதுரைதானு
மூவாயிரங்குதிரைவந்துவளைந்தது மோவுத்துக்காரனை
லகானையிழுத்துகையில்பிடித்தான் மோவுத்துக்காரனும்
பட்டாவுருவிக்கையில்பிடித்தான் மோவுத்துக்காரனும்

ஆகாயவாணியைசாக்ஷிவைத்தான் மோவுத்துக்காரனும்
பூமிதேவியைசாக்ஷிவைத்தான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்கு சிமிட்டா கொடுத்தான் மோவுத்துக்கார
கரகரவென்றுசுழன்றுவருகுது நீலவேணிகுதிரை[னும்
குதிரைசுழன்றநிமிஷத்திற்குள் மோவுத்துகாரனும்
வடக்குமுகம்திரும்பினனையா போவுத்துகாரனும்.
அங்கேயிருந்தஆயிரங்குதிரை வந்துவளைந்தது [ரனும்
குதிரைகள்வந்ததைகண்ணாலேகண்டான் மோவுத்துகா
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழலுதுபாரு நீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிகைக்கு மோவுத்துகாரனும்
கண்கள்சிவந்துபொறிகள்பறக்க மோவுத்துக்காரனும்
கனைத்துக்கதும்பிமீசையுருவியே மோவுத்துக்காரனும்
கத்தியெடுத்துவீசினனையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்தஆயிரங்குதிரை டாருய்விழுந்தது
மேற்குபக்கம்திரும்பினனையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்தஆயிரங்குதிரை வந்துவளைந்தது [னும்
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் மோவுத்துகார
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழன்றதுபாரு நீலவேணிகுதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிகைக்கு மோவுத்துக்காரனும்
குடல்கள்சரிந்திடசிலகுதிரைகள் வந்துவிழுந்ததுபார்
தலைகள்துண்டாய்சிலகுதிரைகள் தவறிவிழுந்ததுபார்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
சிங்கம்போலவாரானையா மோவுத்துக்காரனும்
புலியைப்போலபுகுந்தானைபா மோவுத்துக்காரனும் [ம்
துண்டுதுண்டாய்தூக்கிவெட்டுகிறன் மோவுத்துகாரனு
தலைதலையாய்புரட்டிப்போடுகிறன் மோவுத்துகாரனும்
சப்பைசப்பையாய்கிழித்துபோடுறன் மோவுத்துகாரனு
கால்மாடாய்தலைமாடாய்போகுதுபார் நவாப்புபாளயம்
அந்தவேளையிலென்ன பண்ணுகிறன் சுபங்கிதுரைதா
மூவாயிரம்பீரங்கியைத் தயார்பண்ணினும் [னும்
சுற்றிலுமிருக்கிறசிப்பாய்மாரும் பளுத்தாதீர்த்தார்கள்
அத்தனைகுண்டுக்குத்தப்பிவருகுது நீலவேணிகுதிரை
ஒருகுதிரைமேலாயிரம்குதிரை வந்துவளைந்தது
ஆயிரங்குதிரையைத்தாண்டிவருகுது நீலவேணிகுதிரை

ஒருகத்தியின்மேலாயிரங்கத்தி வந்துவிழுந்ததுபார் [ம்
ஆயிரங்கத்தியுந்தட்டிவெட்டுகிருன் மோவுத்துக்காரனு
மருந்துபுகையில்புகுந்துவெட்டுகிருன் மோவுத்காரனு
தலைதெரியாமல்புகுந்துவெட்டுகிருன் மோவுத்காரனும்
கிழக்குபக்கந்திரும்பினனையா மோவுத்காரனும்
அங்கேயிருந்தஆயிரங்குதிரை வந்துவிழுந்தது [பார்
மார்கள்பிளந்திடவேசிலகுதிரைகள்மாய்ந்துவிழுந்தது
மண்டைதிறந்துமூளைசிதறிடமாய்ந்தன சிலகுதிரை
இப்படியாகசிதைத்தறுத்து இம்சைகள்செய்தபின்பு
சிந்தைமகிழ்ந்துசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
அங்கேயிருந்துதண்டில்புகுத்தது நீலவேணிகுதிரை
தண்டில்புகவேசந்தோஷமானன் மோவுத்துக்காரனும்
பாளையங்களைக்கண்ணலேகண்டான் மோவுத்துகாரனும்
கொசுகள்போலதேய்ப்பேனென்ருன்மோவுத்க்காரனும்
தூசுபோலூதிடுவேனென்ருன் மோவுத்துக்காரனும்
பஞ்சுபோல்பறக்கடிப்பேனென்ருன்மோவுத்துகாரனும்
மெத்ததைரியங்கொண்டுதிரிகிருன் மோவுத்துகாரனும்
அரிந்தரிந்துபோட்டானையா மோவுத்துக்காரனும்
மூன்வீச்சுக்காயிரம்விழுந்ததுபாரு நவாப்புபாளையமும்
பின்வீச்சுக்காயிரம்விழுந்ததுபாரு நவாப்புபாளையமும்
தெற்கேயிருந்தசுபங்கிதுரையை கண்ணலேகண்டான்
ஆனையின்மேலம்பாரிபோட்டே யவனுமிருக்கிருன் [ம்
அந்தவேளையிலென்னபண்ணுகிருன்மோவுத்துகாரனு
ஆனைகூட்டங்கள்மெத்தயிருக்குதுசுபங்கிதுரையண்டை
ஆனைவேடிக்கைபார்த்துவாருன் மோவுத்துக்காரனும்
குதிரைவருவதைகண்ணல்கண்டான் சுபங்கிதுரைதானு
ஆயிரம்யானையைதுரத்தினன் சுபங்கிதுரைதானும் [ம்
ஆனைவருவதைகண்ணல்கண்டான் மோவுத்துகாரனும்
கலகலவென்றுசிரித்தானையா மோவுத்துக்காரனும்
பாலாவுருவிகையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
யானைக்குமேலேஜானுயரம் அதிர்ந்துபாய்கிறது
குதிரைபோகிறவேகத்திஞலே குத்திசாய்க்கிருனும்
கரகரவென்றுசுழன்றுவருகுது நீலவேணிகுதிரை
கால்மாடுதலைமாடாக குத்திசாய்க்கிருனும்
கடகடவென்றுசாயுதுபாரு யானைகளானலும்

ஆயிரம்யானையைகுத்தியுருட்டினன் மோவுத்துகாரனும்
தெற்கேயிருந்தசுபங்கிதுரையை கண்ணலேகண்டானும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
முன்னங்காலை தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
பாலாவுருவிக்கையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
அல்லாகுஅல்லாவென்றுபோட்டான் பாலாதன்னாலே
முன்னேயிருந்தமாவெட்டியான் நிலத்தில்விழுந்தானும்
மாருக்குபாலாயிழுத்துபோட்டான்மோவுத்துக்காரனும்
ஓடிப்போகிறேனோடிப்போகிறேன் மோவுத்துக்காரனே
ஓடிப்போகிறசிப்பாய்மகனும் சண்டைக்கேன்வந்தாய்
சௌரியமில்லாதவனே நீயும் சண்டைக்கேன்வந்தாய்
இனியில்லாதகோபமாச்சுது மோவுத்துக்காரனுக்கு
வலதுகையைப்பிடித்தானையா மோவுத்துக்காரனும்
வலதுகையுந்தானுமாகவே பூமியில்விழுந்தானும்
சுபங்கிதுரை மோவுத்துக்காரனை வணங்கிக் கேட்குதல்
இடதுகையில்சலாம்வாங்கினன் சுபங்கிதுரைதானும்
நானொருசேதிசொல்கிறேன்கேளு மோவுத்துக்காரனே
உந்தன்மேலேசண்டைக்குவரவில்லைமோவுத்துகாரனே
பெண்சாதியிழந்தேன்தண்டமையாமோவுத்துக்காரனே
பிள்ளையிழந்தேன் அல்லாவறிய மோவுத்துக்காரனே
ஊருமிழந்தேன்பதியுமிழந்தேன் மோவுத்துக்காரனே
நீசொன்னபடிதானுங்கேட்பேன் மோவுத்துக்காரனே
சோறுகூடதின்னவில்லை மோவுத்துக்காரனே
நானிப்போதேயோடிப்போகிறேன்மோவுத்துக்காரனே
இப்போ தென்னைவிட்டு விடவேண்டும் மோவுத்துகார
ஆனல்நல்லதாகட்டும்போடா சுபங்கிதுரையே நீ [னே
ஒற்றைகையோடேஓடிப்போனானும்சுபங்கிதுரைதானும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான்மோவுத்துகாரனு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு[ம்
நவாப்புஎங்கேயெங்கேயென்று இன்னும்வாரானும் [ம்
குதிரைவருவதைக்கண்ணலேகண்டது நவாப்புபாளைய
அல்லோலகல்லோலமாகியோடுது,நவாப்புபாளையமும்
அங்கேயிருந்துதண்டில்நுழைந்தான்மோவுத்துகாரனு
திமிரிக்கோட்டைஷேக்முகம்மது வந்துயெதிர்த்தானும்
ஷேக்முகம்மதைகண்ணல்கண்டான்மோவுத்துகாரனும்
தலகலவென்றுசிரித்தானையா மோவுத்துக்காரனும்

கண்ணால்கண்டான்கோபமாச்சுது நவாப்புபாளையத்தை
கத்தியெடுத்து நீலவேணியை கலங்கத்தட்டினானாம்
தட்டினவுடனே நீவேணியும் தண்டில்பாயுதுபார்
பாய்ந்தவுடனேஷேக்மூகம்மது பாலாயெடுத்தானாம்
குத்தினகுத்துமோவுத்காரன் கொண்டையில்பாய்ந்தது
பாய்ந்தயீட்டியைவலதுகையிலே பற்றியெடுத்தானாம்
கோபம்மிகவும்பொங்கிவந்தது மோவுத்துக்காரனுக்கு
சிவ்வென்றெழுந்துஷேக்மூகம்மதுகையைபிடித்தானாம்
கத்தியெடுத்துஷேக்மூகம்மதுகழுத்தைவெட்டபோனான்
அந்தவேளையிலென்னசொல்லுகிறான் ஷேக்மூகம்மது

ஷேக்மூகம்மது மோவுத்துக்காரனை இரங்கிக்கேட்குதல்

சலாமையாசலாமையா மோவுத்துக்காரனே
அறியாமல்சண்டைக்குவந்தேனையா மோவுத்துகாரனே
என்தலையைக்காக்கவேணுமையா மோவுத்துக்காரனே
தெய்வமும்நீரேதேசிகரும்நீரே மோவுத்க்காரனே
அடிமையென்னைஆதரிக்கவேணும் மோவுத்துகாரனே
என்றுவணங்கிசலாம்செய்தான் ஷேக்மூகம்மதையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துகாரனும்
பகையாளிகூடசண்டைக்குவந்தால்பாலன்விடுவேனோ
ஈட்டியெறிந்தகையைஇப்போ என்னிடவாளாலே
கண்டதுண்டமாய்வெட்டியெறிவேன் நான்
கத்திபிடித்தசிப்பாய்மார்களை கருணையாடிவாரேன்
சலாம்வாங்கினசிப்பாய்மார்களை ஓடிபோகச்சொன்னான்
பதினெட்டுவயதுபாலனையா மோவுத்துக்காரனும்
ஒருகாலமும்சண்டையறியான் மோவுத்துக்காரனும்
கைகளெல்லாம்ஓய்ந்துபோச்சுது மோவுத்துகாரனுக்கு
இரத்தகவலுகவ்விக்கொண்டது மோவுத்துக்காரனுக்கு
களைகள்வந்துமூண்டுகொண்டதுமோவுத்துக்காரனுக்கு
ராஜாவண்டைபோகிறதற்கு குதிரையைத்திருப்பினான்
சந்தோஷமாகதிரும்பினானையா மோவுத்துக்காரனும்
பரதநாட்டியமாடிவருகுது நீலவேணிகுதிரை
இராசாமுன்னுக்குவாரானையா மோவுத்துக்காரனும்
அந்தவேளைக்குபதுங்கியிருந்தார் தப்பினகுண்டுக்காரர்
இரட்டைகுண்டைபார்பண்ணி படுக்கென்றுசுட்டாராம்
படுக்கென்றசத்தம்திரும்பிபார்த்தான் மோவுத்துகாரனு
அந்தகுண்டுநெற்றியிற்பட்டது மோவுத்துக்காரனுக்கு

அல்லாரே அல்லாரேயென்று கீழேவிழுந்தானும்
அரிகரிகோவிந்தாவென்றுசொல்லிக்கீழேவிழுந்தானும்
வைகுந்தபதவிசேர்ந்தானையா மோவுத்துக்காரனும்

மோவுத்துக்காரன் இறந்ததுக்கண்டு
நீலவேணி விசனப்படல்

சுற்றிசுற்றிவருகுதையா நீலவேணிகுதிரை
முகந்துமுகந்து அழுகுதையா நீலவேணிகுதிரை
கண்ணில்நீரும்பொங்கிவருகுது நீலவேணிக்கு
கடகடவென்றுபுரண்டழுகுது நீலவேணிகுதிரை

மோவுத்துக்காரன் இறந்தபின்பு நவாப்பு பங்காருநாய்க்
கனை நீலவேணியைக் கொண்டுவரச்சொல்லல்

அண்ணாவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
மோவுத்துக்காரன்விழுந்துபோனான் பங்காருநாய்க்கா நீ
நீலவேணியைகொண்டுவரவேண்டும்பங்காருநாய்க்கா நீ
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் பங்காருநாய்க்கனும்
குதிரையெல்லாம்சுற்றிப்பார்ந்தது நீலவேணியும்
கனைத்துகதும்பியெழும்பிற்றுபாரு நீலவேணியும்
கரகரவென்றுசுழன்றதையா நீலவேணியும்
இடதுசாரிவலசாரியாகவந்தது நீலவேணியும்
வந்துபாய்ந்துடைத்ததுபாரு நீலவேணியும்
காலினாலேயெட்டியுதைத்தது நீலவேணியும்
வாலினாலேவீசியடிக்குது நீலவேணியும்
வீறிட்டுக்கொண்டுவிழுந்துசாகுது அந்தகுதிரைகளும்
மூலைக்குமூலைதுரத்தியுதைக்குது நீலவேணியும்
காலுதையால்விழுந்துசெத்தது ஐம்பதுகுதிரை
விக்கிமுக்கிட்டுசாகும் குதிரைகளனந்தம்
ஆயிரம்துருப்புசிப்பாய்மாரும் அடியோடேபோனார்கள்
குதிரைவிழுந்ததுகண்ணாலேகண்டது நீலவேணியும்
இராஜாபக்கம்போவோமென்று நீலவேணியும்

மோவுத்துக்காரன்குதிரை தேசிங்குராஜனிடம் வருதல்

இரண்டுதட்டில்வந்துநின்றது ராஜாமுன்பாக
கண்ணில்நிறையதண்ணீர்கலங்குது நீலவேணிக்கு
குதிரைமுகத்தைக்கண்ணில்கண்டான் ராஜாதேசிங்கு
என்னுடன்வளர்ந்ததம்பிதானுமிறந்துபோய்விட்டான்
எந்தன்பலமும்பாதிபோச்சுது சமேதாருமாரே
குதிரையைவந்துகட்டிக்கொண்டான் ராஜாதேசிங்கு

என்னகாரியம்பண்ணிணையடா நீலவேணியே நீ
அந்தப்பேச்சைகாதிலேகேட்டது நீலவேணியும்
இராஜன்முன்பாகநடக்குதுபாரு நீலவேணியும்

மோவுத்துக்காரன் இறந்ததைப்பார்த்து
தேசிங்குராஜன் விசனப்படல்

மோவுத்துக்காரன் முன்னேவந்தான் ராஜாதேசிங்கு
மண்டிபோட்டுஉட்கார்ந்தானையா ராஜாதேசிங்கு
வாரியெடுத்துமடிமீதில்வைத்தான் ராஜாதேசிங்கு
முகத்தோடேமுகம்வைத்தானையா ராஜாதேசிங்கு
கோடுகோடென்றுகதறியழுதான் ராஜாதேசிங்கு
என்னைவிட்டுநீஎப்படிபோனாய் மோவுத்துக்காரனே
எனக்குநல்லயிடந்தேடிவையும் மோவுத்துக்காரனே
தவாப்பைவெட்டி நானும்வருகிறேன் மோவுத்துக்கா
தனக்குத்தானேதைரியமானான் ராஜாதேசிங்கு [னே
பெரியகுழியாய்வெட்டச்சொன்னான் ராஜாதேசிங்கு
லட்சம்பொன்னுதானங்கொடுத்தான் ராஜாதேசிங்கு
குழியில்தூக்கிவைத்தானையா மோவுத்துக்காரனை
மண்டிபோட்டுபடுத்ததுபாரு நீலவேணிகுதிரை
பட்டாவுருவிகையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
இரண்டுதுண்டாகத்தீர்த்தானையா ராஜாதேசிங்கு

மோவுத்துக்காரனையும் அவன்குதிரையையும்புதைத்தல்

குதிரையைக்கூடப்புதைத்தானையா ராஜாதேசிங்கு
பெரியகோரிகட்டச்சொன்னான் ராஜாதேசிங்கு
அந்தவேளையிலென்னசெய்குறான் ராஜாதேசிங்கு
நாராயணகோவிந்தாவென்றான் ராஜாதேசிங்கு
அண்ணமாரேதம்பிமாரே சமேதாருமாரே
நானென்றுசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
நான்போகட்டாநீர்வாரீரோ சமேதாருமாரே [ம்
ஓடிப்போகிறசிப்பாய்மாரைத் துரத்திவெட்ட வேண்டா
பதுங்கியிருக்கிறசிபாய்மாரைபார்த்து வெட்டவேண்டா
ஏழைஎளியபிச்சைக்காரரை எதிர்த்துவெட்ட வேண்டா
உங்களையெதிர்த்தசிப்பாய்மாரை டாருய்தீர்த்திடுங்கள்[ம்
அந்தபேச்சைகாதிலேகேட்டார் சமேதாருமாரும்
ஆனால்நல்லதாகட்டுமென்றார் சமேதாருமாரும்
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
கனைத்துக்கதும்பியெழுந்தானையா ராஜாதேசிங்கு

### தேசிங்குராஜன் சண்டைக்குப் போகுதல்

பரதநாட்டியமாடி வருகுது பாராசாரிகுதிரை
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் நவாப்புசைது
அண்ணாவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கா நீ [ல்லா
குதிரைவருவதைக்கண்ணாலேபாரும் பங்காருநாய்க்கா நீ
சல்திசல்திபீரங்கிதிருப்பு பங்காருநாய்க்கா நீ
சுருக்காபலுாத்தாகொடுத்தானையா பங்காருநாய்க்கனும்
பலுாத்தாசத்தங்காதிலேகேட்டது பாராசாரிகுதிரை
இரண்டாங்கணவாய்சேத்துப்பட்டு தாவுத்துக்காரனும்
குதிரைசேனைக்குசைகையூதினான் தாவுத்துக்காரனும்
ஊதினவுடனேசூழ்ந்துகொண்டார் சிப்பாய்மார்களும்
முப்பதினாயிரங்குதிரைவளைந்தது ராஜாவையானாலும்
அந்தக்குதிரையெல்லாஞ்சுற்றிப்பார்த்தான்ராஜாதேசிங்
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு [கு
இரண்டுகையிலேபட்டாவாங்கினான் ராஜாதேசிங்கு
ஆகாயவாணியைச்சாக்ஷிவைத்தான் ராஜாதேசிங்கு
பூமாதேவியைச்சாக்ஷிவைத்தான் ராஜாதேசிங்கு
சந்திரசூரியரைசாக்ஷிவைத்தான் ராஜாதேசிங்கு
ரங்கநாதரைசாக்ஷிவைத்தான் ராஜாதேசிங்கு
ராமுராமுரேதேவாவென்று போட்டானொருவெட்டு
துண்டுதுண்டாய்த்தூக்கிவெட்டுகிறான் ராஜாதேசிங்கு
தலைதலையாய்புருட்டிப்போடுகிறான் ராஜாதேசிங்கு
டாருடாருய்கிழித்துப்போடுகிறான் ராஜாதேசிங்கு
இணையில்லாமல்புகுந்துவெட்டுகிறான் ராஜாதேசிங்கு
வெட்டொன்றுக்குளட்டுதுண்டாய்டாருய்விழுந்தது
ஜெயராமுகெங்காராமுபுகுந்து வெட்டுகிறார்கள்
ராமுசிங்குலட்சுமணசிங்கு புகுந்துவெட்டுகிறார்கள்
சிற்றப்பதுரைதரணிசிங்கு புகுந்துவெட்டுகிறாராம்
மூன்றரைநாழிமூலைக்குமூலைக்கு புகுந்துவெட்டுகிறாராம்
இருபத்தொருகுதிரையோடே புகுந்துவெட்டுகிறாராம்
அத்தனைகுண்டுக்குத்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை
குண்டுசந்திலேநுழைந்துபோகுது பாராசாரிகுதிரை
முப்பதினாயிரம்துப்பாக்கிகொண்டு மூடுக்குயேவிட்டாரு
அந்தகுண்டுக்குத்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை [ம்
நெருப்புமாரியாய்ப்பொழிகிறானையா தாவுத்துகாரனும்
அந்தகுண்டுக்குத்தப்பிவருகுதையா பாராசாரிகுதிரை

குண்டுமேலேபறக்குதையா பாராசாரிகுதிரை
குண்டுவிழுந்து நவாப்புபாளையம்கூவிமாளுதுபார்
ஒருகுதிரைமேலேஆயிரங்குதிரை வந்துவிழுந்ததுபார்
ஒருகத்திமேலேஆயிரங்கத்தி வந்துவிழுந்தது
ஆயிரங்கத்தியுந்தள்ளிவெட்டுகிறான் ராஜாதேசிங்கு
கலகலகலகலகலகலவென்று கத்திமின்னுதுபார்
மிகுமிகுமிகுமிகுமிகுமிகுவென்று பீரங்கிபறக்குதுபார்
மேல்குண்டுகீழேபாயுது பாராசாரிகுதிரை
இத்தனைக்குந்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை
மருந்துபுகையிலேபுகுந்துவெட்டுகிறான் ராஜாதேசிங்கு
தென்னங்குலைபோலபுகுந்துவெட்டுகிறான் ராஜாதேசிங்
சோளத்தட்டைவீசிறைற்போலே யறுத்துபோடுகிறானும்
வாழத்தண்டையறுத்தாற்போலே யறுத்துபோடுகிறரா
கரகரவென்றுசுழன்றுவருகுது பாராசாரியும் [ம்
கண்டமட்டுஞ்சாடுகிறானையா ராஜாதேசிங்கு
பதினைந்துநாழிகைமிகவுமாச்சுது நவாப்புபாளையமும்
சோறுசோறென்றுதுடிக்குதையா நவாப்புபாளையமும்
பாணிபாணிஎன்றுதவிக்குதையா நவாப்புபாளையமும் [ம்
ரொட்டிரொட்டிஎன்றுதவிக்குதையா நவாப்புபாளையமு
தாயில்லாப்பிள்ளைபோலதவிக்கிறார் நவாப்புபாளையமும்
இனியிருந்தால்பிழைக்கமாட்டோம் தேசிங்குமுன்னாலே
என்று-கள்ளக்குறிச்சிகோடிபோகுது சிறிதுபாளையமும்
ஆரணிகோட்டைக்கோடிப்போகுது நவாப்புபாளையமு
ஓடிப்போகிறஜனத்தைக்கண்டான் ராஜாதேசிங்கு [ம்
அந்தவேளையில்கண்ணாலேகண்டான் தாவுத்துக்காரனு
இருபதினாயிரந்துருப்புகுதிரை ஏவிவிட்டானும் [ம்
குதிரைவருவதைகண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு
படபடவென்றுதுடிக்குதுமீசை ராஜாவுக்கானாலும்
கரகரவென்றுசுழன்றுவருகுது பாராசாரிகுதிரை
கரணைகரணையாய்விழுந்துபோகுது நவாப்புபாளையமும்
கால்மாடுதலைமாடாய்விழுந்துபோகிறது துருப்புகுதிரை
இருபதினாயிரங்குதிரையங்கே டாறாய்கிழிந்தது [யும்
யானைவேடிக்கையைபார்க்கிறானையா ராஜாதேசிங்கு
இருப்புலக்கையைவாங்கியடிக்குது பட்டத்துயானையும்
கரகரவென்றுசுழற்றிவருகுது யானைகளானாலும்
வீறிட்டுக்கொண்டோடிவருகுது யானைகளானாலும்

ஆனையைபார்கிலும்ஜா னுயரம் பறக்கிறதுபாராசாரி
ஆனையின்மேலேதாண்டிவிழுகுதுபட்டத்துயானையும்
பாலாவுருவிக்கையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
குத்திகுத்திசாய்த்துபோடுகிறன் ராஜாதேசிங்கு
உலக்கைபோட்டுசலாம்வாங்குது பட்டத்துயானையும்
மண்ணைக்கவ்விசாகிறதையா மதத்தயானையும்
குடல்சரிந்துசாகிறதையா சிலதுயானைகளும்
மத்தகம்பிளந்துசாகிறதையாமதங்கொண்டயானைகளும்
உதைத்துக்கொண்டுசாகிறதையா சிலதுயானைகளும்
கரகரவென்றுவுதைத்துச்சாகுது கறுத்தயானைகளும்
இரண்டாயிரம்யானையங்கே டாருய்விழுந்தது
யானைவிழுவதைக்கண்ணாலேகண்டான் ராஜாதேசிங்கு
அங்கேயிருந்ததாவுத்துகாரனை கண்ணாலேகண்டானும்
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைத்தூக்கிவைத்தது யானைதலைமேலே
பாலாவுருவிப்போட்டானையா ராஜாதேசிங்கு
முன்னேயிருந்த மாவெட்டியானும் நிலத்தில்விழுந்தா
மாருக்குபாலாயிழுத்துபிடித்தான் ராஜாதேசிங்கு [னும்
அந்தவேளையில்சலாம்வாங்கினான் தாவுத்துக்காரனும்
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராஜாதேசிங்கு
நானிப்போதேஓடிபோகிறேன் ராஜாதேசிங்கு
அந்தவேளையில்கோபம்பிறந்தது ராஜாவுக்கானலும்
நவாப்புக்கேற்றசிநேகிதக்காரன் தாவுத்துக்காரனும்
நாராயணாகோவிந்தாவென்றுபோட்டானேபாலாவை
சேத்துப்பட்டுதாவுத்துக்காரன் நிலத்தில்விழுந்தானும்
நிலத்தில்விழவேநவாப்புஜனமும் நிமிஷமிருக்கவில்லை
கண்டபடியேயோடிபோச்சுது நவாப்புயானையமும்
தாவுத்துக்காரன்செத்தசேதி நவாப்புகேட்டானும்
இனியில்லாதபயித்தியம்பிடித்தது நவாப்புக்கானலும்
இனியிருந்தால்தலைபோகும் தேசிங்குகையாலே
ஓடிஓடிஒளிக்கிறானையா நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்னபண்ணுகிறன் ராஜாதேசிங்கு
இருபத்திரண்டுவயதுள்ளபாலன் ராஜாதேசிங்கு
ஐம்பதினாயிரஞ்சேனைவெட்டினான் ராஜாதேசிங்கு
இரண்டாயிரம்யானைவெட்டினான் ராஜாதேசிங்கு

கைகளெல்லாம்ஓய்ந்துபோச்சுது ராஜாவுக்காளும்
இரத்தக்கவுலுகம்மிக்கொண்டது ராஜாவுக்காளும்
நவாப்புபாளையஞ்சுற்றிப்பார்த்தான் ராசாதேசிங்கு
இவனைப்பார்த்துபதுங்குகிறார்கள் ராசாதேசிங்கு
எடுத்தபீரங்கிஎடுத்தாற்போல போட்டுஓடுகிறார்கள்
தன்னிடஜனத்தைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
குண்டுமழுந்திலிருந்துசெத்தது தன்னிடஜனங்களும்
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு [யை
செஞ்சிகோட்டைபோவோமென்று திருப்பினான்குதிரை
அறுபத்துநான்குஜண்டாமரமும் டாருய்விழுந்தது
ஐந்துகுதிரையோடேவாரான் ராசாதேசிங்கு
சங்கராபரணிக்கரையிலேவந்தான் ராஜாதேசிங்கு
குதிரையைவிட்டுதண்ணியிற்குதித்தான் ராஜாதேசிங்கு
முழங்கால்வரையில்தண்ணியங்கே பிடித்துயோடுகுது
கத்திக்கழுவிவுறையிலேபோட்டான் ராசாதேசிங்கு
மூன்றுகைத்தண்ணீர்குடித்தானையா ராஜாதேசிங்கு
மரத்துநிழலிலேஉட்கார்ந்தானையா ராஜாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் அவனிடதாயாதி
தேசிங்குதாயாதியையா தன்சிங்குமகாராசன்
ஒற்றைகுதிரைபோட்டுக்கொண்டு ஓடிவந்தானெதிரே
ராமுராமுரேசீதாராமுரே ராஜாதேசிங்கு
நீர்-திரும்பிவந்தவயணமென்ன ராஜாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் தன்சிங்குராசாவே
நவாப்புசெத்துபோனானையா தன்சிங்குராசாவே
என்னபேச்சுபேசினீரையா ராசாதேசிங்கு
செத்துப்போனவன்சேத்துப்பட்டு தாவுத்துகாரனும்
மலையடிவாரமூலையோரத்தில் நவாப்புஒளித்தானும்
சொச்சத்தோடேவிட்டுப்போகாதே ராசாதேசிங்கு
சல்திசல்திபுறப்படுமென்றான் தன்சிங்குராஜாவும்
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் சிப்பாய்தேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
தனக்குவளத்தபாராசாரியைமுன்னுக்குவரச்சொல்லும்
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
முன்னுக்குவந்துநின்றதுபாரு பாராசாரியும்
ஐந்துகுதிரையோடேவாரானையா ராஜாதேசிங்கு

அவன்மார்பிலிருந்தரங்கநாதர் வழியிலேநின்ருராம்
அவன்தோளிலிருந்தரங்கர் தூரத்தில்நின்ருராம்
இரங்கநாதரைக்கண்டுதொழுதான் ராஜாதேசிங்கு
அரிகரிகோவிந்தாவென்ருன் ராஜாதேசிங்கு
அப்பாகேளும்அப்பாகேளும் குழந்தைதேசிங்கு
இத்தனைசண்டைபண்ணிஞயடா குழந்தைதேசிங்கு [கு
இன்றையசண்டை திருத்திப்போட்டடா குழந்தைதேசிங்
நாளையசண்டைவைத்துக்கொள்ளடா மகனேதேசிங்கு
நானுங்கூடவருகிறேனடா மகனேதேசிங்கு
அந்தவார்த்தையைகாதிலேகேட்டான் சிப்பாய்தேசிங்கு
கையையெடுத்துதொழுதானேயா ராஜாதேசிங்கு
என்னைவிட்டுநீர்பிரிந்துபோனீர் ரங்கநாதரே
என்னிடபலமும்பாதிபோச்சுது ரங்கநாதரே
நான்-முன்வைத்தகாலைபின்வைப்பேனே ரங்கநாதரே
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு ரங்கநாதரே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது ரங்கநாதரே
நான்-போய்வருகிறேன்போய்வருகிறேன் ரங்கநாதரே
சல்தியெனக்குத்தாரந்தாரும் ரங்கநாதரே

நவாப்பு தோன்றமல்லனை தேசிங்குராஜனிடத்திற்கு
சமாதானத்துக் கனுப்புதல்

இப்படிசொல்லிவருகிருனேயா ராஜாதேசிங்கு
போனராஜன்திரும்பினசேதி நவாப்புகேட்டானும்
தோன்றமல்லனையனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்ல
சமாதானத்திற்கனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
மூன்றுகுதிரையோடேவருகிருனேயா தோன்றமல்லனும்
நாமத்தைப்போட்டுவருகிருனேயா தோன்றமல்லனும்
தேசிங்குமுன்னேவருகிருனேயா தோன்றமல்லனும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் தோன்றமல்லனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கினன்தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தானேயா ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராஜாதேசிங்கு
ஒன்பதுகோடிசீமையுமக்கு நவாபுதாரோமென்ருர்
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நவாப்புதாரோமென்
சமாதானமாய்ப்போய்வாருமையா ராஜாதேசிங்கு [ருர்
அந்தப்பேச்சைகாதில்கேட்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானேயா ராசாதேசிங்கு



என்னபேச்சுபேசிஞயடா தோன்றமல்லண்ணு [ம்
இன்றைக்கிருக்குஞ்சமாதானம் அன்றைக்கிருக்கவேணு
நவாப்புக்கேற்றபிராணசிநேகன் தாவுத்துகாரன்போஞ
என்னுடன்வளர்ந்தமோவுத்துக்காரனவனேபோஞ
இரண்டுஜீவனுக்கென்னிடஜீவன் என்னத்துக்கிருக்குது
என்கையில்பலமிருந்தால் ஆற்காடெந்தனுக்கு
சல்திசல்திவோடிப்போடா தோன்றமல்லண்ணு
தப்பிப்பிழைத்தோமென்று சொல்லி ஓடிவாருனும்
தோன்றமல்லனைக்கண்டித்தசேதி நவாப்புகேட்டானும்
வேங்கடராயனையனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
ஐந்நூறுகுதிரைதயார்பண்ணிஞன் வேங்கடராயரும்
பாளையம்வந்ததைக்கண்ணலேகண்டான் ராஜாதேசிங்கு
பட்டாவுருவிகையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
பாளையம்குறுக்கேபுகுந்துவெட்டுகிறுன் ராஜாதேசிங்கு
மண்டைமண்டையாய்தள்ளிவெட்டுகிறுன் ராஜாதேசிங்
வெங்கடராயனைக்கண்ணலேகண்டான்ராஜாதேசிங்கு[கு
ஆனையின்மீது அம்பாரிவைத்து அவனுமிருக்கிறுனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
முன்னங்காலைத்தூக்கிவைத்தது யானையின்தலைமேலே
பட்டாவுருவிவாங்கிஞனையா ராசாதேசிங்கு
ஓங்கினபட்டாவிழுந்ததேயாஞல் அவனேபோய்விடுவா
வாய்பேச்சுபேசவில்லை வேங்கடராயரும் [ன்
மார்பிலிருந்தபூணூலைக்காட்டிஞன் வேங்கடராயரும்
பூணூல்போட்டபிராமணனையா வேங்கடராயரும்
போட்டிருந்தபூணூலைக்கண்டான் ராசாதேசிங்கு
அவனைவிட்டு அப்பாலேபோஞன் ராசாதேசிங்கு
அரிந்தரிந்துப்போடுகிறுன் ராசாதேசிங்கு
வாலிக்கோட்டைஅவுல்தாரும் டாருய்விழுந்தானும்
மதுரைசீமைமலையாளத்தானும் ரண்டாய்விழுந்தானும்
திண்டுக்கல்லுகொலுமுகத்தானும் ரண்டாய்விழுந்தானு
நூற்றெழுபத்திரண்டுபாளையகாரன் துண்டாய்விழுந்தா
அவரைசேர்ந்தபாளையமெல்லா மடியோடுவிழுந்தாராம்
ஆனையின்மேல்தொட்டிவைத்து அவனுமிருக்கிறுனும்
நவாப்பைகண்டுசிரித்தானையா ராசாதேசிங்கு
இடதுகாலுக்குச்சிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலை தூக்கிவைத்தது யானைத்தலைமேலே

சல்-பட்டாவுருவிபோட்டானையாசிப்பாய்தேசிங்கு
முன்னேயிருந்தமாவெட்டியானும் நிலத்தில் விழுந்தானு
மாருக்குபாலாயிழுந்துப்பிடித்தான் ராஜாதேசிங்கு [ம்
அந்தவேலைக்குச்சலாம்வாங்கினான் நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராசாதேசிங்கு
நானுன்மேலேசண்டைக்குவரவில்லை ராஜாதேசிங்கு
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நான்தாரேனையா
சல்-நீஎன்னபேச்சுபேசினாயடா நவாப்புசைதுல்லா
இன்றைக்கிருக்குஞ்சமாதானம் யன்றைக்கிருக்கவேணும்
என்னுடன்வளர்ந்தசிநேகிதன்மோவுத்காரன்போனான்
எந்தன்பலமும்பாதிபோச்சுது மோவுத்துக்காரனோடே
உனக்கிசைந்தபிராணசிநேகிதன் தாவுத்துகாரன்போனா
இரண்டுசீவனுக்கென்னிடசீவன் என்னத்துக்கிருக்குது
என்கையிற்பலமிருந்தால் ஆற்காடுஎன்னுது
உன்கையிற்பலமிருந்தால் செஞ்சிகோட்டையுன்னுது
நாற்றெழுபத்திரண்டு பாளையப்பட்டு உனக்கேயானாலும்
அந்தஎழுபத்திரண்டில்சேர்ந்ததடா செஞ்சிகோட்டை
செஞ்சிகோட்டைபணமுனக்கு குறைந்துபோச்சுது
இதோ-பணம்வருகுதுவாங்கிக்கொள் நவாபுசைதுல்லா
சல்-பாலாவருகுதுவாங்கிக்கொள்ளும் நவாபுசைதுல்லா
ஈட்டிவருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
தப்பித்துகொள்ளும்தப்பித்துகொள்ளும் நவாபுசைதுல்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு [லா
முன்னங்காலைத்தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
ஆனைவயிற்றில்தொட்டில்கட்டி அவனுமிருக்கிறானும்
தொட்டிலிருந்தமாவெட்டியானும் எட்டியேபார்த்தானு
அவனுக்குமேல்கால்வைத்திருந்தது பாராசாரிகுதிரை
வலதுகாலையோங்கிவெட்டினான் மாவெட்டியானும்
வலதுகாலும்விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
மூன்றுகாலோடேகீழேவிழுந்தது பாராசாரிகுதிரை [கு
மூன்றரைநாழிகை சண்டைபண்ணுகிறான் ராஜாதேசிங்
மூவாயிரசனங்களுமங்கே டாருய்விழுந்தாராம்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைத்தூக்கிவைத்தது யானைத்தலைமேலே
இடதுகாலும்விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
நிமிஷநாழிக்குநிலையிருந்தால் நவாப்புபோய்விடுவான்

இரண்டுகாலும்விழுந்துபோனதை ராசாபார்த்தானும்
குதிரையைவிட்டுகீழேகுதித்தான் சிப்பாய்தேசிங்கு
இரண்டுகையிலும்பட்டாயுருவினான் ராசாதேசிங்கு
குதிரைவெட்டியழுதானையா ராசாதேசிங்கு
கோபம்வந்துமூண்டுக்கொண்டது ராசாவுக்கானாலும்
நவாப்புபாளையம்புகுந்தானையா சிப்பாய்தேசிங்கு
எங்கேயிருந்தசிப்பாய்மாரும் ஏகமாய்கூடினார்கள்
பதுங்கியிருந்தசிப்பாய்மாரும் பதுங்கியோடினார்கள்
கலகலகலகலகலகலவென்று கத்திசண்டைகளும்
சல்-கொக்குதிரளில் ராஜாளிபூந்தாற்போல் புகுந்துவெ
வெள்ளரிக்காய்வீசினாற்போல் வீசிபோடுகிறான் [ட்டுகிறா
டாருடாருய்தீர்த்துபோடுறான் நவாப்புபாளயத்தை
கைப்பிடியாய்பிடிக்கச்சொன்னான் நவாப்புசைதுல்லா
அதற்கவனும்பயப்படமாட்டான் சிப்பாய்தேசிங்கு
இருந்தபாளையமெல்லாம்விழுந்தது தேசிங்குகையாலே
நவாப்பின்மேலேதிரும்பினானையா ராசாதேசிங்கு
நவாப்புவோடிவொளித்தானையா நடுவானபாளயத்தில்
நடுத்தண்டிலேதெரிகுதுபாரு நவாப்புபாளயமும்
நவாப்பைச்சுற்றிவந்தானையா ராசாதேசிங்கு
கோபம் வந்துமூண்டுக்கொண்டது ராஜாவுக்கானாலும்
சல்-கொக்கரித்துதண்டில்விழுந்தான் சிப்பாய்தேசிங்கு
ஆனமட்டுஞ்சாடுகிறானையா ராசாதேசிங்கு [டேன்
நவாப்புசெனங்கள்போனவழிதை நானுஞ்சொல்லமாட்
ஆனைகுதிரைசேனையெல்லாம் அடியோடேமாண்டதாம்
மண்டிபோட்டுவுட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
இவனுக்கெதிரியாரையுங்காணோம் நவாப்பு பாளயத்தில்
என்னுயிர்வங்கைனக்கெதிரி யாரையுங்காணோமே
என்னுயிர்போவதே செஞ்சிகோட்டைக்கு நான்தான்போ
சல்திசைதிசக்கரமனுப்பும் ரங்கநாதரே [வேணு
இனிமேலிருக்கநாயமில்லை ரங்கநாதசுவாமி
கோவிந்தா நாராயணாவென்றுகும்பிட்டென்னசெய்தான்
கத்தியைச்சுழற்றி ஆகாயமெறிந்தான் ராசாதேசிங்கு
மார்பைவிரித்துமண்மேல்படுத்தான் ராஜாதேசிங்கு
அப்போமூன்றுசத்தம்போட்டானையா ராசாதேசிங்கு
ஸ்ரீகிருஷ்ணாராமாவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
ஸ்ரீரங்காவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்

ராஜாவிழுந்ததைகண்ணால்கண்டான் நவாப்புசைதுல்ல
தூக்கியெடுத்துமடியில்வைத்தான் நவாப்புசைதுல்லா

நவாப்பு தேசிங்குராஜனையெடுத்து மடிமீதில்வைத்து
விசனப்படல்

ஐயாகேளும்ஐயாகேளும்ராஜாதேசிங்கு
எண்ணாயிரங்குதிரைவெட்டினாய் அப்பாதேசிங்கு
மூவாயிரங்கோடி துரைகள்மாண்டாரே ராஜாதேசிங்கு
உயிருக்குப்பயந்துஒளித்தனடா அப்பாதேசிங்கு
உடனே திரும்பிவூருக்குப்போகாமல் ஐயாதேசிங்கு [கு
பொன்னானமேனியைபொடியாக்கிவிட்டா யப்பாதேசிங்
தங்கத்திருமேனியைதரையில்கவிழ்த்தா யப்பாதேசிங்கு
பாவி நான்வந்துபழிகாரனானேன் பாலாதேசிங்கு
உன்னைப்போலசூரத்துஒருவருமில்லை ஐயாதேசிங்கு
நீ-ஒருவனிருந்தாலுலகத்தையாள்வாய் அப்பாதேசிங்கு
நான்பாவியிருந்துபலனென்னசொல்லும் ஐயாதேசிங்கு
உலகத்தில் நிந்தனையானேன் ராஜாதேசிங்கு
மண்பூமிவேண்டாமல் பொன்பூமிபோனாயோதேசிங்கு
பொன்பூமியிலித்தனைபுகழ்நடக்குமோ ஐயாதேசிங்கு
இப்படிசொல்லியழுகிறானையா நவாப்புசைதுல்லா
கதறியெமெத்தஅழுகிறானையா நவாப்புசைதுல்லா
கனைகள்வந்துமூண்டுக்கொண்டது நவாப்புக்காறாலும்
கூடவந்தசேனைகளெல்லாம் கோவென்றழுதார்கள்
கனைகள்தெளிந்துஎழுந்துட்கார்ந்தான் நவாப்புசைது
அண்ணாவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ [ல்லா
குதிரைக்குகோரிகட்டச்சொல்லடா பங்காருநாய்க்கா நீ
கோடிதிரவியம்தானங்கொடடா பங்காருநாய்க்கா நீ
பட்டத்துபல்லக்குகொண்டுவாடா பங்காருநாய்க்கா நீ
பஞ்சணைமெத்தைபோட்டுபரப்படா பங்காருநாய்க்கா நீ
அந்தட்சணமேசெத்தானையா பங்காருநாய்க்கனும் [லா
வாரியெடுத்து மடிமீதில்வைத்தானும் நவாப்புசைதுல்
பார்த்தழுதுபல்லக்கில்வைத்தான் நவாப்புசைதுல்லா
நீயேவாடாநீயேவாடா தோன்றமல்லண்ணா [ண்ணா
செஞ்சிகோட்டைக்கு போய்விட்டுவாடா தோன்றமல்ல

தேசிங்ராஜன் இறந்ததை ராணிகேட்குதல்

அந்தச்செய்தியைகாதிலேகேட்டாள் ராணியம்மாளும்
அலங்கத்தின்மேலேறிப்பார்த்தாள் ராணியம்மாளும்

மார்புக்குகாயம்பட்டதேயானால்கோட்டைக்குவரச்சொல்
தோளுக்குகாயம்பட்டதேயானால்திரும்பி போகசொல்லு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
மாருக்குகாயம்பட்டதென்று உத்தாரங்கொடுத்தானும்
கோட்டைக்குள்ளேபுகுந்தானேயா தோன்றமல்லனும்
பல்லக்கைமிறக்கிவைத்தானேயா தோன்றமல்லனும்
சலாம்வாங்கித்திரும்பினானேயா தோன்றமல்லனும்
நவாப்புக்குவந்துசேதிசொன்னான் தோன்றமல்லனும்
தப்பிப்பிழைத்தோமென்றுசொல்லி தைரியமானாராம்
அலங்கத்தின்மேலிருந்த ராணியம்மா ளிரங்கிவந்தாளா
ஐயோதெய்வமேஎன்றுசொல்லி கதறியழுதாளாம் [ம்
ராணியம்மாளழுகிறசத்தஞ் செஞ்சியில்கேட்டது
செஞ்சிகோட்டைஜனங்களெல்லாம் வோடிவந்தார்கள்
ராஜாபக்கத்தில்வந்தாளேயா ராணியம்மாளும்

## இராணி தேசிங்குராஜனைப்பார்த்து புலம்பல்

என்னசொல்லிபுலம்புறாளேயா ராணியம்மாளும்
என்பேச்சுதடுத்துப்போனீரே எந்தன்பிராண நாதா [தா
உந்தனெழுத்துமிப்படியிருந்ததோ எந்தன் பிராண நா
அக்கினிக்குழியைவெட்டச்சொன்னாள் ராணியம்மாளும்
சந்தனகட்டைகுங்குமகட்டை சுருக்காய் போடச்சொன்
மூழுகிஸ்நானம்பண்ணினாளேயா ராணியம்மாளும் [னாள்
இனியில்லாதவுடமைபூட்டினாள் ராணியம்மாளும்
தலைநிறையபுஷ்பஞ்சூட்டினாள் ராணியம்மாளும்
ரங்கநாதரைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
பூமிதேவியைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
ஆகாயவாணியைவேண்டிக்கொண்டாள் ராணியம்மாளு
அக்கினிக்குகுழியைசுற்றிவந்தாள் ராணியம்மாளும் [ம்
கண்கள்குளிரராஜாவைப்பார்த்தாள் ராணியம்மாளும்
ராஜாவுடனேதீயில்குதித்தாள் ராணியம்மாளும்
தேவதுந்துபிமுழங்குதையாசெஞ்சிகோட்டைக்குள்ளே
புஷ்பவிமானம்வந்துநின்றது ராஜாவுக்கானாலும்
இருவருங்கூடிஏறினாரையாபுஷ்பரதந்தனிலே
புஷ்பவிமானம்வந்து நின்றது செஞ்சிகோட்டைக்குள்
வைகுந்தபதவியடைந்தாரையா ராஜனும்ராணியும்
ரங்கநாதர்பாதஞ்சேர்ந்தானேயா ராஜாதேசிங்கு

### வாழி

தேசிங்குராஜன்கதையைப்படித்தவர் செழித்துமிகவாழி
கேட்டவர்யாவரும்சம்பத்துடன் கிளைத்துமிகவாழி
புத்திரசம்பத்துடையவராய் புகழ்ச்சியுடன்வாழி
மாடுகன்றுமனைவியுமுண்டாய் மக்கள்மிகவாழி
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றங்கள் முசியாமலேவாழி
சந்திரசூரியர்களிருவருமே தழைத்துமிகவாழி
இந்திரனிந்திராணிவாழி எல்லோருமமிகவாழி
முப்பத்துமுக்கோடிதேவர் முனிவர்களும்வாழி
நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள் தாமும்மிகவாழி
அஷ்டதிக்கிலுள்ளோர் அஷ்டவசுக்களும்வாழி
சொன்னமொழிதவாறுத தேசிங்குராஜன் சுகமாய்வாழி
பலகலையுணர்ந்தபாவலர்களும் பண்பாய்மிகவாழி
சாரதாநிலயத்திலிதைப் புகழ்ச்சியாயச்சிலிட்டார்
நலமுடன்இச்சரிதைபடித்தவர்கள் நன்றாய்மிகவாழி
நீடூழிகாலமுமாக நின்றுமிகவாழி
ஊழியுலகிலுள்ளோர் உவப்பாய்மிகவாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

### வெண்பா

கதிர்மதியும்வாழி கலைகற்றமுனிவோர்வாழி
நதிகள்பலவும்வாழி நான்மறைவாழி-விதியுடனே
எல்லவரும்வாழிவிண் ணெல்லைகடந்திட்டவையன்
சொல்லவருமைம்புலமும் வாழியே.

### கலித்துறை

சீருடனே செஞ்சிநா டாண்டவனைச் செழிக்கவைத்து
ஏருடனே வாழ்குடிகளை ஆதரித் தெந்தைரங்கர்
பேருடனே துதிசெய்வர் பாதத்தைப் பிரியமாய்த்
தாருடனேசேர்தேசிங்குராஜன் சரித்திரமும்வாழியவே.

## தேசிங்குராஜன்கதை

### முற்றிற்று

சாரதா நிலையம் அச்சுக்கூடம் சென்னை.

# புஸ்தக விளம்பரம்.

இதே மாதிரி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட புஸ்தகங்கள்;—

| | | | | |
|---|---|---|---|---|
| இராமர் அஸ்வமேதயாகம் | ஷை | 4 | 8 | 0 |
| ஆதிபர்வம் | ஷை | 4 | 8 | 0 |
| விராடபர்வம் | ஷை | 3 | 8 | 0 |
| விக்கிரமாதித்தன் கதை | ஷை | 3 | 8 | 0 |
| கர்னமகாராஜன் சண்டை | ஷை | 0 | 12 | 0 |
| தேசிங்குராஜன் கதை | ஷை | 0 | 12 | 0 |
| நளச்சக்கரவர்த்தி கதை | ஷை | 1 | 4 | 0 |
| மதனகாமராஜன் கதை | ஷை | 1 | 8 | 0 |
| அல்லியரசாணிமாலை | ஷை | 1 | 0 | 0 |
| அபிமன்னன் சுந்தரி மாலை | ஷை | 1 | 0 | 0 |
| கிருஷ்ணன் தூது | ஷை | 0 | 12 | 0 |
| மதுரைவீரன் கதை | ஷை | 0 | 10 | 0 |
| ஏணியேற்றம் | ஷை | 0 | 10 | 0 |
| தருமர் அஸ்வமேதயாகம் | ஷை | 1 | 8 | 0 |
| கோவிலன் கதை | ஷை | 0 | 12 | 0 |
| சித்திராபுத்திரன் கதை | ஷை | 0 | 12 | 0 |
| துரோபதை குறம் | ஷை | 0 | 10 | 0 |
| பஞ்சவாண்டவர் வனவாசம் | ஷை | 1 | 8 | 0 |
| கருடபுராண வசனம் | ஷை | 0 | 12 | 0 |
| மயிலிராவணன் கதை | ஷை | 0 | 12 | 0 |
| ஆரவல்லி கதை | ஷை | 0 | 12 | 0 |
| பவளக்கொடி மாலை | ஷை | 0 | 12 | 0 |
| ஏகாதசி மகத்துவம் | ஷை | 0 | 10 | 0 |
| ரங்கர் மகத்துவம் | ஷை | 0 | 10 | 0 |
| சிருத்தொண்டபத்தன் கதை | ஷை | 0 | 8 | 0 |
| மின்னொளியாள் குறம் | ஷை | 0 | 8 | 0 |
| நல்லதங்காள் கதை | ஷை | 0 | 8 | 0 |
| அருணகிரியந்தாதி மூலமும் உரையும் | | 0 | 8 | 0 |
| கதிரேசன் ஆனந்தக்களிப்பு | | 0 | 8 | 0 |

விலாசம்:

ஆ. கன்னைய நாயுடு

28, ஷண்முகராயன் தெரு, மதுரை.

# நூதன புஸ்தக விளம்பரம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| தேவேந்திரநாத் பண்டிதர் இயற்றிய வாயுவேக மனோவசிய சாஸ்த்திரம் | 3 | 0 |
| கொக்கோகம் இரதி மன்மதன் திருவிளையாடல் பெரிய புத்தகம் | 4 | 0 |
| கொக்கோக நுட்பம் இரவுன் சைஸ் | 1 | 8 |
| நவீன பாலர் பாடம் | 0 | 4 |
| நவீன பாக சாஸ்த்திரம் | 0 | 12 |
| சித்தூர் தீர்ப்பு | 0 | 12 |
| அம்மைநாதன் கீர்த்தனை | 0 | 12 |
| ஸ்ரீ மகா பக்த விஜயம் 21-தாசர் | 4 | 0 |
| சோதிட ஆசான் | 1 | 8 |
| அகஸ்த்தியர் வைத்தியரத்தின சுருக்கம் மூலம்—உரை | 1 | 0 |
| ஷை பரிபூர்ணம் மூலம்—உரை | 1 | 0 |
| ஆயுள்வேத சிகிச்சாரத்தினம் என்னும் குடும்ப வைத்தியம் | 1 | 8 |
| பிழைக்கும் வழி அல்லது கைத்தொழில் அனுபவ முறைகள் | 2 | 0 |
| வன்னலார் சாஸ்த்திரம் | 1 | 8 |
| ஆர்மோனிய சுரசாகித்திய சங்கீத களஞ்சியம் | 1 | 8 |
| மதிமோச களஞ்சியம் முதல் பாகம் | 1 | 8 |
| வள்ளித் திருமணம் | 0 | 8 |
| இங்கிலீஷ் தமிழ் அரிச்சுவடி | 1 | 0 |
| அம்மன் பூஜாவி பாட்டு | 0 | 8 |
| மதுரை வீரன் பூஜை பாட்டு | 0 | 8 |
| காந்தி இந்தி தமிழ் போதினி | 0 | 5 |
| ஜாதக ரகசிய சேகரம் | 1 | 0 |
| கிராமபோன் கீர்த்தனை | 0 | 8 |
| சினிமா பபூன் பசிட்டு | 0 | 4 |
| நந்தனார் சரித்திரம் | 0 | 4 |
| அருணாசல புராணம் | 1 | 4 |
| மலையாள மாந்திரிக போதகன் | 1 | 0 |
| நவீன பால சிட்சை | 0 | 2 |

ஷண்முகானந்த புத்தகசாலை,
பார்க் டவுன், மதராஸ்.


MAHAMAHOPADHYAYA